செந்தமிழ்ப் பொழில்

ஐந்தாம் படிவம்

பொதுப் பகுதி

பொன்னு. ஆ. சத்தியசாட்சி, B.O.L.,
தமிழாசிரியர்,
ஆண்டர்சன் உயர்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்.

CLS

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

THE CHRISTIAN LITERATURE SOCIETY
(In association with the United Society for Christian Literature)
POST BOX 501, PARK TOWN, MADRAS 3
and at
MYSORE BANGALORE TIRUVALLA

S.B.
COPYRIGHT
First printed, 1955

நாட்டு வணக்கம்

ஜன கண மன அதி நாயக ஜயஹே
   பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராடா
   திராவிட உத்கல வங்கா
விந்த்ய ஹிமாசல யமுனா கங்கா
   உத்சல ஜலதித ரங்கா
தவசுப நாமே ஜாகே
   தவசுப ஆஷிஷ மாகே
காஹே தவஜய காதா
   ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
   ஜயஹே! ஜயஹே! ஜயஹே!
ஜய ஜய ஜய ஜயஹே!

முகவுரை

'செந்தமிழ்ப் பொழில்' என்னும் தமிழ்ப் பாட நூல் வரிசையுள் இஃது ஐந்தாம் படிவம் பொதுப் பகுதியினது. ஐந்தாம் படிவ மாணவர்க் கேற்ற கவிதைகளையும் கட்டுரை களையும் தாங்கி வரும் இந்நூல் அரசியலார் விடுத்துள்ள பாடத்திட்டத்தின்படி அமைக்கப்பட்டது. கட்டுரைகளும் கவிதைகளும் அரசினர் திட்டத்திற்கு அதிகமாகவே சேர்க்கப் பட்டிருத்தலின் ஆசிரியர் வேண்டுமளவுக்குப் பாடப் பகுதி களைத் தேர்ந்தெடுக்க முடியும்.

பொழில் என்பது சோலை. ஆங்கு எழிலுண்டு; இனிமை யுண்டு; பசுமை யுமிழும் மரங்களுண்டு; வண்ணம் தெறிக்கும் மலர்களுண்டு. அங்ஙனமே இந்நூலுள் மாணவர் கருத்துக்கு எழிலும் இனிமையும் வழங்கும் கட்டுரைகளும் கவிதைகளும் நிரம்பிக் கிடக்கின்றன. பழந்தமிழ் இலக்கிய இன்பத்திற்கு இந்நூல் மாணவர்களை ஈர்த்துச் செல்லும் என்பது ஒருதலை.

வேண்டுமளவுக்கு, விளக்கமாகக் குறிப்புரைகளும் வினாக் களும் கட்டுரைப் பயிற்சிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இவை யன்றி உரைநடைப் பகுதிக் கென நூலின் இறுதியில் ஓர் அருஞ்சொல் அகராதியும் அமைக்கப்பட்டுள்ளது. மாணவர் களின் சொந்த முயற்சிக்கு ஆக்கம் தரும் எல்லா வழிகளும் இந்நூலின்கண் திறந்துவிடப்பட்டுள்ளன.

இந்நூலுள் சேர்த்துக்கொள்ளக் கட்டுரைகளும் கவிதை களும் வழங்கிய பெருமக்கட்கு என் உளமார்ந்த நன்றி என் றென்றும் உரியதாகும். ஆசிரியர்கள் உரிமையாளர்கள் பெயர் களைத் தகுந்த இடங்களில் காட்டியுள்ளேன்.

இந்நூலை அச்சிட்டு வெளியிடும் பணியினை ஏற்ற பழம் பெரும் பண்ணையாகிய சென்னைக் கிறிஸ்தவ இலக்கியச் சங்கத் தார்க்கு யான் பெரிதும் கடப்பாடுடையேன்.

ஆசிரியர்களும் அரசியலாரும் இந்த நல்ல முயற்சியைப் பாராட்டி ஆதரிப்பார்களாக.

போ. ஆ. ச.

கவிதைகள்

பக்கம்

அஞ்சலி

1. தேம்பாவணி—வீரமாமுனிவர் 1
2. சற்குரு சதகம்—திருமறை வேதநாயகம் ... 1
3. தாயுமானவர் பாடல் 2
4. சீறாப்புராணம்—உமறுப் புலவர் 3
5. பொதுமை வேட்டல்—திரு. வி. க. ... 3

II. அறம்

1. திருக்குறள்—வள்ளுவனார் 5
2. நாலடியார்—சமண முனிவர்கள் 6
3. பழமொழி—முன்றுறை யரையனார் ... 7
4. அருண்மொழி—எய்ச். ஏ. கிருஷ்ண பிள்ளை ... 9

III. கதை

1. சிலப்பதிகாரம்—இளங்கோவடிகள் ... 14
2. கம்பராமாயணம் 19
3. பெரிய புராணம்—சேக்கிழார் 25
4. இரட்சணிய யாத்திரிகம்— 35
எய்ச். ஏ. கிருஷ்ணப் பிள்ளை ...
5. மான விஜயம்—வி. கோ. சூ. சாஸ்திரியார் ... 43
6. பாஞ்சாலி சபதம்—பாரதியார் 48

IV. சிறுநூல்களும் பிறவும்

1. திருவாரூர் நான்மணி மாலை—குமர குருபரர் ... 50
2. மதுரை மீனாட்சியம்மை குறம்—குமர குருபரர் 51
3. முக்கூடற் பள்ளு—என்னயினாப் புலவர் ... 52
4. புறநானூறு—பெருஞ்சித்திரனார்... ... 53
5. குறுந்தொகை—கபிலர் 54
6. மனோன்மணீயம்—P. சுந்தரம் பிள்ளை ... 55
7. சிலேடை—சொக்கநாதப் புலவர்... ... 56
8. ஒரு மருந்து—நாமக்கல் கவிஞர் 56
9. மாலைப்போது—பொ. ஆ. ச. 57

உரைநடை

பக்கம்

1. மனிதன்—
திரு. வி. க. 62

2. வெறுப்புப்பாயிரம்—
டாக்டர் உ. வே. சா. 67

3. திருக்குறள் உவமைத் திறம்—
ரா. பி. சேதுப்பிள்ளை 74

4. கீதாஞ்சலி தாகூர்—
வி. ஆர். எம். செட்டியார் 81

5. திபேத்தும் திபேத்தியரும்—
வித்துவான் ம. வி. இராகவன் ... 87

6. புலையன் தண்ணீர்—
ராஜாஜி 92

7. பெர்னாட் ஷாவின் நாடகப் புலமை—
டாக்டர் மு. வ. 97

8. நீரின்றி அமையாது உலகு—
வேலன் 106

9. பார்க்காத பார்வை—
கி. வா. ஜகந்நாதன் 110

10. கலிங்கத்துப் பரணி—
வித்துவான் தேவராஜுலு நாயுடு ... 115

11. சிலப்பதிகார நாடகம்; வஞ்சின மாலை—
அரங்க வேங்கடாசலம் பிள்ளை ... 121

அருஞ்சொல் அகராதி 125

நன்றி

தங்களுக்கு உரியனவாகிய கவிதைகளையும் கட்டுரைகளையும் இந்நூலுள் சேர்த்துக்கொள்ள இசைவு அருளிய இவர்களுக்கு எம் என்றும் மறவா நன்றி உரியதாகும்.

1. 'மான விஜயம்' : வி. எஸ். சுவாமிநாதன் அவர்கள், கல்வி நூல் பதிப்பாளர், மதுரை.

2. 'பொதுமை வேட்டல்', 'மனிதன்' : சாது அச்சுக்கூட உரிமையாளர், இராயப்பேட்டை, சென்னை.

3. 'பாஞ்சாலி சபதம்' : அரசியலார்

4. 'மனோன்மணீயம்', 'நீரின்றி அமையாது உலகு,' 'வஞ்சின மாலை' : திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 14.

5. 'ஒரு மருந்து' : நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளையவர்கள்.

6. 'வித்துவான் தியாகராச செட்டியார்' : க. சுப்பிரமணிய ஐயர், தியாகராச விலாசம், சென்னை 5.

7. 'வாரணம் பொருத மார்பன்' : பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள், B.A., B.L., சென்னை.

8. 'கீதாஞ்சலி' : 'ஸ்டார் ப்பளிகேஷன்ஸ்'; சென்னை 5.

9. 'புலையன் தண்ணீர்' : பாரதரத்தினம் ச. இராச கோபாலாச்சாரியார் அவர்கள்.

10. 'பெர்னாட் ஷாவின் நாடகப் புலமை' : டாக்டர் மு. வரதராசனார், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

11. 'பார்க்காத பார்வை' : கி. வா. ஜகந்நாதன் அவர்கள், 'கலைமகள்' ஆசிரியர், சென்னை.

12. 'கலிங்கத்துப் பரணி' : வித்துவான் தேவராஜுலு நாயுடு, காஞ்சி.

கவிதை : பொதுப் பகுதி

1. அஞ்சலி

தேம்பாவணி

[தேம்பாத அணியமைந்த பாடல்களாலாகிய நூலாதலின் 'தேம்பாவணி' எனப்பட்டது. தேன் + பா + அணி எனவும் பிரிவு செய்வர். இந்நூலாசிரியர் வீரமாமுனிவர் எனத் தமிழகம் வழங்கும் ஜோஸப் பெஸ்கி என்னும் இத்தாலியர். இவர் கிறிஸ்தவர். சமயத் தொண்டு கருதி தென்னாடு போந்த இவர் தமிழ் கற்றுப் புலவராயினர். இவரது காலம் 18-ஆம் நூற்றாண்டு.]

1. மருமலி மலர்நிழலே, மறைமலி உயர்பயனே,
திருமலி கரமுகிலே, சிவமலி தனிமுதலே,
இருமலி உலகுளரே இணையொடு தொழுமடியே,
குருமலி அறநெறியே, கொழுமல ரடிதொழுதேன்!

சற்குரு சதகம்

['சற்குரு' என இங்குக் குறிக்கப்பட்டவர் கிறிஸ்து பெருமான். சதகம் என்பது நூறு பாடல்களால் ஆகியதொரு நூல் வகை. ஆகவே 'சற்குரு சதகம்' என்பது கிறிஸ்து நாதரைப்பற்றிய நூறு பாடல்களால் ஆகிய நூல் என்க. இந்நூலின் ஆசிரியர் சென்ற நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்துவந்த திருமறையடிகள் ஜி. எஸ். வேதநாயகம் என்பவர்கள்.]

2. ஒருமகனை யிழந்தழுத விதவைகண் ணீர்துடைத்
துயிர்ப்பித்த கருணை வாரி!
ஒப்பற்ற துணையான தம்பியை யிழந்தழுத
உத்தமியர் கண்ணரு வியில்
திருவிழிகள் இன்னருவி சங்கமம் ஆகவே
செத்துநாட் சென்ற சவமே
திரும்பவுயிர் கொண்டெழ வரிய்புதி னைந்தரும்
செப்பவுயர் கிருபா நிதி!

அருமைமணி யன்னதோர் சிறுமகள் இழந்தழுத
அனைதந்தை துயர்நீங் கவே
அருண்மொழி பகர்ந்தங் கரங்கொண்டு தூக்கியங்
கவர்மடியில் வைத்த தயையே!
இருவிழிகண் மாரியுன் திருவடிகள் தோயவே
இதயார்ச்ச னைபுரி வனுன்,
இகப்பவ மகற்றியித யப்புனிதம் ஈந்தருளும்
ஏகசற் குருநா தனே!

தாயுமானவர் பாடல்

[*தாயுமானவர் சோழ நாட்டின்கணுள்ள திருமறைக்காடு என்னும் ஊரினர். இவரது தந்தையார் பெயர் கேடிலியப்பப் பிள்ளை என்பது. இவர் வேளாள மரபினர்; சிவ சமயத்தினர். இவரது காலம் 18-ஆம் நூற்றாண்டு. திருச்சிராப்பள்ளித் தாயுமான பெருமானின் திருவருளால் பிறந்தமைபற்றி இவர்க்குத் தாயுமானவர் எனப் பெயரிட்டனர் என்ப. இவருடைய பாடல்கள் எளிமையும் உருக்கமும் வாய்ந்தவை.*]

3. அங்கிங்கெ னாதபடி யெங்கும்ப்ர காசமாய்
ஆனந்த பூர்த்தி யாகி
அருளொடு நிறைந்ததெது, தன்னருள் வெளிக்குளே
யகிலாண்ட கோடி யெல்லாந்
தங்கும்ப டிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது, மனவாக் கினில்
தட்டாமல் நின்றதெது, சமயகோ டிகளெலாம்
தந்தெய்வம் எந்தெய் வமென்(று)
எங்குந்தொ டர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது,
எங்கணும் பெருவழக் காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமாய்
என்றைக்கு முள்ள தெது,மேல்
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெதுவெது,
கருத்திற் கிசைந்த ததுவே!
கண்டனவெ லாமோன வுருவெளிய தாகவுங்
கருதியஞ் சலிசெய் குவாம்!

சீறுப்புராணம்

[சீறுப்புராணம் என்பது தமிழிலுள்ள ஓர் இஸ்லாமிய காவியம். இதன் ஆசிரியர் உமறுப் புலவர் என்பவர். எட்டையபுரத்து அவைக்களப் புலவராக விளங்கினவர்.]

4. சிறந்தமெய்ப் பொருளை, அழிவிலா மணியைத்
தெரிந்துமுக் காலமும் உணர்ந்து
துறந்தவ ரிதயா சனத்திருந் தவனைத்
தொடரின்ப துன்பமற் றவனைப்
பிறந்தபல் லுயிரின் மனத்தள வுறைந்து
பிறப்பிறப் பென்றிலா தவனை
மறந்தவர் சுவர்க்கப் பதியையும் மறந்து
மண்ணினின் மதிமறந் தவரே.

பொதுமை வேட்டல்

[இந்நூலின் ஆசிரியர் தனிப்பெருந் தமிழ்த் தொண்டாற்றிய திருவாரூர் வி. கலியாணசுந்தரனாரவர்கள் ஆவார்கள். அண்மையில் இயற்கை எய்திவிட்டார்கள். சமயக் கொள்கையில் பொதுமையை விரும்பிய இவர் தம் உள்ளுணர்ச்சியே இந்நூல் எனலாம்.]

5. மெய்ப்பொருளே உன்னடியில் மேவுமனம் வேண்டும்
மெய்யோம்பி நிறைபேணல் மீக்கூரல் வேண்டும்
எப்பொருளும் உன்னுடைமை என்னுமெண்ணம் வேண்டும்
எப்பொழுதும் இயற்கையிலே இசையுமுளம் வேண்டும்
தப்புவினை வினைபுரியாத் தவம்பெருகல் வேண்டும்
தவறிழைத்தால் கசிந்துருகும் தன்மைமிகல் வேண்டும்
இப்புவியில் இகல்பகைகள் இயங்காமை வேண்டும்
எவ்வுயிரும் பொதுவெனக்கொள் இயல் வேண்டும் அருளே.

அருஞ்சொல் : குறிப்புரை

1. தேம்பாவணி: மரு - மணம்: காமுகில் - முகில் கரம் - மேகத்தைப் போன்ற கரம். சிவம் - நன்மை. இருமலி உலகுளர் - வானுலகும் பூவுலகும் ஆகிய இரண்டு உலகத்தார். குரு - குருத்தன்மை. மலிதல் - மிகுந்திருத்தல்.

2. சற்குரு சதகம்: விதவை: 'நாயீன்' என்றோர் ஊரில் வாழ்ந்தவள். உத்தமியர் மார்த்தாள் மரியாள் என்ற இருவர் சோதரிகள். அவர்தம் தம்பி 'லாசரு' என்பான். புதினம் - அற்புதம். சிறுமகள்: 'யயீரு' என்பான் ஒருவனின் மகள்.

3. தாயுமானவர் பாடல்: இறைவனது அருளாகிய வெளிக்குள்ளே அகிலாண்டங்கள் தங்கியிருக்கின்றன. அகில அண்டங்கள் - சகல உலகங்களும். தட்டாமல் - இசையாமல், அதீதமாக. பெரு வழக்கு - அப்பொருளைப்பற்றிய வெவ்வேறு கொள்கையினால் ஏற்படும் வழக்கு. சித்து - அறிவு. 'கல்லும் பசும் அற நின்ற எல்லை'யாவது வீட்டுலகம். இசைந்தது - ஒப்ப முடிந்தது. 'கண்டன வெல்லாம் அதுவே' என்க. மோன உரு வெளியது ஆகவும் கருதி - அம்மெய்ப் பொருளை மௌன ரூப வெளிப் பாடாகவும் தியானித்து.

வினாக்கள்

1. வீரமாமுனிவர், தாயுமானவர்—குறிப்பு எழுதுக.

2. வீரமாமுனிவர் இறைவனுடைய அருள் திறத்தினை எவ்வாறு பாடுகின்றார்?

3. 'சதகம்' என்பது என்ன?

4. கிறிஸ்துநாதர் ஆற்றியனவாகச் 'சற்குரு சதகப்பாடல்' எவ்வெவற்றைச் சொல்லுகின்றது?

5. சற்குரு சதக ஆசிரியர் இறுதியாக வேண்டுவதென்னை?

6. கடவுட் பொருளின் தன்மைகளாகத் தாயுமானுர் சொல்லுவன யாவை?

7. 'எங்கணும் பெரு வழக்காய்'—இதனை விளக்குக.

8. 'பல்லுயிரின் மனத்தளவு' உறைதலாவது யாது?

9. இறைவனை மறந்தார் எவ்வெவற்றை மறந்தார்?

10. திரு. வி. க. அவர்கள் இறைவர்பால் வேண்டுவன யாவை?

11. கோடிட்ட சொற்களுக்குச் சொல்லிலக்கணம் அல்லது தொகை யிலக்கணம் தருக.

(1) மறைமலி உயர் பயன்.

(2) குருமலி அறநெறியே.

(3) உத்தமியர் கண்ணருவி.

(4) அவர் மடியில் வைத்த தயையே.

(5) இகல் பகைகள் இயங்காமை வேண்டும்.

II. அறம்

1. திருக்குறள்

ஊக்கமுடைமை

[*"அஃதாவது – மனம் மெலிதலின்றி வினை செய்தற்கண் கிளர்ச்சியுடைத்தாதல்" – பரிமேலழகர்.*]

1. உடைய ரெனப்படுவ தூக்கமஃ தில்லார்
உடைய துடையரோ மற்று.

2. உள்ளம் உடைமை யுடைமை; பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

3. ஆக்கம் இழந்தேமென் றல்லாவார் ஊக்கம்
ஒருவந்தங் கைத்துடை யார்.

4. ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையா னுழை.

5. வெள்ளத் தனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு.

6. உள்ளுவ தெல்லா முயர்வுள்ளல்; மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

7. சிதைவிடத் தொல்கார் உரவோர்; புதையம்பிற்
பட்டுப்பா டூன்றுங் களிறு.

8. உள்ள மிலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னுஞ் செருக்கு.

9. பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

10. உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு.

குடிசெயல் வகை

["அஃதாவது — ஒருவன் தான் பிறந்த குடியை யுயரச் செய்தலின் திறம்." — பரி.]

1. கருமஞ் செயவொருவன் கைதூவேன் என்னும்
பெருமையிற் பீடுடைய தில்.

2. ஆள்வினையும் ஆன்ற வறிவும் எனவிரண்டின்
நீள்வினையா னீளுங் குடி.

3. குடிசெய்வல் என்னு மொருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.

4. சூழாமற் றானே முடிவெய்தும் தங்குடியைத்
தாழா துஞற்று பவர்க்கு.

5. குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

6. நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
வில்லாண்மை யாக்கிக் கொளல்.

7. அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை.

8. குடிசெய்வார்க் கில்லைப் பருவம், மடிசெய்து
மானங் கருதக் கெடும்.

9. இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ, குடும்பத்தைக்
குற்ற மறைப்பா னுடம்பு.

10. இடுக்கண்கால் கொன்றிட வீழும், அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி.

2. நாலடியார்

['நாலடி' என்பது வெண்பா. அது கருவியாகு பெயராக நூலைக் குறித்தது. 'ஆர்' என்பது நூலின் பெருமையுணர்த்தும் ஒரு விகுதி. இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இதற்கு 'நாலடி நானூறு' 'வேளாண் வேதம்' என வேறு பெயர்களும் உண்டு. இதனைப் போப் ஐயரவர்கள் ஆங்கிலத்தில் பெயர்த்துள்ளார்கள்.

கடைச் சங்க காலத்தில் வாழ்ந்த சமண முனிவர் பலர் இந்நூற் பாக்களை இயற்றினர். பதுமனார் என்பார் இந்நூலைத் தொகுத்தார்.]

கல்வி

1. இம்மை பயக்குமால்; ஈயக் குறைவின்றால்;
தம்மை விளக்குமால்; தாமுளராக் கேடின்றால்;
எம்மை உலகத்தும் யாம்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து.

2. வைப்புழிக் கோட்படா; வாய்த்தீயிற் கேடில்லை;
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்;
எச்சம் எனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற.

ஈயாமை

3. உண்ணான் ஒளிநிறான் ஓங்குபுகழ் செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல், அஆ!
இழந்தான்என் றெண்ணப் படும்.

4. உடாஅதும் உண்ணாதும் தம்முடம்பு செற்றுங்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார்—கொடாஅது
வைத்தீட்டி னாரிழப்பர்; வான்தோய் மலைநாட,
உய்த்தீட்டுந் தேனீக் கரி.

அறிவு

5. கடல்சார்ந்தும் இன்னீர் பிறக்கும்; மலைசார்ந்தும்
உப்பீண் டுவரி பிறத்தலால் தத்தம்
இனத்தனையர் அல்லர், எறிகடல்தண் சேர்ப்ப,
மனத்தனையர் மக்களென் பார்.

3. பழமொழி

[ஒவ்வொரு பாட்டிலும் ஒவ்வொரு பழமொழி அமைக்கப்பட்ட நானூறு வெண்பாக்களால் ஆன நூல் இது. இதற்குப் பழமொழி நானூறு என்றும் பெயர் வழங்கும். இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

இந்நூலின் ஆசிரியர் முன்றுறை யரையனார் என்பவர். முன்றுறை என்னும் ஊருக்கு இவர் அரசராக இருந்தனராதல் வேண்டும். இவரது சமயம் சமணம். காலம் கடைச்சங்க காலம்.]

புலமை யறிதல்

1. புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனாம்;—நலமிக்க
பூம்புனல் ஊர! பொதுமக்கட் காகாதே;
பாம்பறியும் பாம்பின கால்.

குல வித்தை

2. உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன்; குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்.

சான்றாண்மை

3. முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
தொல்லை யளித்தாரைக் கேட்டறிதும்—சொல்லின்
நெறிமடற் பூந்தாழை நீடுநீர்ச் சேர்ப்ப!
அறிமடமும் சான்றோர்க் கணி.

அடக்கமுடைமை

4. கற்றறிந்தார் கண்ட அடக்கம்; அறியாதார்
பொச்சாந்தும் தம்மைப் புகழ்ந்துரைப்பர்—தெற்ற;
அறைகல் அருவி அணிமலை நாட!
நிறைகுடம் நீர்தளும்ப லில்.

செய்ந்நன்றி யறிதல்

5. நன்கொன் றறிபவர் நாழி கொடுப்பவர்க்
கென்றும் உறுதியே சூழ்க; எறிதிரை
சென்றுலாம் சேர்ப்ப! அதுபோல நீர்போயும்
ஒன்றிரண்டாம் வாணிக மில்.

4. அருண்மொழி

[இப்பாடல்களுள் கிறிஸ்து பெருமானின் அருண்மொழிகளுள் சில அடங்கியுள்ளன. மகா வித்துவான் கிருஷ்ண பிள்ளை யவர்களின் காவியமாகிய இரட்சணிய யாத்திரிகத்திலிருந்து இவை கொள்ளப்பட்டவை.]

தருமஞ் செய்தல்

1. திருகை ஞாலத்துப் புகழ்பெற‌ச் செயுந்தரு மத்தில்
வருகை யொன்றிலை மறுமையின்; புகழ்மதி யாதிங்(கு)
ஒருகை செய்வதை மறுகையுற் றறிகிலா துளுற்றில்
பெருக மாண்பயன் அளிப்பர்நும் பிதாவுள மகிழ்ந்தே.

மன்னித்தல்

2. செறுத்து மக்குமற் றவர்செயுந் தீமையைச் சிந்தை
நிறுத்தி டாதுமன் னிப்பிரேல், நீர்செய்தீ மைகளும்
பொறுத்து மக்குமன் னித்தருள் புரிவர்பூ தலமுற்(று)
ஒறுத்தி டற்கதி காரியாம் உன்னதத் தரசன்.

கேட்போர்க்குச் சொல்லும் நன்மொழி

3. அரிய நித்திலக் கோவைநீர் பன்றிமீ தணியில்
தெரிகி லாததன் அருமையைச் சீரழித் திடுமால்;
உரிய மாண்பரி சுத்தவூண் குக்கல்முன் உய்த்துச்
சொரிய கிற்பினும் அன்னதாம் என்பது துணிமின்.

மேன்மக்கள் கடன்

4. ஈர நீருல கத்தினுக்(கு) உப்பென இயைவீர்;
சோர விட்டிடா(து) உலகரைத் தூயநல் லொழுக்கால்
சாரம் ஏற்றுமின்; அன்றெனின் தள்ளுண்டு மிதிபட்(டு)
ஆரும் வையகத் தவமதிப் படைவிரீ தறிமின்.

அருட்செல்வமும் பொருட்செல்வமும்

5. அருளின் செல்வமே செல்வத்துட் செல்வமற்
றதனைத்
தெருளுஞ் செல்வரே யுன்னத நித்திய செல்வர்;
பொருளின் செல்வநீர்த் திரையவாம்; மற்றவை
போற்றி
மருளும் பூரியர்க் குறுவது நித்திய வறுமை.

குறிப்புரைகள்: திருக்குறள்

ஊக்கமுடைமை

1. "உடையதும்" எனற்பாலது "உடையது" என உம்மை தொக்கது. ஓ: எதிர்மறை.

2. உள்ளம் – ஊக்கம் (இடவாகு பெயர், உள்ளமாகிய இடத்தில் ஊக்கம் தோன்றலால்.)

3. அல்லாவார் – அலமரார். அல்லாத்தல் – துன்பமுறுதல். அல்லாவார்: எதிர்மறைத் தெரிநிலைப் பலர்பால் வினைமுற்று. அல்லா: பகுதி. "ஆ" எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது. ஒருவந்தம் – நிலைபேறு. "ஒருவந்தமாகிய ஊக்கம்" என்க.

4. அதர் – வழி. வினவ்: வினையெச்சம். உடையானுழை – உடையான் மாட்டு.

5. வெள்ளம் – நீர். உள்ளம் – ஊக்கம். மலர்: கொடிக்கு ஆகு பெயர். ஒப்பனையையும் உண்மையையும் தனித்தனியே நிறுத்தி இடையில் ஒப்பனையுருபு தாராமல் அமைக்கப்பட்டதால் இக்குறள் எடுத்துக்காட்டுவமை யணி.

6. தள்ளினும் – ஒழியினும், கூடிற் றில்லை யாயினும். தள்ளாமை நீர்த்து – ஒழியாத நிலைமையினை, கூடிய நிலைமையினை யுடையது. நீர்த்து: நீர்மை என்னும் பண்பினடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று.

7. "களிறு புதை அம்பின் பட்டுப் பாடு ஊன்றும்" என்க. புதை – அம்புக் கட்டு. அம்பின் – அம்பினால். பட்டு – புண்பட்ட விடத்து. பாடு ஊன்றும் – தன் பெருமையை நிறுத்தும். ஒல்கார் – தளரார். எடுத்துக் காட்டுவமை யணி.

8. வள்ளியம் – வண்மை யுடையேம்.

9. பரியது – பெரிய உடம்பினது. கோடு – கொம்பு, தந்தம். வெரூஉம் – அஞ்சும். கூர்ங்கோடு: பண்புத்தொகை. இங்கு உண்மையைக் கூறாமல் ஒப்பனையை மாத்திரம் கூறி உண்மையைப் பெற வைத்ததால் இக்குறள் பிறிதுமொழிதல் அணி.

10. உள்ள வெறுக்கை – ஊக்க மிகுதி. அஃது – அவ்வூக்கத்தின் மிகுதி. "அஃது இல்லார் மரம்" என்க. சாதி மரங்களுக்கும் இவர்களுக்கும் வேறுபாடு மக்கள் வடிவே என்க. முதற்கண் ஒப்புமை கூறிப் பின் ஒரு வேற்றுமையும் தோன்ற வைத்ததால் இக்குறள் வேற்றுமையணி.

குடிசெயல் வகை

1. கைதூவேன் – கையொழியேன், கை விட்டிடேன். (கை தூவு: பகுதி.) பெருமையின் – பெருமை போல. பீடு – பெருமை.

2. ஆள்வினை – முயற்சி. இரண்டின் - இரண்டினையு முடைய. நீள் வினையான் குடி நீளும் – இடையறாத செயலால் குடி உயரும்.

3. குடி செய்வல் – குடியினை உயரச் செய்வேன். மடி – ஆடை. தற்று – உடுத்து.

4. தம் குடி – தம் குடியை உயரச் செய்வதற்குக் காரணமாகும் வினை. தாழாது – தாழ்க்காமல், விரைந்து. உஞற்றுதல் – முயலல். சூழாமல் – ஆலோசியாமல், கருதாமல். "தம் குடிக்கு ஆம் வினையை விரைந்து முயல்வார்க்கு (அவ்வினை முடித்தற்குத் திறம்) அவர் சூழ வேண்டாமல் தானே (இறையருளால்) முடிவு எய்தும்" என்க.

5. சுற்றம் – சூழும்.

6. இல் ஆண்மை – தன் குடியினை ஆளுந் தன்மை. அஃதாவது, குடியிலுள்ளாரை உயரச் செய்து தன்வழிப்படுத்தல்.

7. "அமரகத்து வன்கண்ணர் மேற்றே போல, தமரகத்தும் பொறை (அதனை) ஆற்றுவார் மேற்றே" என்க. வன்கண்ணர் – அஞ்சாத மெய் வீரர். தமர் அகம் – தம் குடியின்கண். பொறை – பாரம் பொறுத்தல். உவமையணி.

8. மடி செய்தல் – சோம்பியிருத்தல். கெடும் – குடி கெடும். பருவம் இல்லை – வெயில் மழை பனி என்பன இல்லை.

9. குடும்பத்தைக் குற்றம் மறைப்பான் – குடிக்குத் துன்பம் உறாமல் காக்க முயல்பவன். அது செய்வானுக்குத் துன்பம் (பொறை) வருதல் இயல்பாயினும் அதனால் அவனுக்கு இருமையின்பமும் உண்டு. இக்குள்ளவினை "இன்பமே யுடைத்து" எனக் குறிப்பாயுணர்த்துவது குறிப்பு மொழி.

10. கொன்றிட – வெட்டிச் சாய்க்க. நல் ஆள் – நல்ல ஆண் மகன். இங்கு, இடுக்கண்ணைக் கோடரியாகவும் குடியை மரமாகவும் ஊகிக்குமாறு வைத்தது குறிப்புருவகம்.

நாலடியார்

1. விளக்கும் – விளங்கச் செய்யும். தாம் உளர் ஆ, கேடு இன்று – தம்மை உளர் ஆம்படிச் செய்து கேட்டினை இன்மை யாக்கும். மம்மர் – மயக்கம்.

2. வைப்புழி கோள்படா – வைத்த இடமாகிய மனத்திலிருந்து பிறரால் கொள்ளப்படா. வாய்த்து ஈயின் கேடு இல்லை. செறின் – கோபித்தால். விச்சை – வித்தை (இது போலி).

3. "உண்ணுன்" முதலியன எச்சங்கள். இழந்தான் – காலவழுவமைதி. அ ஆ – இரக்கக் குறிப்பு.

4. செற்றும் – வருத்தியும். வைத்திட்டினர் – ஈட்டி வைத்தார், தேடி வைத்தவர். உய்த்து – கொடுத்து. கரி – சாட்சி. உடாஅதும், கெடாஅத, கொடாஅது: செய்யுளிசை யளபெடைகள். வான்தோய் மலைநாட: ஆடூஉ முன்னிலை.

5. சேர்ப்பன்: நெய்தல் நிலத் தலைவன்; ஆடூஉ முன்னிலை. உப்பு நன்கு உவரி – உப்பு நிறைந்த உவர் நீர். உவமை யணி.

பழமொழி

1. புலம் – புலமை; அறிவு.

2. சோழன் – கரிகாலன். ஒரு சமயம் வழக்குரைப்பான் வேண்டி அரசவைக்குச் சென்ற முதியோர் சிலர் அரசனின் (கரிகாலனின்) இளமை கண்டு தயங்கித் திரும்பினராகவும், கரிகாலன் அவர்களை இருக்கச் செய்து, தான் அரசரை அழைத்து வருவதாகச் சொல்லி, உட்சென்று, தானே நரை முதலியன முடித்து முதுமை வேடம் தாங்கித் திரும்பி வந்து திறம்பட வழக்குரைத்தான் என்பது வரலாறு.

விச்சை – வித்தை.

3. தேரீந்தவன் பாரி. போர்வை போர்த்தவன் பேகன். நெறிமடல் – நிமிர்ந்த மடல். சேர்ப்பன் – நெய்தல் நிலத் தலைவன். அறிமடம் – அறிந்தும் அறியாது போன்றிருத்தல்.

4. பொச்சாந்து – தம்மை மறந்து. தெற்ற புகழ்ந் துரைப்பர் – தெளிவாகப் புகழ்ந் துரைப்பர். அறைகல் அருவி – ஒலி செய்கின்ற கற்களினூடே செல்லும் அருவி.

5. நாழி: முகத்தலளவை யாகுபெயர். உறுதி – நன்மை. நீர் போயும் – கடல் கடந்து சென்றும்.

அருண்மொழி

1. திருகை ஞாலம் – குற்றம் (வஞ்சகம்) பொருந்திய உலகம். உஞற்றில் – செய்தால். பிதா – இறைவர்.

2. செறுத்து – சினந்து. ஒறுத்திடற்கு அதிகாரி – இறைவர். ஒறுத்தல் – தண்டித்தல்.

3. நித்திலக் கோவை – முத்துமாலை. குக்கல் – நாய். 'சிறந்த அறவுரைகளை அவைகளை ஏற்றுக்கொள்ளாத இழிஞரிடம் சொல்லுதல் வேண்டா' என்பது இச்செய்யுளில் வந்துள்ள உவமைகளின் உவமேயம். இச்செய்யுள் பிறிது மொழிதல் அணி.

5. தெருள் – அறிவு. நீர்த்திரை – நீரில் தோன்றும் அலை. பூரியர் – கீழ்மக்கள்.

வினாக்கள்

குறள்

1. ஊக்கம் உடைமையின் சிறப்பினைக் குறிக்க.

2. ஆக்கத்துக்கும் ஊக்கத்துக்கும் உள்ள தொடர்பினை வள்ளுவனார் எவ்வாறு கூறுகின்றார்?

3. எல்லாம் உயர்வுள்ளலால் கிடைக்கும் பயன் யாது?

4. 'வெள்ளத்தனைய மலர் நீட்டம்'—இவ்வொப்பினைக்கு நின்ற உண்மை யாது?

5. ஊக்கம் இல்லாதார் எய்தும் தாழ்வினைப் புலப்படுத்துக.

6. 'பரியது' என்று தொடங்கும் குறளுக்குப் பொருள் எழுதி அணியும் கூறுக.

7. 'அஃது இல்லார் மரம்; மக்கள் ஆதலே வேறு'—விளக்குக.

8. குடிசெயும் ஒருவன் எய்தும் நன்மைகளைத் தொகுத்துரைக்க.

9. ஒரு குடியின் பெருமை நீள்வது எங்ஙனம்?

10. 'அமரகத்து' என்று தொடங்கும் குறளின் பொழிப்புரை தருக.

11. தெய்வம் மடி தற்று முந்துறுவ தெதற்கு?

12. 'இடும்பைக்கே கொள்கலம்,' 'இடுக்கண்கால் கொன்றிட வீழும்'—எவை?

13. இச்சொற்களின் பகுதிகள் யாவை?

நில்லாது, ஆக்கம், அல்லாவார், வினாய், ஒல்கார், கைதூவேன், கொளல், பொறை, வீழும்.

14. எடுத்துக்காட்டுவமை யணி, உவமை யணி, வேற்றுமை யணி ஆயவற்றிற்கு இப்பகுதியிலிருந்து உதாரணங்கள் காட்டுக.

நாலடியார்

15. கல்வியின் சிறப்பு எவ்வாறு கூறப்பட்டது?

16. இழந்தான் என்றெண்ணப் படுபவன் யாவன்?

17. 'உய்த்து ஈட்டும் தேனீக் கரி' – விளக்குக.

18. 'மக்கள் தம் மனத்தனையர்' என்பதற்குக் காட்டப்பட்ட உவமைகள் யாவை?

19. இலக்கணப் பெயர் தருக.

(அ) யாம் காணேம்.

(ஆ) உண்ணான் ஒளிநிறான் ஓங்குபுகழ் செய்யான்.

(இ) உடாஅதும் உண்ணாதும்.

பழமொழி

20. பழமொழி: குறிப்பு எழுதுக.

21. பூம்புனல் ஊரனுக்குச் சொல்லப்பட்ட அறிவுரை யாது?

22. 'குலவிச்சை கல்லாமல் பாகம் படும்,' 'அறிமடமும் சான்றோர்க்கு அணி'—இம்மொழிகளுக்குக் காட்டப்பட்ட சான்றுகள் யாவை?

23. கற்றறிந்தார், அறியாதார் இவர்தம் செயல்கள் யாவை?

24. 'நன்கொன்று' என்று தொடங்கும் செய்யுளுக்குப் பருப்பொருள் தருக.

25. ஆகுபெயர், முன்னிலை, வினையாலணையும் பெயர், வினைத்தொகை, ஆகுபெயர் இவற்றிற்கு இப்பகுதியிலிருந்து உதாரணம் தருக.

அருண்மொழி

26. ஒரு கை செய்வதை மறு கை அறிகிலாது தருமஞ் செய்தலாவது யாது?

27. மற்றவர் செய்யும் தீமைகளை மன்னிப்பார்க்கு எய்தும் பலன் யாது?

28. 'அரிய தித்திலக் கோவை' என்று வரும் பாடல் என்ன அணி? எங்ஙனம்?

29. ஒருவர் உலகத்துக்கு உப்பாவது எங்ஙனம்?

30. அருட்செல்வர்க்கும் பொருட்செல்வர்க்கும் உள்ள வேறுபாடு யாது?

31. மாண் பயன், தித்திலக் கோவை, எற்றுமின்—இலக்கணக் குறிப்பு எழுதுக.

III

கதை

1. சிலப்பதிகாரம்—துன்ப மாலை

[முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரம் தமிழிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகும். சிலம்பு காரணம்பற்றி நிகழ்ந்த கதையாதலின் இஃது இப்பெயர் பெற்றது. சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம்.

இக்காப்பியத்தின் ஆசிரியர் இளங்கோ வடிகள் என்பார் சேரன் செங்குட்டுவனின் இளவல். இவர்தம் சமயம் சமணம். மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனாரும் இவரும் நெருங்கிய நட்பினரா யிருந்திருத்தல் வேண்டும்.

காவிரிப்பூம்பட்டினத்தில், கோவலன் என்பான் மாதவி என்னும் நாடகக் கணிகையின்பால் தன் பொருளெலாம் இழந்து, அவளைப் பிரிந்து, தன் மனையாள் கண்ணகியொடு பாண்டி நாடு புக்கு, ஒரு சிலம்பு விற்பான் வேண்டி மதுரையின்கண் ஹுற்றபோது கள்வனெனக் கொலை செய்விக்கப்

படவும், கனன்ற கண்ணகி மதுரை மா நகரினைத் தீயுண்ணச் செய்து, சேர நாடு புக்கு, ஒரு மலை மீதிவர்ந்து துறக்கம் புக்கனள் என்பது சிலப்பதிகார வரலாறு.

'துன்ப மாலை' மதுரைக் காண்டத்து ளுள்ளது. கண்ணகி தங்கியிருந்த ஆயர்பாடியில் தீச்சகுனங்கள் தோன்றவும், அவை நீங்க அப்பாடிப் பெண்கள் குரவைக் கூத்தெடுத்து முடிந்த பின்றை, மதுரைக்கண் சென்றிருந்தா ளொருத்தி, கோவலனுக்கு உற்றதை யறிந்தவள், ஓடிவந்து உற்றது சொல்லுகின்றனள். கண்ணகி பலவாறு கலங்குகின்றனள். இதனைச் சொல்லும் பகுதி 'துன்பமாலை' எனப்பட்டது. அவலச்சுவை மிக்கது.]

ஆங்கு:

ஆயர் முதுமகள் ஆடிய சாயலாள்
பூவும் புகையும் புனைசாந்துங் கண்ணியும்
நீடுநீர் வையை நெடுமா லடியேத்தத்
தூவித் துறைபடியப் போயினாள், மேவிக்
குரவை முடிவிலோர் ஊரரவங் கேட்டு
விரைவொடு வந்தாள் உளள்;

அவள்தான்,

சொல்லாடாள் சொல்லாடாள் நின்றாள்அந் நங்கைக்குச்
சொல்லாடும் சொல்லாடுந் தான்.

எல்லாவோ,

காதலற் காண்கிலேன் கலங்கிநோய் கைம்மிகும்,
ஊதுலை தோற்க உயிர்க்கும்என் நெஞ்சன்றே,
ஊதுலை தோற்க உயிர்க்கும்என் நெஞ்சாயின்
ஏதிலார் சொன்ன தெவன்வாழி யோதோழீ!
நண்பகற் போதே நடுக்குநோய் கைம்மிகும்,
அன்பனைக் காணாது அலவும்என் நெஞ்சன்றே,
அன்பனைக் காணாது அலவும்என் நெஞ்சாயின்
மன்பதை சொன்ன தெவன்வாழி யோதோழீ!

தஞ்சமோ, தோழீ! தலைவன் வரக்காணேன்;
வஞ்சமோ உண்டு, மயங்குமென் நெஞ்சன்றே,
வஞ்சமோ உண்டு மயங்குமென் நெஞ்சாயின்
எஞ்சலார் சொன்ன தெவன்வாழி யோதோழீ!

சொன்னது:

அரசுறை கோயில் அணியார் ஞெகிழம்
கரையாமல் வாங்கிய கள்வனாம் என்றே,
கரையாமல் வாங்கிய கள்வனாம் என்றே
குரைகழல் மாக்கள் கொலைகுறித் தனரே,

எனக்கேட்டு,

பொங்கி எழுந்தாள், விழுந்தாள், பொழிகதிர்த்
திங்கள் முகிலோடுஞ் சேண்நிலங் கொண்டெனச்
செங்கண் சிவப்ப அழுதாள்,தன் கேள்வனை
எங்கணா என்னா இனைந்தேங்கி மாழ்குவாள்;
இன்புறு தங்கணவர் இடரெரி யகமூழ்கத்

துன்புறு வனநோற்றுத் துயருறு மகளிரைப்போல்
மன்பதை அலர்தூற்ற மன்னவன் தவறிழைப்ப
அன்பனை இழந்தேன்யான் அவலங்கொண் டழிவலோ?
நறைமலி வியன்மார்பின் நண்பனை இழந்தேங்கித்
துறைபல திறமூழ்கித் துயருறு மகளிரைப்போல்

மறனொடு திரியுங்கோல் மன்னவன் தவறிழைப்ப
அறனெனும் மடவோய்!யான் அவலங்கொண் டழிவலோ?
தம்முறு பெருங்கணவன் தழலெரி யகமூழ்கக்
கைம்மைகூர் துறைமூழ்குங் கவலைய மகளிரைப்போல்
செம்மையின் இகந்தகோல் தென்னவன் தவறிழைப்ப

இம்மையும் இசையொரீஇ இனைந்தேங்கி
அழிவலோ?

காணிகா,

வாய்வதின் வந்த குரவையின் வந்தீண்டும்
ஆய மடமகளிர் எல்லீருங் கேட்டீமின்!
ஆய மடமகளிர் எல்லீருங் கேட்டைக்க!

பாய்திரை வேலிப் படுபொருள் நீயறிதி
காய்கதிர்ச் செல்வனே! கள்வனோ என்கணவன்?
"கள்வனோ அல்லன், கருங்கயற்கண் மாதராய்!
ஒள்ளெரி யுண்ணுமிவ் வூர்" என்ற(து) ஒருகுரல்.

குறிப்புரை

2. ஆடிய சாயலாள் – அசைந்த சாயலையுடையவள். "சாயலானாகிய ஆயர் முதுமகள்" என்க. இவள் மாதரி. கண்ணகிக்கு உறையுள் ஈந்து போற்றியவள்.

3. புகை – புகைதரக்கூடியது. கண்ணி – மாலை.

5. போயினள் - போயினளாகவும்.

6. ஊர் அரவம் – நகரத்தில் (மதுரையில்) பிறந்ததொரு சொல்.

7. வந்தாள் உளள் – ஒருத்தி வந்தாள்.

9. அக்கல்லை – கண்ணகி. வந்தவள் செய்தியினைச் சொல்ல முடியாமல் நின்றாள் என்க.

10. தான் – கண்ணகி. சொல்லாடும் – கூறுகின்றாள்.

11. எல்லாவோ – தோழீ.

13, 14. வந்த அடியே மீண்டும் வருவது மடக்கு என்னும் அணி. இங்கு வந்தது இடையீரடி மூன்றுமடக்கு என்பது. மேலும் வரும்.

15. ஏதிலார் – அயலார். வாழி: முன்னிலை யசை. ஓ: இரக்கக் குறிப்பு.

17. அலவும் – வருந்துகின்றது. 19. மன்பதை – அயலார்.

21. வஞ்சமோ உண்டு – என் தலைவனை வஞ்சகம் செய்த செயலொன்றுள்ளது.

23. எஞ்சலார் - அயலார்.

24. சொன்னது – தோழி சொன்னது.

25. ஞெகிழம் – சிலம்பு.

26. கரையாமல் வாங்கிய—சிறிது ஓசையுமின்றிக் கவர்ந்த.

27. கரைதமல்: வினைக்கோகை.

31. சேண் நிலம் – பெரிய நிலம்.

30, 31. உவமை யணி.

33. எங்கண் ஆ – எங்கணை – நீ எவ்விடத்திலிருக்கிறாய். என்னை: 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

34, 35. உவமை யணி: கணவர் எரியகம் மூழ்க, அவரோடு தாமும் மூழ்காமல், துன்பந்தரும் கைம்மை நோன்பினை நோற்று வருந்தும் மகளிரைப்போல்.

37. அழிவலோ: ஓகாரம், 'அழியேன், இதற்குப் பழி வாங்கியே தீர்வேன்' என்பது உணர்த்திநிற்றது.

38. கறை – மணம். கண்பன் -- கணவன்.

39. துறை பல திறம்: பல திறம் துறை – பல திறத்தனவாகிய நீர்த் துறைகள்.

41. அறனெனும் மடவோய் – அறக் கடவுள் என்னும் அறிவற்றோயே.

45. இசை ஒரீஇ – புகழை விட்டு.

46. காணிகா: 'இக' முன்னிலை அசை; 'இகா' எனத் திரிந்தது. 'காண்பாயாக' என்பது பொருள்.

47, 48, 49. நீர் சகுனங்கள் நீங்குதல் வாய்க்கப் பெறுவதற்கு எடுத்த குரவைக் கூத்தினுள் கலந்துகொண்ட ஆய குலப் பெண்களே, கேட்பீர்களாக.

கேட்டைமின் – கேண்மின்; வினைத் திரிசொல். கேட்டைக்க – கேட்க; 'கேட்டை' என்னும் வினையசைச்சொல் வியங்கோள் விகுதி யேற்றது.

50, 51. செல்வனே, இவ்வுலகத்தே நிகழ்கின்றன அத்தனையும் நீ அறிவாய்; ஆதலால் உன்னைக் கேட்கிறேன். பாய்திரை வேலி – உலகம்.

வினாக்கள்

1. சிலப்பதிகார ஆசிரியரைப்பற்றித் தெரியு மளவுக்கு வரைக.
2. கீழ்வரும் தொடர்களுக்குப் பொருள் தருக:

(அ) 'ஊரரவம் கேட்டு விரைவொடு வந்தாள் உளள்'

(ஆ) 'அரசுறை கோயில் அணியார் ஞெகிழம், கரையாமல் வாங்கிய கள்வனும்'

(இ) 'மண்பதை யலர்தூற்ற மன்னவன் தவறிழைப்ப, அன்பனை இழந்தேன் யான் அவலங்கொண் டழிவலோ?'

(ஈ) செம்மையின் இகந்த சொல் தென்னவன்.

3. ஊரரவம் கேட்டுவந்த தோழியினிடம் கண்ணகி புலந்து கேட்டனவற்றை நும் சொந்த சொற்களில் தொகுத் துரைக்க.
4. "கொலை குறித்தனர்" எனத் தோழி சொற்றமைக்குக் காரணம் என்னை?
5. 'திங்கள் முகிலொடுஞ் சேண் நிலங் கொண்டென'—இடஞ் சுட்டி விளக்குக.

6. கொலை குறித்த செய்தி கேட்டுக் கண்ணகி அரற்றியதை நும் சொந்த சொற்களில் தொகுத் துரைக்க.

7. 'கள்வனோ என் கணவன்' என்ற வினாவிற்கு எழுந்த விடை யாது?

8. 'மடக்கு' என்ப தென்னை? உதாரணம் காட்டுக.

9. இலக்கணக் குறிப்பு எழுதுக:

(அ) சொல்லாடாள் சொல்லாடாள் நின்றாள்.

(ஆ) ஏதிலார் சொன்ன தெவன் வாழியோ.

(இ) துறைகழல் மாக்கள்.

(ஈ) எங்கணும் என்று இனைந்து ஏங்கி.

(உ) இம்மையும் இசை யோரீஇ.

(ஊ) எல்லீரும் கேட்டீமின்!...எல்லீரும் கேட்டைக்க!

(எ) பாய்திரை வேலிப் படுபொருள் நீயறிதி காய்கதிர்ச் செல்வனே.

10. இப்பகுதியுள் உவமையணி பயின்றுள்ள இடங்களைச் சுட்டுக.

---

2. கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்—திருவடி சூட்டு படலம்

[கம்பராமாயணம்: கம்பரது ராமாயணம் என விரித்தால் இஃது ஆறும் வேற்றுமைத் தொகை.

வடமொழி வால்மீகி ராமாயணம் இதற்கு முதனூலாகும்.

இப்பெருங் காவியத்தின் ஆசிரியர் கம்பர். கம்பநாடர் முதலிய வேறு பெயர்களும் இவருக்கு உண்டு. உவச்சர் குடியில் தோன்றியவர் இவர். விஷ்ணு சமயத்தினர். திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளல் என்பாரால் ஆதரிக்கப் பெற்றவர். இவர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டினர். கி.பி. 9-ஆம் நூற்றாண்டினர் எனவும் சிலர் சொல்லுவர்.

'கம்பநாடன் கவிதையிற்போல் கற்றோர்க்கு இதயம் களியாதே,' 'புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்று வரும் தொடர்கள் இவர் பெருமையைக் குறிப்பனவாகும்.

இராமபிரானை மீட்டும் அயோத்திக்கு அழைத்துச் செல்லச் சென்ற பரதன் அவ்விருப்பங் கூடி வாராமையால் அவனுடைய அடித்தலங்களை இரந்து பெற்றுத் தன் முடிமீது சூட்டிக்கொண்டு சென்ற வரலாறு கூறுவதால் இப்படலம் திருவடி சூட்டுபடலம் எனப்பட்டது என்பர்.

இராமபிரான் சித்திரகூட பருவதத்தில் தன் தேவியோடும் இளவலோடும் தங்கியிருக்கின்றான். சித்திரகூடத்தை நோக்கிப் புறப்பட்ட பரதன் பல இடங்களையும் கடந்து (தன் பெருஞ் சேனையுடன்) பாலைநிலத்தை யடைகின்றனன்.]

(பரதனின் சேனை பாலைநிலம் சேர்தல்)

1. காலையன்(று) எழுந்தது கண்டு வானவர்
வேலையன்(று) அனிகமே என்று விம்மறச்
சோலையும் கிரிகளும் சுண்ண மாயெழப்
பாலைசென் றடைந்தது பரதன் சேனையே.

(சேனை பாலைநிலத்தை எளிதில் கடந்தது)

2. வன்றெறு பாலையை மருதம் ஆமெனச்
சென்றது; சித்திர கூடஞ் சேர்ந்ததால்;
ஒன்றுரைத்(து) உயிரினும் ஒழுக்கம் நன்றெனப்
பொன்றிய புரவலன் பொருவில் சேனையே.

(இலக்குமணன் மலையுச்சிக்கு ஏறி, சேனைக் கடலைப் பார்க்கின்றனன்)

3. தூளியின் படலையும் துரகம் தேரோடு
மூளிருஞ் சினக்கரி முழங்கும் ஓதையும்
ஆளிருங் குழுவினர் ஆர வாரமும்
கோளிரும் படையிதென்(று) உணரக் கூறவே,

4. எழுந்தனன் இளையவன் ஏறினான் நிலங்
கொழுந்துயர்ந் தனையதோர் நெடிய குன்றின்மேல்;
செழுந்திரைப் பரவையைச் சிறுமை பேசிய
கழுந்துடை வரிசிலைக் கடலை நோக்கினான்.

(சேனையைக் கண்ட இளவல் பரதன்றான் கானிலும் போரிட வருகின்றான் எனப் பிழைத் துணர்ந்து சீற்றங்கொண்டு இராமபிரானிடம் தெரிவிக்கின்றான்)

5. பரதனிப் படைகொடு பார்கொண்(டு) ஆள்மறம்
கருதியுட் கிடந்ததோர் கறுவு காதலால்
விரதமுற் றிருந்தவன் மேல்வந் தான்;இது
சரத(ம்;)மற் றிலதெனத் தழங்கு சீற்றத்தான்,

6. குதித்தனன் பாரிடைக் குவடு நீறெழ
மிதித்தனன், இராமனை விரைவின் எய்தினான்,
"மதித்திலன் பரத(ன்,)நின் மேல்வந் தான்,மதிற்
பதிப்பெருஞ் சேனையின் பரப்பினான்" என்றான்.

(இலக்குவன் போர்க்குச் சித்தமாதல்)

7. கட்டினன் சுரிகையுங் கழலும், பல்கணைப்
புட்டிலும் பொறுத்தனன், கவசம் பூட்டமைத்
திட்டனன், எடுத்தனன் வரிவில், எந்தலைத்
தொட்டடி வணங்கிநின் றிணைய சொல்லினன்:

(இலக்குவன் வீர மொழிகள்)

8. "இருமையும் இழந்தவப் பரதன் ஏந்துதோள்
பருமையும், அன்னவன் படைத்த சேனையின்
பெருமையும், நின்னொரு பின்பு வந்தவென்
ஒருமையும் கண்டினி யுவத்தி உள்ள(ம்)நீ!

9. "படரெலாம் படப்படும் பருமயானையின்
திடரெலாம் உருட்டின, தேரும் ஈர்த்தன,
குடரெலாம் திரைத்தன, குருதி யாறுகள்
கடரெலாம் மடுப்பன பலவுங் காண்டியால்!

10. "கோடகத் தேர்படு குதிரை தாவிய
ஆடகத் தட்டிடை அலகை அற்றுகு
கேடகத் தடக்கைகள் கவ்விக் கீதத்தின்
நாடக நடிப்பன காண்டி, நாதநீ!

11. "ஒருமகள் காதலின் உலகை நோய்செய்த
பெருமகன் ஏவலின் பரதன் தான்பெறும்
இருநிலம் ஆள்கைவிட்(டு) இன்றென் ஏவலால்
அருநர(கு) ஆள்வது காண்டி, ஆழியாய்!"

(இலக்குவனின் கடுஞ் சீற்றத்தினைக் கண்ட இராமன் அவனுக்குக் கூற

12. "இலக்குவ, உலகமோர் ஏழும் ஏழுநீ
கலக்குவன்" என்பது கருதி னல் அது
விலக்குவ தரி(து,)அது விளம்பல் வேண்டுமோ?
புலக்குரித்(து) ஒருபொருள் புகலக் கேட்டியால்.

13. "நங்குலத் துதித்தவர் நவையுள் நீங்கினர்
எங்குலப் புறவர்கள்? எண்ணின் யாவரே
தங்குலத்(து) ஒருவருந் தரும நீங்கினர்?
பொங்குலத் திரளொடும் பொருத தோளினுய்!"

(பரதன் வருகின்ற காரணத்தை இராமபிரான் கூறுதல்)

14. "பெருமகன் என்வயிற் பிறந்த காதலின்
வரும்என நினைகையும், மண்ணை என்வயின்
தரும்என நினைகையும் தவிரத் தானையால்
பொரும்என நினைகையும் புலமைப் பாலதோ!

15. "பொன்னெடும், பொருகழல் பரதன் போந்தனன்
நன்னெடும் பெரும்படை நல்கல் அன்றியே
என்னெடும் பொரும்என இயம்பற் பாலதோ?
மின்னெடும் பொருவுற விளங்கும் வேலினுய்!"

(சேனையை நிறுத்திவிட்டுப் பரதன் தன் இளவல் சத்துருக்கனனெடு இராமனை அணுகுதல்)

16. என்றனன் இளவலை நோக்கி ஏந்தலும்
நின்றனன்; பரதனும் நிமிர்ந்த சேனையைப்
பின்றரு கென்றுதன் பிரிவில் காதலின்
தன்றுணைத் தம்பியும் தானும் முந்தினுன்.

(இராமன் பரதனுடைய கோலத்தை நோக்குதல்)

17. தொழுதுயர் கையினன், துவண்ட மேனியன்,
அழுதழி கண்ணினன், அவலம் ஈதென
எழுதிய படிவமொத்(து) எய்து வான்றனை
முழுதுணர் சிந்தையான் முடிய நோக்கினுன்.

(இராமன் இலக்குவற்குப் பரதனைக் காட்டுதல்)

18. கார்ப்பொரு மேனியக் கண்ணன் காட்டினுன்:
"ஆர்ப்புறு வரிசிலை இளைய வைய,நீ
தேர்ப்பெருந் தானையப் பரதன் சீறிய
போர்ப்பெருங் கோலத்தைப் பொருந்த
நோக்கெ"ன.

(இலக்குவன் நிலை)

19. எல்லொடுங் கியமுகத்(து) இளவல் நின்றனன்
மல்லொடுங் கியபுயத் தவனை வைதெழும்
சொல்லொடும் சினத்தொடும் உணர்வு சோர்தர
வில்லொடுங் கண்ணநீர் நிலத்து வீழவே.

(பரதன் செயல்)

20. அறந்தனை நினைந்திலை அருளை நீத்தனை
துறந்தனை முறைமையை என்னுஞ் சொல்லினன்
மறந்தனன் மலரடி வந்து வீழ்ந்தனன்
இறந்ததன் தாதையை எதிர்கண் டென்னவே!

(இராமன் பரதனைத் தழுவுதல்)

21. அயாவுயிர்த்(து) அழுகணீர் அருவி மார்பிடை
உயாவுறத் திருவுளம் உருகப் புல்லினன்
நியாயமத் தனைக்குமோர் நிலயம் ஆயினன்,
தயாமுதல் அறத்தினைத் தழுவி என்னவே!

குறிப்புரை

1. ‘அன்று காலை (சேனை) எழுந்தது கண்டு’ எனக் கொள்க. அனிகம் – சேனை. விம்மு – ஐயம். சுண்ணம் – புழுதி.

2. ஒன்று உரைத்து – சத்தியமே பேசி. புரவலன் – தசரதன். பொருவு இல் – ஒப்பில்லாத சேனை. தெறு – தன்னிடஞ் சேர்ந்தாரை வருத்துந் தன்மை யுள்ள.

3. துளியின் படலை – புழுதித் திரள். துரகம் – குதிரை. மூள் – சினம் மிகக் கொள்ளுகின்ற. ஆள் – காலாட்கள். கோள் – வலிமை. இச் செய்யுள் அடுத்த செய்யுளுடன் சென்று முடியும். ஆகவே இது குளகம்.

4. நிலம் கொழுந்து உயர்ந்து அனைய – நிலவுலகமானது கொழுந்து விட்டு உயர்ந்ததைப்போன்ற. கழுந்து – வலிமை.

5. பார்கொண்டு ஆள் மறம் – பூமி முழுவதையும் கொண்டு அரசாள வேண்டுமென்ற கொடிய தொழில். கறவு கருதலால் – சினத்தோடு கூடிய பேராசையால். விரதமுற்றிருந்தவன் – இராமபிரான். சரதம் – உண்மை.

இக்கவியும் அடுத்த கவியும் குளகம்.

6. குவடு நீறு எழ – மலைச் சிகரம் பொடியாகும்படி. பதி – அயோத்தி நகரம்.

7. சரிகை – உடைவாள். பொறுத்தனன் – தாங்கினன்.

8. ஏந்து தோள் – உயர்ந்த தோள்.

9. படர் எலாம் பட – பலவகைத் துன்பங்களும் உண்டாக. படும் – இறக்கிற. யானையின் திடர் – யானைகளாகிய மேடுகள். குருதி யாறுகள் உருட்டின ஈர்த்தன நிரைத்தனவாக மடுப்பன என்க. மடுப்பன – பாய்வன.

10. தாவிய குதிரை படு – தாவிச் செல்லும் குதிரைகள் அழியப் பெற்ற. கோடகம் – புதுமை. கீதத்தின் – கீதத்தோடு: உருபு மயக்கம்.

அலகைகள் களத்தின்கண் அற்று உகுந்த கேடகத் தடக் கைகளைக் கவ்விக்கொண்டு தேர்த்தட்டின் மீது ஆடிப்பாடும், என்க.

11. பெருமகன் – தசரத சக்கரவர்த்தி.

12. புலக்கு உரித்து – அறிவுக்கு ஏற்றது. 'புலத்துக்கு' என்ற சொல் அத்துச்சாரியை தொக்குப் 'புலக்கு' எனவாயிற்று. புகல – யான் சொல்ல.

13. நவையுள்–குற்றத்திலிருந்து. எங்கு உலப்புறுவர்கள் – எப்படி அளவிடப்படுவார்கள்; எண்ணிறந்தவர்கள். ஒருவு அரு – நீங்க வொண்ணாத. உலம் – கற்றூண்.

14. என்வயின் – என்னிடம்.

15. 'பரதன் போந்தனன், பெரும்படை, பொன்னொடும், நல்கல் அன்றியே, பொரும் என, பாலதோ' என்க. போந்தனன்: முற்றெச்சம் பொன் – அரசாட்சிச் செல்வம்.

16. என்றனன்: முற்றெச்சம்.

17. அவலம் – துன்பம்.

18. இலக்குவனின் தவற்றினை உணர்த்தும்வண்ணம் 'போர்ப் பெருங் கோலத்தை நோக்கு' என்றான்.

19. எல் – பொலிவு. இளவல் – இலக்குவன். மல் ஓங்கிய புயத்தவன், பரதன்.

21. அயாவுயிர்த்து–பெருமூச்சு விட்டு. உயாவுற–பெருக. தயாமுதல்–அருளினையுடைய முதற் கடவுள். இச்செய்யுளுள் பயின்றது உவமையணி.

வினாக்கள்

1. கம்பர்: குறிப்பு வரைக.

2. 'திருவடி சூட்டுபடலம்' என்று அப்படலத்துக்குப் பெயர் வரக் காரணம் என்ன?

3. இத்தொடர்களுக்குப் பொருள் தருக:

(அ) நாகம் தேரோடு மூளிருஞ் சினக்கரி முழங்கும் ஓதை.

(ஆ) கோடகத் தேர்படு குதிரை தாவிய ஆடகத் தட்டு.

(இ) கார்ப்பொரு மேனியக் கண்ணன்.

4. இடம் காட்டி விளக்குக:

(அ) செழுந்திரைப் பரவையைச் சிறுமை பேசிய கழுத்துடை வரிசிலைக் கடலை நோக்கினன்.

(ஆ) தேர்ப்பெருந் தானையைப் பரதன் சிறிய போர்ப்பெருங் கோலத்தைப் பொருந்த நோக்கு.

(இ) தயாமுதல் அறத்தினைத் தழுவி என்னவே.

5. கோளிரும் படையிது வென இலக்குவற்குக் கூறியன யாவை?

6. 'உயிரினும் ஒழுக்கம் நன்றெனப் பொன்றிய புரவலன்'—இக் கருத்தினை யொத்த திருக்குறள் யாது?

7. பரதன் சேனையைக் கண்டதும் இலக்குவன் கொண்ட எண்ணமும் வண்ணமும் யாது?

8. இலக்குவன் போர்க்கோலம் புனைந்ததனைத் தெரிவிக்க.

9. இலக்குவனின் சிந்தனையில் நின்ற போர்க்களக் காட்சியினைக் காட்டுக.

10. 'ஒருமகள் காதலின் உலகை நோய் செய்த பெருமகன்'—இவன் யாவன்? இதன் வரலாறு என்ன?

11. இளவலின் சீற்றத்தினைக் கண்ட இராமபிரான் மொழிந்த தென்ன?

12. பரதன் வரவிற்கு இராமபிரான் சொல்லும் காரணங்கள் யாவை?

13. பரதன் எய்திய கோலத்தினைத் தெரிவிக்க.

14. பரதனின் கோலத்தை நோக்கிய இலக்குவனின் நிலை யாது?

15. இராமனைக் கண்டதும் பரதன் சொன்னதும் செய்ததும் என்ன?

16. கோடிட்டவற்றிக்கு இலக்கணப் பெயர் தருக:

(அ) பொன்றிய புரவலன்.

(ஆ) செழுந்திரைப் பரவை.

(இ) என்றனன் இளவலை நோக்கி எந்தலும் நின்றனன்.

17. உறுப்பிலக்கணம் தருக:

நின்றனன், காண்டி, கேட்டி.

---

3. பெரிய புராணம்

கண்ணப்ப நாயனார் புராணம்

[பெருமை வாய்ந்த சிவனடியார்களின் புராணமாதலால் பெரிய புராணம் எனப்பட்டது. இதற்கு இந்நூலாசிரியர் இட்ட பெயர் திருத் தொண்டர் புராணம் என்பது. சைவத் திருமுறைகளுள் இது பன்னிரண்டாம் திருமுறை யாகும்.

இப் பெருநூலின் ஆசிரியர் சேக்கிழார் என்பவராவர். இஃது இவர் தம் குடிப்பெயரே. இவர்தம் இயற்பெயர் அருண்மொழித் தேவர் என்பது. தொண்டை நாட்டிலுள்ள குன்றத்தூர் இவரூர். இவர் வேளாளர் மரபினர், சிவ சமயத்தவர். இவர்தம் காலம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டாகும். 12-ஆம் நூற்றாண்டு எனவுங் கூறுவர் சிலர்.

இவர் அநபாய சோழனிடத்து அமைச்சராயிருந்து உத்தமச் சோழப் பல்லவர், தொண்டர் சீர் பரவுவார் என அவனால் பட்டஞ் சூட்டப்

பெற்றுச் சிறப்புற்றவர். அச்சோழனின் வேண்டுகோளின்படியே இப் புராணத்தைப் பாடினார் என்பது வரலாறு.

பொத்தப்பி நாடு என்பது ஒரு மலை நாடு. அந்நாட்டினர் யாவரும் வேடர்கள். அவர்கள் தலைவன் நாகன் என்பவனுக்கு ஒரு மைந்தன் பிறந்தனன். மைந்தன் திண்மையாகத் தோன்றியமையால் திண்ணன் எனப் பெயர் சூட்டப் பெற்றனன். முதுமை எய்திய நாகன் தலைமையைத் திண்ணன் மீது வைத்தனன். திண்ணனும் வேடர்களும் காட்டு விலங்குகளைக் கொல்வான் வேண்டி வேட்டைக்குப் புறப்பட்டார்கள்.

வேட்டையாடுகையில் கொழுத்த பன்றியொன்று எழும்பி வலைகளை யறுத்துக்கொண்டு கடுவிசையுடன் ஓடிற்று. அதனைத் தொடர்ந்தார் திண்ணனார். அவர்பின் நாணன் காடன் என்ற இருவர் வேடர் தொடர்ந்தனர். தொலைதூரமோடித் திண்ணனார் பன்றியைக் கொன்றார். பின்பு நாணனும் காடனும் அவருடன் சேர்ந்தனர். பசி வருத்தியதால் பன்றியைத் தீயிலிட்டு உண்வான் கருதி அதனைச் சுமந்து சென்று பொன்முகலி யாற்றின் கரையினில் ஒரு மா நிழலை யடைந்தனர். தீ யுண்டுபண்ணக் காடனைப் பணித்துத் திண்ணனார் நாணனுடன், அரைக் காதத்துக் கப்பால் காட்சி யளித்த திருக்காளத்தி மலையினை நோக்கி நடந்தார். ஆங்கே சோலையின் கண் வீற்றிருக்கும் குடுமித் தேவரை (சிவபெருமானை)க் காண வேண்டும் என்பது இவர்தம் ஆசை. மலையருகே செல்லச் செல்லத் திண்ணனார் உள்ளத்தே குடுமித் தேவரின்பால் மாளாத அன்பு சுரக்கின்றது. சென்று கண்டார்.]

(கண்ட அவர் செயல்)

1. மாகமார் திருக்கா ளத்தி
 மலைஎழு கொழுந்தா யுள்ள
ஏகநா யகரைக் கண்டார்;
 எழுந்தபே ருவகை யன்பின்
வேகமா னதுமேற் செல்ல
 மிக்கதோர் விரைவி னோடு
மோகமாய் ஓடிச் சென்றார்;
 தழுவினார்; மோந்து நின்றார்.

2. நெடிதுபோ துயிர்த்து நின்று
 நிறைந்தெழு மயிர்க்கால் தோறும்
வடிவெலாம் புளகம் பொங்க
 மலர்க்கணீர் அருவி பாய
"அடியனேற் கிவர்தாம் இங்கே
 அகப்பட்டார் அச்சோ" என்று
படியிலாப் பரிவு தானோர்
 படிவமாம் பரிசு தோன்ற,

3. "வெம்மறக் குலத்து வந்த
வேட்டுவச் சாதி யார்போல்
கைம்மலை கரடி வேங்கை
அரிதிரி கானந் தன்னில்
உம்முடன் துணையா யுள்ளார்
ஒருவரும் இன்றிக் கெட்டேன்!
இம்மலைத் தனியே நீரிங்
கிருப்பதே!" என்று நைந்தார்.

(கைக்தவர், தேவர்மீது பச்சிலையும் பூவும் இட்டிருக்கக் கண்டு, அது செய்தவர் ஒரு பார்ப்பனர் என நாணன் சொல்லக் கேட்டார். இறைவற்கு இறைச்சி கொண்டுவரப் புறப்பட்டார்)

4. "இவர்தமைக் கண்டே னுக்குத்
தனியராய் இருந்தார், என்னே!
இவர்தமக் கமுது செய்ய
இறைச்சியும் இடுவா ரில்லை;
இவர்தமைப் பிரிய வொண்ணா
தென்செய்கேன்? இனியான் சால
இவர்தமக் கிறைச்சி கொண்டிங்
கெய்தவும் வேண்டும்" என்று,

5. போதுவர் மீண்டு செல்வர்
புல்லுவர் மீளப் போவர்
காதலின் நோக்கி நிற்பர்
கன்றகல் புனிற்றாப் போல்வர்
"நாதனே! அமுது செய்ய
நல்லமெல் லிறைச்சி நானே
கோதறத் தெரிந்து வேறு
கொண்டிங்கு வருவேன்" என்பார்.

(இங்ஙனம் பிரியாமற் பிரிந்து சென்ற திண்ணனார் முன்பு காடனை விட்டு வந்த இடஞ் சென்று பன்றித் தசையை அம்பால் ஈர்த்துக் காய்ச்ச லானார்)

6. கோலினிற் கோத்துக் காய்ச்சிக்
கொழுந்தசை பதத்தில் வேவ
வாலிய சுவை முன் காண்பான்
வாயினில் அதுக்கிப் பார்த்துச்
சாலவும் இனிய வெல்லாம்
சருகிலை இணைத்த கல்லை
ஏலவே கோலிக் கூட்டி
யதன்மிசை யிடுவார் ஆனார்!

('மயல் கொண்டான் திண்ணன்; மாற்றற்கு அரிது' எனக் கானவர் மீண்டனர். திண்ணனார் ஊனமுது ஒரு கையிலும், தனு ஒரு கையிலும், மஞ்சன நீர் வாயினிலும், பூசனை மலர்கள் தம் குடுமியிலுமாகக் கொண்டு, 'எம்பிரானார் சாலப் பசிப்பர்' என்று இரங்கிக் காளத்தி நோக்கிக் கடுகினார்)

7. இளைத்தனர் நாய னார்என்(று)
ஈண்டச்சென் றெய்தி வெற்பின்
முளைத்தெழு முதலைக் கண்டு,
முடிமிசை மலரைக் காலில்
வளைத்தபொன் செருப்பால் மாற்றி,
வாயின்மஞ் சனநீர் தன்னை
விளைத்தஅன் புமிழ்வார் போல
விமலனார் முடிமேல் விட்டார்.

8. தலைமிசைச் சுமந்த பள்ளித்
தாமத்தைத் தடங்கா ளத்தி
மலைமிசைத் தம்பி ரானார்
முடிமிசை வணங்கிச் சாத்திச்
சிலைமிசைப் பொலிந்த செங்கைத்
திண்ணனார், சேர்த்த கல்லை
இலைமிசைப் படைத்த ஊனின்
திருவமு தெதிரே வைத்து,

9. "கொழுவிய தசைகள் எல்லாங்
கோலினில் தெரிந்து கோத்தங்(கு)
அழலுறு பதத்திற் காய்ச்சிப்
பல்லினால் அதுக்கி நாவில்

பழகிய இனிமை பார்த்துப்
படைத்தஇவ் விறைச்சி சால
அழகிது, நாயனீரே
அமுதுசெய் தருளும்" என்றார்.

(இவ்வனம் அமுது படைத்த திண்ணனார் இரவெல்லாம் தேவரைக் காத்து நின்று விடிந்ததும், அவர்க்கு ஊனமுது கொண்டு மீள வேட்டைக்குச் சென்றுவிட்டார். என்றும்போல அன்றும் சிவகோசரியார் வழிபாடு நிகழ்த்த குடுமித் தேவரைக் குறுகினார். இறைவரிடம் எலும்பு முதலியவற்றைக் கண்டு துடித்து அவற்றை அலகிட்டு நீக்கி, மீட்டும் முழுகி, வழிபாடு செய்து வீடு திரும்பினார். திண்ணனார் வந்தார்)

வேறு

10. ஊனமுது கல்லையுடன் வைத்"திதுமுன்
னையினன்றால்,
ஏனமொடு மான்கலைகள் மரைகடமை
இவையிற்றில்
ஆனவுறுப் பிறைச்சியமு(து), அடியேனும்
சுவைகண்டேன்;
தேனுமுடன் கலந்ததிது தித்திக்கும்"
எனமொழிந்தார்.

11. இப்பரிசு திருவமுது செய்வித்துத் தம்முடைய
ஒப்பரிய பூசனைசெய் தந்நெறியில் ஒழுகுவார்
எப்பொழுது மேன்மேல்வந் தெழும்அன்பால்
காளத்தி
அப்பரெதிர் அல்லுறங்கார் பகல்வேட்டை
யாடுவார்.

(சிவகோசரியார் கனவில் சிவனார் தோன்றி யருளுதல்)

12. "அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல்
அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமையறியும்
அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய
வாமென்றும்
அவனுடைய நிலைஇவ்வா 'றறிநீ"என்
றருள்செய்தார்.

13. “உனக்கவன்றன் செயல்காட்ட நாளைநீ
ஒளித்திருந்தால்
எனக்கவன்றன் பரிவிருக்கும் பரிசெல்லாங்
காண்கின்றாய்
மனக்கவலை ஒழி”கென்று மறைமுனிவர்க்
கருள்செய்து
புனற்சடிலத் திருமுடியார் எழுந்தருளிப் போயினார்.

(அங்ஙனே சிவகோசரியார் மறைந்திருந்தார். திண்ணனார் பண்டு போல் அன்றும் ஊன் முதலியன கொண்டு காளத்தியப்பரை அணையும் பொழுதில்)

வேறு

14. அண்ணலார் திருக்கா ளத்தி
அடிகளார் முனிவ னார்க்குத்
திண்ணனார் பரிவு காட்டத்
திருநய னத்தில் ஒன்று
துண்ணென உதிரம் பாய
இருந்தனர் தூரத் தேயவ்
வண்ணவெஞ் சிலையார் கண்டு
வல்விரைந் தோடி வந்தார்.

15. வந்தவர் குருதி கண்டார்
மயங்கினார் வாயில் நன்னீர்
சிந்திடக் கையில் ஊனுஞ்
சிலையுடன் சிதறி வீழக்
கொந்தலர் பள்ளித் தாமங்
குஞ்சியின் றலைந்து சோரப்
பைந்தழை அலங்கல் மார்பர்
நிலத்திடைப் பதைத்து வீழ்ந்தார்.

(விழுந்தவர் எழுந்து இறைவனார் கண்ணைத் துடைத்தார். துடைத்தும் குருதி யொழுக்கு நின்றிலது. அது கண்டு அழுங்கிச் சென்று பச்சிலை மருந்து கொணர்கின்றார்)

16. “என்செய்தால் தீரு மோதான்
எம்பிரான் திறத்துத் தீங்கு
முன்செய்தார் தம்மைக் காணேன்;
மொய்கழல் வேடர் என்றும்

மின்செய்வார் பகழிப் புண்கள்
தீர்க்குமெய் மருந்து தேடிப்
பொன்செய்தாழ் வரையிற் கொண்டு
வருவனன்" என்று போனர்.

17. நினைத்தனர் வேறு வேறு
நெருங்கிய வனங்கள் எங்கும்
இனத்திடைப் பிரிந்த செங்கண்
ஏறென வெருக்கொண் டெய்திப்
புனத்திடைப் பறித்துக் கொண்டு
பூதநா யகன்பால் வைத்த
மனத்தினுங் கடிது வந்தம்
மருந்துகள் பிசைந்து வார்த்தார்.

(கண்ணிலே கண் அப்புதல்)

18. மற்றவர் பிசைந்து வார்த்த
மருந்தினல் திருக்கா ளத்திக்
கொற்றவர் கண்ணிற் புண்ணீர்
குறைபடா திழியக் கண்டும்
'இற்றையின் நிலைமைக் கென்னே
இனிச்செயல்' என்று பார்ப்பார்
உற்றநோய் தீர்ப்ப தூனுக்(கு)
ஊனெனும் உரைமுன் கண்டார்.

19. 'இதற்கினி என்கண் அம்பால்
இடந்தப்பின் எந்தை யார்கண்
அதற்கிது மருந்தாய்ப் புண்ணீர்
நிற்கவும் அடுக்கும்' என்று
மதர்த்தெழும் உள்ளத் தோடு
மகிழ்ந்துமுன் இருந்து தங்கண்
முதற்சரம் அடுத்து வாங்கி
முதல்வர்தங் கண்ணில் அப்ப,

20. நின்றசெங் குருதி கண்டார்
நிலத்தினின் றேறப் பாய்ந்தார்
குன்றென வளர்ந்த தோள்கள்
கொட்டினார் கூத்தும் ஆடி
'நன்றுநான் செய்த இந்த
மதி' என நகையுந் தோன்ற
ஒன்றிய களிப்பி னாலே
உன்மத்தர் போல மிக்கார்.

(சிவனார் வலக்கண் குருதி யொழுக்கு நின்றது. ஆயினும் இடக் கண்ணினும் குருதி யொழுக்கினார் குடுமித்தேவர். திண்ணனார் கண்டார்)

21. கண்டபின் 'கெட்டேன் எங்கள்
காளத்தி யார்கண் ஒன்று
புண்தரு குருதி நிற்க
மற்றைக்கண் குருதி பொங்கி
மண்டுமற் றிதனுக் கஞ்சேன்
மருந்துகை கண்டேன் இன்னும்
உண்டொரு கண்ணைக் கண்ணை
இடந்தப்பி ஒழிப்பேன்' என்று,

(தம் மறுகண்ணையும் இடந்திடத் துணிதல்)

22. கண்ணுதல் கண்ணில் தங்கண்
இடந்தப்பின் காணும் நேர்பா(டு)
எண்ணுவார் தம்பி ரான்றன்
திருக்கண்ணில் இடக்கால் ஊன்றி
உண்ணிறை விருப்பி னோடும்
ஒருதனிப் பகழி கொண்டு
திண்ணனார் கண்ணில் ஊன்றத்
தரித்திலர் தேவ தேவர்.

(இறைவனார் செயல்)

23. செங்கண்வெள் விடையின் பாகர்,
திண்ணனார் தம்மை யாண்ட
அங்கணர், திருக்கா ளத்தி
அற்புதர் திருக்கை அன்பர்

தங்கண்முன் இடக்குங் கையைத்
தடுக்க,மூன் றடுக்கு நாக
கங்கணர் அமுத வாக்குக்
'கண்ணப்ப நிற்க' என்ற.

4. பேறினி இதன்மேல் உண்டோ
பிரான்திருக் கண்ணில் வந்த
ஊறுகண் டஞ்சித் தங்கண்
இடந்தப்ப உதவுங் கையை
ஏறுயர்த் தவர்தங் கையால்
பிடித்துக்கொண் 'டென்வ லத்தில்
மாறிலாய்! நிற்க' வென்று
மன்னுபே ரருள்பு ரிந்தார்!

குறிப்புரை

1. மாகம் ஆர் – ஆகாயத்தை அளாவிய.

2. இச்செய்யுளும் அடுத்த செய்யுளும் ஒரு தொடர். இவ்வாறு வருவதனைக் குளகம் என்பர். அச்சோ: வியப்புக் குறிப்பு. படி இலாப் பரிவு – உவமை இல்லாத அன்பு. படிவம் – வடிவம். பரிசு – தன்மை.

3. கைம்மலை – யானை; காரணப் பெயர். அரி – சிங்கம்.

4. சால – போதிய.

5. புல்லுவர் – தழுவுவார். புனிற்று (புனிறு + ஆ) – அண்மையில் ஈன்றதாகிய பசு. 'கன்று அகல் புனிற்றுப் போல்வர்': உவமை யணி.

6. கோத்து: பகுதி 'கோ'. வாலிய - இனிய. சருகு இலை – உலர்ந்த இலை. கல்லை – இலைக் கலம்.

7. ஈண்ட – விரைவாக. முதல் – கடவுள். விளைந்த – முதிர்ந்த. விமலன் – குற்றம் அற்றவர்.

8. பள்ளித் தாமம் – இறைவனுக்குச் சாத்துகின்ற மாலை. தடம் – பெருமை. கல்லை இலை – கல்லையாகிய இலை. சிலை – வில். 'செம்மை + கை = செக்கை.

9. கொழுவிய – கொழுத்த.

10. முன்னைபின் + கன்று = முன்னைபின்னன்று. ஆல்: அசைநிலை. ஏனம் – காட்டுப்பன்றி. கலை – ஆண்மான். மரை, கடமை: மான் வகைகள்.

11. இப்பரிசு – இவ்விதமாக. அல் – இரவு.

13. பரிவு இருக்கும் பரிசு – அன்பிருக்கும் தன்மை. புனல் சடிலம் – கங்கை யணிந்த சடை. காண்கின்றுப்: காலவழுவமைதி.

14. நயனம் – கண். சிலையார் – வில்லார்; திண்ணனார்.

15. குருதி – இரத்தம். கொந்து அலர் – கொத்தாக அலர்ந்த. குஞ்சி – குடுமி. பசுமை + தழை = பைந்தழை; பண்புத்தொகை. அலங்கல் மார்பர் – திண்ணனார். அலங்கல் – மாலை.

16. மொய் – வலிமை மின் செய்வார் பகழிப் புண்கள் – ஒளி வீசுகின்ற நீண்ட அம்புகளால் உண்டான புண்கள். பகழிப் புண்கள்: மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. இப்புண்களை ஆற்றும் பச்சிலை வேடா அறிவர். பொன் செய் – அழகு விளங்கும். வருவன் + நான் = வருவனான்.

17. நினைத்தனர்: தற்குறிப்பேற்றம். 'இனத்திடைப் பிரிந்த செங்கண் ஏறென': உவமையணி. ஏறு – இடபம்; ஆண்சிங்கமும் ஆம். வெருக்கொண்டு – (அப்பருக்கு என்ன நேருமோ என) அச்சங்கொண்டு.

18. உரை முன் கண்டார் – பழமொழி மனத்திலே தோன்றப் பெற்றார்.

19. என் கண் – என்னுடைய கண்ணை. இடந்து – தோண்டி. மதர்த்து – பொங்கி. உள்ளம் – அன்பு. தம் கண் முதல் – தம் கண்களுள் முதன்மையானதாகிய வலக்கண்ணை. சரம் – அம்பு.

20. உன்மத்தர் – பித்துக்கொண்டவர்.

21. மண்டும் – அதிகமாகும்.

22. கண் + நுதல் = கண்ணுதல்; சிவபெருமான். காணும் சேர்பாடு எண்ணுவார் – இடக் கண்ணை இடந்த பிறகு எவ்விதம் கண்டு சிவனாரின் இடக்கண்ணில் அப்புதல் இயலும் என எண்ணியவர். எண்ணுவார்: வினையாலணையும் பெயர்.

23. "அற்புதர் திருக்கை, (திண்ணனார்) கையைத் தடுக்க, வாக்கு, 'நிற்க' என்ற" என்க. செங்கண்...அற்புதர்–சிவபெருமான். அம் கண்ணர் – அங்கணர். 'மூன்றடுக்கு வாக்கு' என்க.

24. ஏறு உயர்த்தவர் – இடபக் கொடியை யுடையவராகிய சிவனார்.

வினாக்கள்

1. பெரிய புராணத்தைப்பற்றியும் அதன் ஆசிரியரைப்பற்றியும் குறிப்பு வரைக.

2. இடஞ் சுட்டிப் பொருளும் தருக.

(அ) அடியனேற் கிவர்தாம் இங்கே அகப்பட்டார், அச்சோ.

(ஆ) அன்பு உமிழ்வார்போல விமலனார் முடிமேல் விட்டார்.

(இ) எனக்கவன் பரிவிருக்கும் பரிசெல்லாங் காண்கின்றாய்.

(ஈ) ஊனுக்கு ஊனெனும் உரை முன் கண்டார்.

3. காளத்தி மலை நோக்கி நடந்த திண்ணனார் குடுமித் தேவரைக் கண்டதும் உற்ற நிலையும் உரைத்த மொழியும் யாவை?

4. 'கன்றகல் புனிற்று' உவமையாகக் காட்டப்பட்ட இடத்தினைச் சுட்டி விளக்குக.

5. இறைவற்கு ஊனமுது எவ்வாறு பக்குவஞ் செய்யப்பட்டது?

6. குடுமித் தேவருக்குத் திண்ணனார் செய்த வழிபாட்டினை எழுதுக.

7. சிவகோசரியார் கனவில் சிவனார் சொற்றது என்னை?

8. இறைவர் கண்ணில் குருதியைக் கண்ட திண்ணனார் உற்ற நிலை யாது?

9. இறைவனார் இடக்கண்ணிலும் இரத்தங் கண்டபோது திண்ணனார் சொன்னதும் செய்ததும் என்ன?

10. திண்ணனார் இடக்கண்ணை இடந்திட எடுக்கவும் இறைவர் செய்தது யாது?

11. இலக்கணப் பெயர் தருக.

(அ) இவர்தமைக் கண்டேனுக்குத் தனியராய் இருந்தார், என்னே!

(ஆ) வாங்கிய சுவைமுன் காண்பான் வாயினில் அதுக்கிப் பார்த்து...

(இ) ஊனமுது.

(ஈ) மனக்கவலை ஒழிக.

(உ) மொய்கழல் வேடர்.

(ஊ) ஏறு உயர்த்தவர்.

4. இரட்சணிய யாத்திரிகம்

அழிம்பன் தோல்விப் படலம்

[இரட்சணியம் என்பது மீட்சி அல்லது விடுதலை என்னும் பொருளது. ஒரு மனிதன் தீவினையிலிருந்து விடுதலை பெற்று மோட்சத்தை நோக்கிச் செல்லும் செலவினைப்பற்றி யுரைக்கும் நூல் 'இரட்சணிய யாத்திரிகம்' எனப்பட்டது.

இக்காவியத்தின் ஆசிரியர் எச். ஏ. கிருஷ்ண பிள்ளை யவர்கள். இவர் திருநெல்வேலிப் பாளையங்கோட்டையினைச் சேர்ந்தவர். இவர்தம் காலம் கி.பி. 1827 முதல் 1900 வரை. பிறவியில் விஷ்ணு சமயத்தினர். கிறிஸ்துபிரானின் பேரன்பினால் ஈடுத்தாளப்பட்டுப் பின் கிறிஸ்து சமயத்தையே ஏற்றுச் சிறந்த கிறிஸ்தவராக வாழ்ந்தார். 'Pilgrim's Progress' என்ற ஆங்கிலக் காவியத்தினை முதனூலாகக்கொண்டு இரட்சணிய யாத்திரிகத்தை இவர் செய்து முடித்தார். இக்காவியத்தின் பெருமை கருதி இவரைக் கிறிஸ்தவக் கம்பர் என்பர். இந்நூலினை ஓர் உருவகக் காவியம் எனலாம்.

இரட்சணிய சமய நிர்ணயம், இரட்சணியக் குறள், இரட்சணிய மனோகரம் என்பன இவர் இயற்றிய வேறு நூல்கள்.

'அழிம்பன் தோல்விப் படலம்' என்பது நிதான பருவத்தில் வருவது. இக்காவியத்தின் கதாநாயகன் கிறிஸ்தியான் (கிறிஸ்தவன்,) சிலுவைக் காட்சி கண்டு, பாவச் சும்மை நீங்கப் பெற்று, மோட்சம் நோக்கிச் செல்லுகின்றவன்,

தாழ்மை என்னும் ஒரு பள்ளத்தாக்கினைக் கடந்துகொண்டிருக்கிறான். அங்கு அழிம்பன் என்னும் ஒரு கொடிய அரக்கன் தோன்றிக் கிறிஸ்தியானை மடக்கிப் போரிடுகின்றனன். அவ்வரலாறு கூறும் படலம் இது.]

(தாழ்மைப் பள்ளத்தாக்கில் சென்றுகொண்டிருக்கிற கிறிஸ்தியான் ஒரு பேரொலி கேட்டு நிற்கின்றான்)

1. ஆயிடைத் தமியனாய் அருள்வ ழிச்செலும்
தூயவன் நெஞ்சகம் துணுக்குற்(று) ஏங்கிடக்
காயுரும் இடித்தெனக் கதித்தொர் பேரொலி
ஏயெனு மாத்திரத் தெழுந்த(து) எஞ்சவே

2. பேரொலி முழக்கினாற் பேதுற்(று) உள்ளுடைந்(து)
ஆரியன் அடிபிச காது நின்றிவண்
மாரியின் ருகஅச் சுறுத்த வந்தஇக்
காரியம் யாதெனக் கருதுங் காலையில்.

(அழிம்பன் என்னும் அரக்கன் தோன்றுகின்றான்)

3. நஞ்சமும் அவித்தையும் இருளும் நாசமும்
வஞ்சமும் கொடுமையும் மறமும் தீமையும்
செஞ்சவே திரண்டுருத் தெரிய நின்றிடும்
அஞ்சனக் கருநிறத்(து) அவுண யாக்கையன்,

4. பேயுமஞ் சுறுபெரும் பேய்மு கத்தினன்,
காயெரி பங்கியன், கடுத்து றுங்கொடு
வாயினன், வக்கிர தந்தன், வன்கணன்,
தீயெழு புகையென உயிர்க்குந் தீயவன்.

5. பாபத்தை மணந்தவன், பழியைப் பெற்றவன்,
சாபத்தைப் படைத்தவன், தரும நாயகன்
கோபத்தை யடைந்தவன், குவல யத்தினுக்(கு)
ஆபத்தை விளைப்பவன், அறத்தைத் தின்பவன்,

6. இப்படு பாதகன் அழிம்பன் என்பவன்:
மெய்ப்படு கிறிஸ்தவன் விழிக்கு நேர்எதிர்
கைப்படக் காண்டலும் கலங்கி உள்ளழிந்(து)
எப்படி எனக்கினி உய்வென்(று) எண்ணுவான்.

———

(அவ்வமயம் கிறிஸ்தவன் கருதுதல்)

7. "அஞ்சியான் பின்னிடல் அழகன்(று); ஆருயிர்
துஞ்சினும் அரசற்குத் துரோகி யாகலன்;
நெஞ்சுற எதிர்த்துமுன் னிற்ப தேநலன்;
எஞ்சுறேன்," எனவுரத்(து) எதிரிட் டானரோ!

(அழிம்பன் வினா)

8. உங்கரித் தழிம்பன்வந் தருத்து
நோக்கிநின்(று)
"எங்குளை? எங்குசெல் கிற்றி? யாரைநீ?
ஈங்குமுன் புலப்பட நுவறிநொய் தெ"ன்றான்.
கங்குலும் பகல்படக் கருகு நெஞ்சினன்.

(கிறிஸ்தவன் விடை)

9. "நாசதே சத்துளேன், நாச தேசத்தில்
நீசவெவ் வினைகுடி நிலவிற்(று), ஆதலின்
மோசமும் நாசமும் மூடுகும், என்றமெய்
வாசகங் கேட்டதை வரைந்து வீசினேன்;

10. "வீவினை விரும்பிடா விட்பு லத்துயர்
கோவினுக் கேயடித் தொழும்பு கூடினேன்;
சாவினை விளைக்கவென் முதுகில் தங்கிய
தீவினைச் சும்மையுந் தெறித்து வீழ்ந்ததால்;

11. "நித்திய மங்களம் நிகழ்சுகா னந்த
முத்திமா நகர்செல முடுகு கின்றனன்;
எத்திறம் நுங்கருத்(து)? இராச பாதையின்
மத்தியில் யான்உளன்; மனக்கொள் நீ," என்றான்.

('நாசதேசத்துக்கு மீண்டுஞ் செல்; இன்றெனில் உன் உயிரைப் போக்குவேன்' என அழிம்பன் கிறிஸ்தவனை அச்சுறுத்துதல்)

12. "நன்றுநன் றுன்னிலை! நாச தேசமும்
துன்றிய குடிகளும் சொந்த மாம்எனக்(கு)
என்றறி, நீயுமென் தொழும்பன், இன்றெனில்
கொன்றுயிர் குடிப்ப(ன்,)ஈ துளத்துக் கோடியால்:

13. "பொற்புறு நாசதே சத்துப் போந்துநீ
அற்புத வளம்நுகர்ந் தாயுள் நாளெலாம்
முற்படு காமியம் முழுதுந் துய்த்திரு;
பிற்படு கதிநினைந் திரங்கிப் பேதுறேல்;

14. "இணங்குவா யெனில்இக சுகத்தை யீகுவல்;
பிணங்குவா யெனில்உயிர் பிழிந்து தேக்குவல்;
உணங்கியோய்! எதுதுணி(பு)? உரைத்தி,"
என்றனன்
நிணங்கெழு குருதிவேல் நிசாச ரேசனே;

(அது கேட்ட கிறிஸ்தவன், செஞ்சத்தில் அருட்பலம் மிக்கவனாகி இவை மொழிகலுற்றனன்)

வேறு

15. "கொடுமதிப டைத்துலவு கோழைநர மல்லால்
நடுமதிப டைத்தவருன் நச்சுமதி கொள்ளார்;
அடுமதிப டைத்திழிய ழிம்பவழி வெய்தும்
கொடுமதிப டைத்தனைகெ டாப்பழிப டைத்தோய்!

16. "விள்ளரிய பாதகவி னைச்சுமைவி ழுத்த
வள்ளலருட் சிற்சுருதி வாய்மைமதி யொன்றே
கொள்ளுவல்;பு றத்துமதி கொள்ளமனம்
உள்ளேன்;
தெள்ளமுது குத்துவிடம் உண்பதுகொல் சீர்மை!

17. "எண்ணரிய தீவினையி யற்றியுள னேனும்
நண்ணியம னத்துயரும் நாடுபெரு மூச்சும்
கண்ணருவி நீர்சொரிக ருத்துநனி கண்டு
புண்ணியர்பொ றுத்தருள ளிக்கமகிழ் பூத்தேன்.

18. "இம்மகிழ்வ ளித்தெனையீ டேற்றுசரு வேசன்
செம்மலொரு நட்பிடைதி ரிக்கமுயல் கிற்றி!
அம்ம!கெடு வாய்;முடிவ தாங்கொலிஃ
துன்னல்?
மும்மையுல குக்கெனினும் மொய்ம்பிலது காண்டி!

(இவ்வாறு கிறிஸ்தவன் சொல்லவும் அரக்கன் மொழிகின்றனன்)

19. அடா!சிறிய பையல்!மச கத்துணையும் அல்லாய்!
கெடாமுதல ருட்டுணைகி டைக்குமென நம்பிக்
கடாசலமொ டேயமர் கலக்கவரு கின்றாய்!
படாதுபடு வாயொருக ணத்திலது பார்த்தி!

(இருவருக்கும் போர் தொடங்கிவிட்டது)

20. நன்மைபர ஞானமொளி நல்லறமி வற்றைத்
தின்மையறி யாமையிருள் தீமறம டர்த்து
வன்மைமிகு வெஞ்சமம்ம லைத்திடுதல் போலாம்
தொன்மறைவ லானொடுப சாசமர்தொ டுத்தல்!

(அழிம்பன் அம்பு பல விடுத்தல்)

21. ஆயிடைநி சாசரன்அ றக்கொடுமை பூண்ட
மாயமுறு வெஞ்சிலைவ ளைத்துமறம் மல்கும்
காயெரிமு கத்தனக டுத்துறுநு னித்த
சாயகச தம்பலத ருக்கொடுவி டுத்தான்.

(அவன் விடுத்த அம்புகளைக் கிறிஸ்தவன் 'விசுவாசம்' என்னும் கேடகத்தால் தடுத்தல்)

22. மற்றினித டம்புயம றைக்கிழவன் வல்லே
செற்றமொட ரக்கன்விடு தீப்பகழி நீந்து
முற்றுமவை இற்றுகமு ரண்கொள்விசு வாசப்
பற்றெனும்இ ரும்பரிசை யாற்பொடிப டுத்தான்.

வேறு

(அழிம்பன் எறிந்த பற்பலவாய படைகளையும் கிறிஸ்தவன் வீழ்த்துகின்றனன். மேலும்,)

23. நாத்தி கப்படை தொடுத்தனன் நராந்தகன்; நலங்கொள்
ஆத்தி கப்படை தொடுத்துடன் அழித்தனன் அறவோன்;
தீத்தி ரட்படு செங்கணான் பிடித்தவெஞ் சிலையில்
கோத்த அத்திரம் யாவையும் வேதியன் குறைத்தான்!

(கிறிஸ்தியான் நிலமீது வீழ்தல்)

24. கொள்ளி யார்அழல் சுடுகணை யாக்கையில் குளிப்ப
ஒள்ளி யோன்சிறி(து) அலமரல் உற்றமை
யோர்ந்து
துள்ளி யோடிவந்(து) எதிர்உறீஇ மல்லமர்
தொடுத்துத்
தள்ளி வீழ்த்தினன் நிலனுற அழிம்பனும்
சழக்கன்.

(அரக்கன் துணிவு)

25. ஆரி யன்தளர்ந்(து) அவனியிற் படிந்துமூச்
சயர்ந்து
போரி யன்றில னாக,இன் னேதலை புரட்டி
வீரி யம்பெறு வேன்,வெற்றி எனதென விளித்துப்
பூரி யன்கெடு புணர்ப்பினைல் அருகுறப் போந்தான்.

(இந்நிலையில் கிறிஸ்தவன் தன் நெஞ்சில் இறைவனை வேண்டவும் அருட்பலம் பெற்று 'ஜெபம்' என்று சொல்லப்படுகின்ற மந்திரப்படையை உபயோகிக்கின்றனன்)

26. மந்தி ரத்தனி வாட்படை யோங்கிவன் கண்ணன்
தந்தி ரத்தட மார்புறப் புகுத்தலும் தலைசாய்ந்(து)
அந்த ரம்பட அலறினன்; அழிபெருங் குருதி
சிந்தி யங்கவன் வெஞ்சினத் தீத்தழல் சிதைத்த.

(அழிம்பன் மீக்கிளர்ந்து ஓடுதல்)

27. நெஞ்சு ரங்கிழிந் தழிம்ப(ன்)நீள் நிலத்துறீஇ
நெடிது
சஞ்ச லம்படத் தடஞ்சிறை யிரண்டையுந்
தடிவான்
செஞ்சொல் ஆரணன் மந்திர வாள்கரந் திகழ்த்த
அஞ்சி வாய்வெரீஇ மீக்கிளர்ந்(து) அதோகதி
யடைந்தான்.

குறிப்புரை

1. காயுரும் – கொடிய இடி. கதித்து – மிகுந்து. எஞ்சுதல் – மிஞ்சுதல்.

2. ஆரியன் – அறிஞன்; இங்குக் கிறிஸ்தவன். அவன் செல்லுகின்ற வீட்டுலக நெறி ஓரடித் தடமுடையதாதலாலும் சற்றுத் தவறினால் ஆபத்து உண்மையாலும் 'அடிபிசகாது' நின்றான்.

3. நஞ்சம் – நஞ்சு. அவித்தை – அறியாமை; மாயை. செஞ்சவே – நேராக. அஞ்சனம் – மை.

4. பங்கி – மயிர். வக்கிர தந்தன் – வளைந்த பல்லுடையன்.

6. படு – கொடிய. மெய்ப்படு – சத்தியம் விளங்குகின்ற.

7. துஞ்சினும் – மாய்ந்தாலும். அரசன் – கிறிஸ்துபிரான். எஞ்சுறேன் – (எதிர்ப்பதைச்) செய்யா தொழியேன். அரோ: அசைநிலை.

8. உங்கரித்தல் – உம்மென்று ஒலி செய்தல். செல் + கில் + (த்) இ = செல்கிற்றி; கில்: ஆற்றல் உணர்த்தும் இடைநிலை; த்: எழுத்துப் பேறு. நுவல் + (த்) இ = நுவறி. நுவறி – சொல்லுவாயாக. நொய்து – விரைவாக.

9. அதை – நாசதேச வாழ்வை. வரைந்து – நீக்கி.

10. வீவினை – அழிவுக்கு ஏதுவான தீச்செயல்கள். வீ – அழிவு. விண் + புலம் = விட்புலம். தொழும்பு – அடிமை. 'சும்மை' என்பது சுமை. நாசதேசத்தில் வாழ்ந்திருந்தவனாகிய தலைவன் தீவினைச் சுமையால் வருந்தினான். அத்தேசத்தை விட்டு வீட்டுலக வழி கூடியபோது கிறிஸ்துபிரானின் சிலுவைக் காட்சியைக் கண்டு அச்சுமை நீங்கப் பெற்றனன்.

11. முடுகுதல் – விரைதல். இராச பாதை – வீட்டு நெறி. துன்றிய – பொருந்தி வாழ்கின்ற.

12. கொள் + (த்) இ = கோடி. த்: எழுத்துப்பேறு. ஆல்: அசைநிலை.

13. போந்து: 'புகு' பகுதி. காமியம் – தீச் செயல்கள். பேதுறேல் – மயங்காதே.

14. உணங்குதல் – சிந்தை வாடுதல். நிசாசரன் – அரக்கன்.

15. நாம் – நார். 'அடுமதி படைத்து இழி அழிம்ப, கெடாப் பழி படைத்தோய், அழிவு எய்தும் கொடுமதி படைத்தனை' என்க. அடுதல் – கொல்லுதல், தடுத்தல். கெடாப் பழி – என்றும் நீங்காத நிந்தை.

16. விள்ள அரிய – பேசுதற்கு அருமையான. சிற்சுருதி வாய்மை மதி – ஞானத் திருமறை சொல்லுகின்ற சத்திய போதனை. கொள்ளுவல்: தன்மை ஒருமை வினைமுற்று. உகுத்து—கொட்டிவிட்டு. முன் ஒரு பொருள் பேசி, அதனை வலியுறுத்தற் பொருட்டுப் பின் ஓர் உலகறி பொருளை அமைத்தமையான் இச்செய்யுள் வேற்றுமை யணி.

17. மனத்துயரும், பெருமூச்சும், கண்ணீரும் தன் பாவத்தை உணர்ந்ததால் வந்தவை. நண்ணிய – (தீவினை செய்தேன் என்ற உணர்ச்சியினால்) வந்துற்ற. நாடு – திருவருளை நாடுகின்ற. நனி: உரிச்சொல். புண்ணியர் – கிறிஸ்துபிரான்.

18. சருவேசன் செம்மல் – கடவுட் குமாரராகிய கிறிஸ்து. முயல்+கில்+(த்) இ=முயல்கிற்றி; கில்: ஆற்றல் உணர்த்தும் இடைநிலை; த்: எழுத்துப்பேறு; இ: எதிர்கால முன்னிலை ஒருமை விகுதி. அம்ம: வியப்புக் குறிப்பு. மொய்ம்பு – வலிமை.

19. மசகம் – கொசுகு. கெடா முதல் – கடவுள். கடாசலம் – யானை.

20. தீ மறம் – கொடிய பாவம். அடர்த்து – நெருங்கி. வெம்மை + சமம் வெஞ்சமம் (பண்புத் தொகை) – கொடிய போர். பசாசம் – பிசாசு; அழிம்பன். இச் செய்யுள் உவமையணி.

21. சிலை – வில். கடுத்துற – வெம்மை தங்கிய. சாயகம் – அம்பு. சாயக சதம் பல – நூற்றுக் கணக்கான அம்புகள்.

22. மல் திணி தடம் புயம் – வலிமை மிகச் செறிந்த பெரிய புயங்கள். மறைக் கிழவன் – கிறிஸ்தவன். செற்றம் – மன வயிரம். மூரண் – வலிமை. விசுவாசம் – அசையாத நம்பிக்கை. பரிசை – கேடகம். அரக்கனின் அம்புகள் கேடகத்தில் பட்டுப் பொடியாயின.

23. நாத்திகம் – கடவுள் இல்லை எனல். ஆத்திகம் – கடவுள் உண்டு எனல். படை – ஆயுதம். அறவோன், வேதியன் – கிறிஸ்தவன்.

24. குளிப்ப – அழுந்த. ஒள்ளியோன் – கிறிஸ்தவன். அலமரல் – அஞ்சுதல், வருந்துதல். சழக்கன் – தீயவன். உரீஇ: சொல்லிசை யளபெடை.

25. இன்னே – இப்பொழுதே. வீரியம் – வெற்றி. புணர்ப்பு - சூழ்ச்சி, செயல். பூரியன் – கீழ்மகன்.

26. வன் கண்ணன் – கொடிய அரக்கனுடைய. குருதி பெருகியதால் அழிம்பன் அஞ்சி அடங்கினன் என்பதை, அவனது சினமாகிய கொடிய நெருப்பைக் குருதிப் பெருக்கு அணைத்தது என்றார். தற்குறிப்பேற்ற வணி.

27. தடஞ்சிறை யிரண்டு – அழிம்பனுக்கிருந்த பெரிய சிறகுகள் இரண்டு. தடிவான் – வெட்டுவதற்கு; 'செய்வான்' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். ஆரணன் – கிறிஸ்தவன்; ஆரணம் – மறை. கரம் திகழ்த்த – கரத்தி லெடுக்க.

வினாக்கள்

1. இரட்சணிய யாத்திரிகம்: குறிப்பு வரைக.
2. இடஞ் சுட்டிப் பொருளும் தருக:
   (அ) இவண் மாரியின்றாக அச்சுறுத்த வந்த இக்காரியம் யாது?
   (ஆ) உணங்கியோய்! எது துணிபு?
3. இத்தொடர்களுக்குப் பொருள் தருக:
   (அ) தீவினை விரும்பிடா விட்புலம்.
   (ஆ) வள்ளலருட் சிற்சுருதி வாய்மை மதி.
   (இ) சாயகச தம்பலத ருக்கொடு விடுத்தான்.
   (ஈ) மற்றிணி தடப்புய மறைக்கிழவன்.

4. அழிம்பனின் தோற்றமும் தன்மையும் இத்தகைய வெனத் தொகுத்துரைக்க.

5. 'யாரை நீ?' என அழிம்பன் வினவியதற்குக் கிறிஸ்தவன் விடுத்த விடை யாது?

6. கிறிஸ்தியான் தன் வரலாறு சொன்னபோது அழிம்பன் சொல்லிய மருட்டுரை யாது?

7. அம்மருட்டுரைக்கு எதிர்ப்புரையாகக் கிறிஸ்தவன் சொற்றது யாது?

8. மறை வல்லானொடு அழிம்பன் அமர் தொடுத்ததனைப் புலவர் எவ்வாறு ஒப்பனை செய்கின்றனர்?

9. அழிம்பனின் வில்லும் அம்பும் எத்தகையன?

10. கிறிஸ்தவனுக்கும் அழிம்பனுக்கும் நடந்த போரினைப்பற்றியும் அதன் முடிவினைப்பற்றியும் 20 வரிகளில் வரைக.

11. உறுப்பிலக்கணம் வரைக:

காண்டி, துவறி, செல்கிற்றி, தளர்ந்து.

பயிற்சி

இங்கு வந்துள்ள பாடப்பகுதியை அடிப்படையாக வைத்துப் புலவர் கிருஷ்ண பிள்ளை யவர்களைப் பாராட்டி ஒரு கட்டுரை வரைக.

5. மான விஜயம்

['மானமே உயிரினும் மாண்புடைத்து' என்னும் கொள்கையுடன் தன் உயிரை நீத்த சேரமான் கணைக்காலிரும்பொறை என்ற மன்னனுடைய வரலாறு பற்றிய ஒரு நாடக நூல் இது.

இந்நூலின் ஆசிரியர் காலஞ்சென்ற அறிஞர் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அவர்கள். இவர் காலம் கி.பி. 1870–1903. மதுரைக்கருகில் உள்ள விளாச்சேரி என்னும் கிராமத்தில் கோவிந்த சிவனார் என்பாருக்குப் புதல்வராய்த் தோன்றினார் இவர். சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராய் விளங்கியிருந்தார். தமிழ்க் கல்வி தாழ்வுடைத்து என எண்ணிக்கொண்டிருந்த பலர் வாழ்ந்த அக் காலத்தே அருமையான நூல்களைச் செய்து தமிழகத்துக்கு வழங்கிப் போந்தார் இவர்.

சேரன் கணைக்காலிரும்பொறையுடன் பகைமை கொண்ட சோழன் செங்கணான் என்பான் அவனைப் போரில் புறங்கண்டு அவனுடன் அவனது ஆசிரியராகிய பொய்கையாரையும் சிறைபிடித்தான். சிறைபிடிப்பட்டாலும் பொய்கையார் மனங் கவல்வு ஒதுமின்றி மகிழ்ந்திருந்தார். அவரது உள்ளப் பண்பாட்டை யுணர்ந்த சோழன் தன் செயலுக்கு நாணி அவரைச் சிறைவீடு செய்து வணங்கினன். இவ்விடத்தில்தான் இக்காட்சி ஆரம்ப மாகிறது.]

[இடம்: சோழன் அரண்மனை
காலம்: காலை
பாத்திரங்கள்: செங்கணான், பொய்கையார்.]

[பொய்கையார் உயர்ந்ததோர் இருக்கையில் வீற்றிருக்கின்றார். செங்கணான் அருகே பணிவோடு நிற்கின்றான்.]

சேங்கணான்: [மனங் கசிந்து]

எந்தமை யாளுஞ் செந்தமிழ்ப் புலவோய்!
அருளே நலஞ்சா லுருவெடுத் தனையாய்!
அன்புநீர் பொழியும் ஆனந்த முகிலே!
இன்ப வுள்ளத் தெழில்தவ முனியே!
கல்விக் கடலே! செல்வக் குருவே!
மக்கண் மனப்பெரு மாட்சிசேர் நாட்டை
ஒக்கச் செங்கோல் ஓச்சியாள் அரசே!
செற்றந் தணிந்தெமை யுற்றுக் காத்தியோ!

(வலம்வந்து பாடுகின்றான்)

செறிந்தபொருள் செருக்குடையேன் சிறப்புடைய நின்னியல்பை
யறிந்திருந்தும் அறியாதே னயினேன் குருமணியே!
குருவருமை யறியாத கொடியவருட் கொடியேற்கும்
திருவருணீ பாலித்துச் சிறிதுகடைக் கணித்திகொலோ!

(வணங்குகின்றான்)

பொய்கையார்: [செங்கணானை எடுத்து ஆதனத்தி லிருத்தி]

அறிவொளி பெற்றனை யன்புகொள் சோழ!
வெறுவிய பொருளினி விழையலை; வேந்தே!
நின்பிழை பொறுத்தேன்; இன்புட னிருத்தி.
உலகநூன் மட்டில் நலமெனக் கற்றனை;
அறிவுநூ லனைத்தையு மறவொழித் திட்டனை;
இனிக்குன்ற மில்லை நினக்கறி யரசே!
உன்னைச் சிறப்பித் துரைப்பான் வேண்டி

வெள்ளை யாப்பினின் வியந்துநூல் செய்துளேன்;
கொள்ளுதி யதனைக் குற்றமில் கோவே!

சேங்கணன்: [கண்ணீர் சொரிந்து]

எனக்குஞ் சிறப்போ? என்பெரு மானே!
மனக்குற் றேவன் மாண்பினிற் செய்த
எனக்குஞ் சிறப்போ? இன்றமிழ்ப் புலவோய்!
நின்றிரு வாயா னென்றனைப் புகழ்ந்து
வாழ்த்தினை யென்னிற் பாழ்த்தயா னுய்ந்தேன்!
உயர்ந்தேன்! அம்ம! மயர்ந்தபுல் லறிவினேன்.
என்னையும் புகழு மந்நூல் யாதோ?

பொய்கையார்: [இளநகை யரும்பி]

நன்று நின் மாற்றம், நறுந்தமி ழண்ணல்!
இன்றமிழ்ப் பாவலர்க் கெல்லா மொருங்கே
எய்ப்பினில் வைப்பா யிருக்கு மன்னவ!
மெய்ப்பொருள் கண்டுநீ மேதக்கு வாழ்க.
திருக்கழு மலத்துச் செருக்கணின் வென்றியை
யுளவகை புனைந்து களவழி நாற்பதுப்
பெயரின் வகுத்தேன், அயர்வில் வேந்தே!

சேங்கணன்: [மகிழ்ந்து]

என்னுயிர்க் குறுதி யெனவெழுந் தருளிய
நல்லிசைப் புலவோய்! மெல்லிசை சான்றவந்
நூலின் பாச்சில நுவல்க, கற்றறி
மேலவர் புகழும் விந்தைநா வலனே!

பொய்கையார்: [இணங்கி]

இருந்தனை கேட்டி, அருந்தமி ழரசே!

[இங்ஙனம் சொல்லிப் பொய்கையார் கழுமலக் களக்காட்சியைப் பற்றித்தாம் பாடிய களவழி நாற்பதிலிருந்து சில வெண்பாக்களைப் படிக் காட்டினர்.]

சேங்கணன்: [களி கூர்ந்து]

நற்றேற னொழுகு நறுந்தமிழ்ப் பாடல்
கேட்டவென் செவியும் வேட்டவென் மனமும்
இன்புற் றெதனையு மேற்கில வாயின!
செவிக்கின் னுணவுஞ் சுவைக்கிருப் பிடமுமாங்

களவழி நாற்பதாங் கனிதமிழ் நூலென்
உளவழிப் புக்கங் குறையும், பெரும!

[எழுந்து வணங்குகின்றான்]

பொய்கையார்: (செங்கணனைக் கையாலெடுத்து)
இந்நூ லுட்கருத் திஃதெனக் கண்டியோ?
மெய்ந்நூ லறிவான் வேண்டிய வேந்தே!

செங்கணன்: [சிறிது சிந்தித்து]
கண்டேன், தேசிக! கண்டேன், தேசிக!

களத்தைப் புனைந்த கருத்தறிந் தேனஃ
துளத்தை யறுக்கு மொள்வா ளாமால்.
அந்தோ! தீயேன்! அந்தோ! தீயேன்!
என்னா னழிந்தவ ரெத்துணை வீரர்!
என்னா னழிந்தன வெத்துணைக் களிறு!

எத்துணை மாவோ! எத்துணைத் தேரோ!
அழிவு கருதிலேன்; அருளுங் கருதிலேன்;
இழிதக வுடைய வெனக்குமுய் வுண்டோ?
துன்புறுத் தாதுதா னின்புற்று வாழ்தலுந்
துன்புறுன் பிறரை யின்புறுத் துதலும்

உலக வாழ்க்கையி னுட்கருத் தாகும்.
கலகப் போர்செயல் கரிசுடைத் தையோ!
அறிந்தே னருளறம்; மறந்தேன் மருண்மறம்.
தன்னயங் கருதாத் தகையோய், போற்றி!
பொய்ப்பொருள் கடிந்த புலவோய், போற்றி!

மெய்ப்பொருள் கண்ட விமலா, போற்றி!
பிறர்நலந் தேடும் பெரியோய், போற்றி!

[வணங்கி எழுந்து]

அறிஞநீ எற்கிடு மாணை யென்னோ?

பொய்கையார்: [மன மகிழ்ந்து]
செந்நெறிப் பட்ட செங்கண் மாலே!
நின்னுளந் திருந்திய நேர்மைக் குவந்தேன்.

பற்றெனக் கொருகுறை மனத்திற் கிடக்கும்;
உற்றனக் குரைப்பதி லொன்றுந் தடையிலை:
மறைக்கோ ளனைத்து மயக்கற வுணர்ந்தோன்
சிறைக்கோட்ட முற்றவென் செய்யமா ணாக்கன்
சேரலர் தமையுஞ் சேரமான் சேரமான்

கணைக்கா லிரும்பொறைக் காவலன் றன்னைச்
சிறைவீடு செய்தி யோ? மறைநாடு மன்னே!

சேங்கணான்: [விரைந்து]
செய்தே னின்னே! செய்தேன் பெரும!
ஈதென் கைப்பொறி யிட்ட திருமுகம்;

ஏது மெண்ணலை யேற்றருள், குருவே!

குறிப்புரை

3. உருவக அணி.

6, 7. மக்கள் மனமாகிய காட்டை ஆளும் அரசே. ஒக்க: யாவர்க்கும் ஒப்ப.

8. செற்றம் -- கோபம்.

14. வெறுவிய -- பயனற்ற. விழையலை -- விரும்பாதே.

20. வெள்ளை யாப்பு – வெண்பா.

23. மனக் குற்றேவல் – மனம் இட்ட குற்றேவலை

26. பாழ்த்த – பாழ் ஆயின.

27. மயர்ந்த – மயங்கிய.

31. எய்ப்பினில் வைப்பு – தளர்ந்த காலத்தில் உதவ வைத்திருக்கும் சேமிப்பு.

32. மேதக்கு – மேம்பாடுற்று.

33. செருக்கண் நின் வென்றியை.

35. அயர்வு – தளர்ச்சி.

40. இருந்தனை – இருந்து (முற்றெச்சம்).

42. வேட்ட – விரும்பிய (வேள்: பகுதி).

46. 'புக்கு அங்கு உறையும்.'

58. துன்புறான் (முற்றெச்சம்) – தான் துன்பப்படாமல்.

61. கரிசு – குற்றம்.

67. என் + கு = எற்கு.

68. செங்கண் மால் – செங்கட் சோழன்; செங்கணான்.

72. மறைக்கோன் – வேதத்தின் உட்பொருள்.

74. சேரலர் தமையும் சேர் அ(ம்)மான் – பகைவரிடத்தும் விருப்பொடு சேர்கின்றவனாகிய அப்பெரியோன்.

76. வீடு – விடுதலை. மறை நாடும் – மெய்ஞ் ஞானத்தினை யடைய விரும்பும்.

வினாக்கள்

1. செங்கணான் இழைத்த தவறு யாது?

2. தன் தவற்றினை யுணர்ந்த சோழன் பொய்கையாரிடத்து எவ்வாறு முறையிடுகின்றனன்?

3. அவனது மன வுணர்ச்சியைக் கண்ட பொய்கையார் அவனை எவ்வாறு தேற்றினார்?

4. எய்ப்பினில் வைப்பா யிருக்கும் எனப் புலவர் குறிப்பது எதனை?

5. களவழி நாற்பதைக் கேட்ட செங்கணான் மகிழ்ந்து சொல்லிய யாவை?

6. 'களவழி நாற்பது' கூறுவது என்ன?

7. அந்நூலின் உட்கருத்து யாது?

8. சிறை வீடு பெற்றுச் சோழனின் மனமாற்றத்தையும் பெற்ற புலவரின் மனத்திற் கிடந்த குறை யாது?

9. இலக்கணப் பெயர் தருக:

(அ) சிறை வீடு செய்தியோ.

(ஆ) இருந்தனை கேட்டி.

(இ) ஏதம் எண்ணலை யற்றருள்.

பயிற்சி

இங்கு வந்துள்ள பகுதியை நம் சொந்த சொற்களில் கட்டுரை வாயிலாக வரைக.

---

6. பாஞ்சாலி சபதம்

[பாஞ்சால நாட்டு மன்னன் மகள் பாஞ்சாலி என்பவள் பாண்டவர்க்கு மனையாள். துரியோதனன் அரண்மனையில் பாண்டவர்க்கு முன்னிலையில், பாஞ்சாலி துகிலுரியப்பட்டபோது அவளைக் கண்ணன் காத்தருளினன். அவ்வமயம் அவள் செய்த சபதத்தின் வரலாறு கூறும் நூல் இது.

ஆசிரியர் சுப்பிரமணிய பாரதியார் அவர்கள் ஒரு மாகவி. திருநெல்வேலியைச் சேர்ந்த எட்டயபுரம் இவரூர். இவர் அந்தண மரபினர். கி.பி. 1882 முதல் 1921 வரை வாழ்ந்தவர். நமது நாட்டின் சுதந்தரப் போராட்டத்தில் விளங்கிய ஒரு வீரர் இவர்.]

வீமன் செய்த சபதம்

1. வீமன் எழுந்துரை செய்வான்:—"இங்கு
விண்ணவர் ஆணை; பராசக்தி யாணை;
தாமரைப் பூவினில் வந்தான்—மறை
சாற்றிய தேவன் திருக்கழ லாணை;
மாமக ளைக்கொண்ட தேவன்—எங்கள்
மரபுக்குத் தேவன் கண்ணன்பதத் தாணை:
காமனைக் கண்ணழ லாலே—சுட்டுக்
காலனை வென்றவன் பொன்னடி மீதில்

2. "ஆணையிட் டிஃதுரை செய்வேன்:—இந்த
ஆண்மை யிலாத்துரி யோதனன் றன்னை
பேணும் பெருங்கனல் ஒத்தாள்—எங்கள்
பெண்டு திரௌபதி யைத்தொடை மீதில்
நாணின்றி 'வந்திரு' என்றான்—இந்த
நாய்மக னாந்துரி யோதனன் றன்னை,
மாணற்ற மன்னர்கண் முன்னே,—என்றன்
வன்மையி னால்யுத்த ரங்கத்தின் கண்ணே,

3. "தொடையைப் பிளந்துயிர் மாய்ப்பேன்;—தம்பி
சூரத் துச்சாதனன் தன்னையு மாங்கே
கடைபட்ட தோள்களைப் பிய்ப்பேன்;—அங்குக்
கள்ளென ஊறுமி ரத்தங் குடிப்பேன்;
நடைபெறுங் காண்பிர், உலகீர்!—இது
நான்சொல்லும் வார்த்தையென்
றெண்ணிடல் வேண்டா;
தடையற்ற தெய்வத்தின் வார்த்தை;—இது
சாதனை செய்க, பராசக்தி!" என்றான்.

பாஞ்சாலி செய்த சபதம்

தேவி திரௌபதி சொல்வாள்:—'ஓம்,
தேவி பராசக்தி ஆணை யுரைத்தேன்;
பாவி துச்சாதனன் செந்நீர்,—அந்தப்
பாழ்த்துரி யோதனன் ஆக்கை இரத்தம்,

மேவி யிரண்டுங் கலந்து—குழல்
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல்முடிப் பேன்யான்;—இது
செய்யுமுன் னேமுடி யேன்,'என்
றுரைத்தாள்.

வினாக்கள்

1. பாஞ்சாலி சபதம் என அந்நூலுக்குப் பெயர் வரக் காரணம் என்ன?
2. காமனைக் கண்ணழலாலே சுட்டவன் யாவன்? வரலாறு தருக.
3. 'காலனை வென்ற' வரலாறு யாது?
4. துரியோதனன் அவையில் வீமன் விடுத்த சூளுரை யாது?
5. பாஞ்சாலியின் சூளுரை யாது?

IV

சிறு நூல்களும் பிறவும்

1. திருவாரூர் நான்மணி மாலை

[வெவ்வேறு வகையான நான்கு மணிகளை மாலையாய்த் தொடுத்தது போல வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா என்பவைகள் முறையே அந்தாதியாக அமைய நாற்பது செய்யுட்கள் பாடுவது நான்மணி மாலை யாகும். திருவாரூரின்கண் எழுந்தருளியுள்ள சிவனுரைப்பற்றிய நூலாதலின் திருவாரூர் நான்மணி மாலை எனப்பட்டது.

இதன் ஆசிரியர் குமரகுருபர சுவாமிகள் என்பவர். ஸ்ரீவைகுண்டம் என்னுமிடத்தில் சண்முகசிகாமணிக் கவிராயர்க்கும் சிவகாமசுந்தரி யம்மையார்க்கும் புதல்வராய்த் தோன்றியவர். சைவ வேளாள மரபினர். இவரது காலம் 17-ஆம் நூற்றாண்டு. திறமை சான்ற கவிஞர் இவர்.]

நேரிசை யாசிரியப் பா

ஒண்கதிர் பரப்புஞ் செங்கதிர்க் கடவுள்
வெயில்கண் டறியா வீங்கிருட் பிழம்பிற்
புயல்கண் படுக்கும் பூந்தண் பொதும்பிற்
காவலர்ப் பயந்து பாதபத் தொதுங்கிய
இருவே றுருவிற் கருவிரன் மந்தி
பொன்னிறம் பழுத்த பூஞ்சுளை வருக்கை
முன்னுறக் காண்டலு முளையெயி றிலங்க
மடித்தலத் திருத்தி வகிர்ந்துவள் ளுகிரால்
தொடுத்தபொற் சுளைபல வெடுத்துவாய் மடுப்பது

மானிட மடங்க றாணிடைத் தோன்றி
ஆடகப் பெயரி னவுணன்மார் பிடந்து
நீடுபைங் குடரி னிணங்கவர்ந் துண்டென
இறும்பூது பயக்கு நறும்பணை மருதத்
தந்த ணாரூ ரெந்தையெம் பெரும,

சிங்கஞ் சுமந்த செழுமணித் தவிசிற்
கங்குலும் பகலுங் கலந்தினி திருந்தாங்(கு)
இடம்வலம் பொலிந்த விறைவியு நீயும்
நடுவண் வைகு நாகிளங் குழவியை
ஒருவிரி னொருவிர் உள்ளநெக் குருக

இருவிருந் தனித்தனி யேந்தினிர் தழீஇ
முச்சுடர் குளிர்ப்ப முறைமுறை நோக்கி
உச்சி மோந்துமப் பச்சிளங் குழவி
நாறுசெங் குமுதத் தேறலோ டொழுகும்
எழுதாக் கிளவியி னேழிசை பழுத்த

இழுமென் குரல மழலைத் தீஞ்சொல்
சுவையமு துண்ணுஞ் செவிகளுக் கையவென்
பொருளில் புன்மொழி போக்கி
அருள்பெற வமைந்ததோ ரற்புத முடைத்தே.

2. மதுரை மீனாட்சியம்மை குறம்

[குறத்தி யொருத்தி குறி கூறுவதாக அமையும் பிரபந்தம் குறம் என வழங்கும். தலைவன்பால் விருப்புற்ற தலைவி யொருத்தியைக் கண்டு குறத்தி குறி சொல்லுவதாக இந்நூல் அமைதல் மரபு. இங்கே, சொக்கலிங்கப் பெருமான்பால் விருப்புற்ற மீனாட்சியம்மையைக் கண்டு குறத்தி குறி சொல்லுகின்றனள்.

ஆசிரியர்: குமரகுருபர சுவாமிகள்.]

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

செண்டிருக்கும் வடவரையிற் சேலிருக்கு மரசிருக்குந்
தென்ன ரீன்ற
கண்டிருக்கு மதுரமொழிக் கனியிருக்குந் துவரிதழங்
கயற்கட் பாவை

வண்டிருக்கு நறைக்கமல மலரிருக்கும்பரி புரத்தான்ஞ
மனத்துள் வைத்துக்
கொண்டிருக்குந் தமிழ்முனிவன் குடியிருக்கும்
பொதியமலைக் குறத்தி நானே.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

கொழுங்கொடியின் விழுந்தவள்ளிக்
கிழங்குகல்லி யெடுப்போம்
குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக்
கொடியில்வைத்துத் தொடுப்போம்
பழம்பிழிந்த கொழுஞ்சாறுந்
தேறலும்வாய் மடுப்போம்
பசுந்தழையு மரவுரியு
மிசைந்திடவே யுடுப்போம்
செழுந்தினையு நறுந்தேனும்
விருந்தருந்தக் கொடுப்போம்
சினவேங்கைப் புலித்தோலின்
பாயலிற்கண் படுப்போம்
எழுந்துகயற் கணிகாலில்
விழுந்துவினை கெடுப்போம்
எங்கள்குறக் குடிக்கடுத்த
வியல்பிதுகாண் அம்மே!

---

3. முக்கூடற் பள்ளு

[பள்ளர் என்பவர் உழவர். அவர்தம் பாட்டு 'பள்ளு' என்பது. முக்கூடல் என்னும் இடத்துள்ள பள்ளர்தம் பாட்டு 'முக்கூடற் பள்ளு' எனப்பட்ட தென்க. திருநெல்வேலி மாவட்டத்தில் சித்திரா நதியும் உப்போடையும் பொருநையுடன் கூடும் இடத்துள்ள தொரு விஷ்ணு தலம் முக்கூடல் எனப்படுகின்றது.

இந்நூலின் ஆசிரியர் என்னயினுப் புலவர் என்பவர். 17-ஆம் நூற்றாண்டினர். விஷ்ணு சமயத்தினர்.]

நாட்டு வளம்

கறைபட் டுள்ளது வெண்கலைத் திங்கள்
கடம்பட் டுள்ளது கம்பத்து வேழம்
சிறைபட் டுள்ளது விண்ணெழும் புள்ளு
திரிபட் டுள்ளது நெய்ப்படுந் தீபம்

குறைபட் டுள்ளது கம்பியர் அம்பி
குழைபட் டுள்ளது வல்லியங் கொம்பு
மறைபட் டுள்ளது அரும்பொருட் செய்யுள்
வளமை ஆகூர் வடகரை நாடே.

காயக் கண்டது சூரிய காந்தி
கலங்கக் கண்டது வெண்டயிர்க் கண்டம்
மாயக் கண்டது நாழிகை வாரம்
மறுகக் கண்டது வான்சுழி வெள்ளம்
சாயக் கண்டது காய்க்குலைச் செந்நெல்
தனிப்பக் கண்டது தாபத ருள்ளம்
தேயக் கண்ட(து) உரைத்திடுஞ் சந்தம்
சீவல மங்கைத் தென்கரை நாடே.

4. புறநானூறு

[புறப்பொருளைப்பற்றிய நானூறு செய்யுட்களைக்கொண்ட நூலாதலின் புறநானூறு எனப்பட்டது இந்நூல். எட்டுத் தொகையுள் ஒன்று இது.]

இளவெளிமான்

'அவர்(பெருஞ்சித்திரனார்) வெளிமானுழைச் சென்றார்க்கு வெளிமான் துஞ்சுவான், தம்பியைப் பரிசில் கொடு வென, அவன் சிறிது கொடுப்பக் கொள்ளாதுபோய்க் குமணனைப் பாடிக் குமணன் பகடு கொடுப்பக் கொணர்ந்து நின்று வெளிமானூர்க் கடிமரத்து யாத்துச் சென்று அவர் சொல்லியது.'

1. இரவலர் புரவலை நீயு மல்லை;
புரவலர் இரவலர்க் கில்லையு மல்லர்;
இரவல ருண்மையுங் காணினி; இரவலர்க்
கீவோ ருண்மையுங் காணினி; நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானையெம் பரிசில்;
கடுமான் தோன்றல், செல்வல் யானே.

திணை: பாடாண்டிணை துறை: பரிசில்விடை

குமணன்

'பெருஞ்சித்திரனார் குமணனைப் பாடிப் பரிசில் கொணர்ந்து மனையோட்குச் சொல்லியது.'

2. நின்னயந் துறைநர்க்கு நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க் கென்னா[து] என்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்து மென்னாது நீயும்
எல்லோர்க்குங் கொடுமதி, மனைகிழ வோயே,
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமண னல்கிய வளனே.

திணை: பாடாண்டிணை — துறை: பரிசில்

5. குறுந்தொகை

[குறுந்தொகை என்பது எட்டுத்தொகையுள் ஒன்று. அத்தொகை நூல்களுள் இதுவே முதலாவதாகத் தொகுக்கப்பட்டது. அகப்பொருளைப் பற்றிய ஆசிரியப் பாக்கள் நானூற்றொன்றனையும் கடவுள் வாழ்த்துச் செய்யுள் ஒன்றனையும் உடையது. பிற தொகைநூல்களைப் போலன்றி அடிகள் சிலவே யமைந்த பாக்களை யுடைமையின் குறுந்தொகை எனப் பெயரேற்றது.

இங்கே வந்துள்ள செய்யுளின் ஆசிரியர் கபிலர் என்ற பெரும் புலவ ராவர்.]

தலைவி தினைப்புனத்தே இறங்கிய கிளிகளைக் கடிய குளிர் என்னுங் கருவியைத் தெறித்தனளாக, அக்கருவி யோசை தலைவியினது பாட்டென்று மயங்கிய கிளிகள் எழாமல் அப்புனத்தேயே நின்ற செய்தி கூறுகின்றது இப் பா.

சுடுபுன மருங்கில் கலித்த ஏனல்
படுகிளி கடியும் கொடிச்சிகைக் குளிரே
இசையின் இசையா இன்பா ணித்தே;
கிளிதுவள் விளியென எழல்ஒல் லாவே;
அதுபுலந்(து) அழுத கண்ணே சாரல்
குண்டுநீர்ப் பைஞ்சுனைப் பூத்த குவளை
வண்டுபயில் பல்லிதழ் கலைஇத்
தண்டுளிக்(கு) ஏற்ற மலர்போன் றனவே.

6. மனோன்மணீயம்

[பாண்டி நாட்டு மன்னன் ஜீவக வழுதியின் மகள் மனோன்மணியைப் பற்றிய வரலாற்றினைக் கூறுவதால் இந்நூல் மனோன்மணீயம் எனப்பட்டது. இதன் ஆசிரியர் ராவ்பகதூர் P. சுந்தரம் பிள்ளை என்பவர். இவர் ஆங்கிலமுங் கற்றுப் பட்டம் பெற்ற செந்தமிழ்ப் புலவர். 19-ஆம் நூற்றூண்டின் பிற்பகுதியினர்.

வாணி என்பாள் மனோன்மணியின் உயிர்த்தோழி. அவள் நடராசன் என்பானைக் காதலித்திருந்தனள். ஒரு வாய்க்காற் கரையின்கண் தான் நடராசனோடு இருந்த சமயத்தில் நிகழ்ந்த தொன்றை வாணி மனோன்மணியினிடம் கூறி வருந்துகின்றனள்.

இங்கே வாய்க்காலின் வருணனை மிக அழகாக அமைந்துள்ளமை காண்க.]

(வாணி கூற்று)

ஒருநாள் அந்தியில் இருவரும் எதிர்ச்சையாக்
கடிபுரி கடந்துபோய், நெடுவயற் பாயும்
ஒருசிறு வாய்க்காற் கரைகண் டாங்கே,
பெருமலை பிறந்த சிறுகாற் செல்வன்
தெண்ணீர்க் கன்னி பண்ணிய நிலாநிழற்
சிற்றில் பன்முறை சிதைப்பவன் போன்று
சிற்றலை யெழுப்பச் சிறுமி முறுமுறுத்[து]
அழுவது போல விழுமிய பரல்மேல்
ஒழுகும் தீம்புன லோதையுங் கேட்டுப்
பழுதிலாப் பால்நிலா விழுவது நோக்கி
இருவரு மௌனமாய் நெடும்பொழு திருந்தோம்.
கரையிடை யலர்ந்த காவியொன் றடர்த்தென்
அருகே கொணர்ந்தெனக் கன்பா யீந்தனர்.
வருவதிங் கறியா மதியிலி யதனைக்
கண்ணிணை யொற்றிலன்; உள்மணம் முகந்திலன்;
மார்பொடு சேர்த்திலன்; வார்குழற் சார்த்திலன்;
ஆர்வமும் அன்பும் அறியார் மான
ஓடுந் தீப்புனன் மாடே விடுத்துச்
சிறுமியர் குறும்பு காட்டிச் சிரித்தேன்.
முறுவலோ டவரும் ஏதோ மொழிய
உன்னு முன்னரென் அன்னையுங் கடைந்தாள்,

தீமொழி பலவுஞ் செப்பினள். யானே
நாவெழ லின்றி நின்றேன், நண்பர்
மறுமொழி யொன்றும் வழங்கா தேகினர்.
அதுமுத லிதுகாறும் அவர்தமை, ஐயோ,
கண்டிலேன், இனிமேற் காண்பனே, அறியேன்.
ஒருமுறை கண்டென் உளக்கருத் தவருடன்
உரைத்தபோ தன்றி யொழியா துயிரே!

7. சிலேடை

[இருபொருள்படச் சொற்களை அல்லது தொடர்களை அமைத்துப் பாடுவது சிலேடை என்னும் சொல்லணி யாகும். இங்கே வருகின்ற கவிதையின் ஆசிரியர் சோக்கநாதப் புலவர் என்பவர்.]

நேரிசை வெண்பா

வெங்காயஞ் சுக்கானால் வெந்தயத்தா லாவதென்ன?
இங்கார் சுமந்திருப்பா ரிச்சரக்கை?—மங்காத
சீரகத்தைத் தந்தீரேல், தேடேன் பெருங்காயம்;
ஏரகத்துச் செட்டியா ரே!

8. ஒரு மருந்து

[சென்னை இராச்சியத்து அவைப் புலவரென்னும் மாண்பு பெற்ற நாமக்கல் கவிஞர் திரு. இராமலிங்கம் பிள்ளையவர்கள் இக்கவிதையின் ஆசிரிய ராவார்கள்.]

தெய்வத் தனம்மிக்க மானிட ஜென்மம்
தீமை வளர்த்துத் திகைப்பதும் என்னே!
கையிற் கடுங்கொலைக் கருவிகள் கொண்டு
கண்ணில் வெறிகொண்ட பார்வை மருண்டு
வெய்யிற் புழுவென்ன துடிதுடிப் போடும்
வேதனை பொங்கும் மனம்படும் பாடும்
வையத்தில் எங்கும் மனிதர்கள் யாரும்
வாழ்க்கையின் இன்பம் இழந்தனர் பாரும்.

எந்திர வித்தைகள் வேணது கற்ருேம்!
என்னென்ன வோபல புதுமைகள்
பெற்ருேம்!
சந்திரன் செவ்வாய் மண்டலத் தோடும்
சங்கதி பேச வழிகளைத் தேடும்
அந்தமில் லாப்பல சக்திகள் உற்றும்
அடிதடி சண்டையை விட்டிட மட்டும்
தந்திரம் ஒன்று படித்திலம் ஐயோ!
தரணியில் மக்கள் தவிப்பது பொய்யோ!

இத்தனைத் தீமைக்கும் ஏற்ற மருந்து;
இந்திய ஞானிகள் கண்ட மருந்து;
உத்தமர் யாரும் உவக்கும் மருந்து;
உலகத்தில் துன்பம் ஒழிக்கும் மருந்து;
சத்தியம் சாந்தம் இரண்டு சரக்கை
சமனிடை அன்பெனும் தேனில் குழைத்து
பத்தியம் தெய்வ நினைப்புடன் உண்டால்
பாருக்குள் பேருக்கும் போரிலை கண்டாய்.

9. மாலைப்போது

ஆயிரங் கோடிக் கப்பால் ஆங்கே
சேய்மை யிருந்து செங்கர நீட்டிப்
பொன்னொளி தன்னைப் பொலிவுட னிறைத்துப்
பூமிப் பெண்ணைப் போற்றிய பகலோன்,
பொருது முடித்த போர்மக னொருவன்
படையைச் செருகிப் பாசறை சென்ற
பான்மைய தாகப் பல்கதிர் சுருக்கி
ஏரிக் கப்பால் எழுந்து நின்ற
மலைப்புறத் தடங்க மாண்பொடு செல்ல,
அடுகளந் தன்னில் அகலச் சிந்தி
ஓடிய செந்நீர் உறைந்த காட்சி
ஆடியிற் பிடித்தென அருமையே தோன்ற
வானம் பிடித்ததன் வண்ணம் சிவக்க,
புறமுது கிட்டான் புதல்வன் என்ற

பொய்யுரை கேட்டு மெய்யென மயங்கி
அரிவாள் ஏந்தி அமர்க்களம் ஓடிய
தனிமூ தாட்டி, தன்னுடைத் தோன்றல்
விழுப்புண் ஏற்று விழுந்தது கண்டு
ககனத் தெறிந்த கையரி வாளெனச்
சந்திரன் ஒருபால் அந்தரந் தோன்ற,
விழுந்த பிணத்தை விரும்பிய நரியின்
விருப்பொலி கேட்டு வெருண்டு விரையும்
பருந்தினை யொக்கப் பகல்பொழு தோட
மாலைப் போது மண்மீ துற்றதே!

—பொன்னு. ஆ. சத்தியசாட்சி.

குறிப்புரை

1. திருவாரூர் நான்மணி மாலை.

1–14. செங்கதிர்க் கடவுள் – சூரியன். புயல்–மேகம். பொதும்பு – சோலை. பாதபம் – மரம். இருவேறு உருவின் – மனித இயல்பும் விலங்கியல்பு மாகிய இரண்டு வேறான இயல்புகளும் அமைந்த உருவினை யுடைய. மந்தி – பெண் குரங்கு. வருக்கை–பலாப்பழம். எயிறு – பல். வள்ளுகிரால் வகிர்ந்து – கூரிய நகத்தால் பிளந்து. மானிட மடங்கல் – நரசிங்கம். 'ஆடகப் பெயரின் அவுணன்' என்பவன் இரணியன். ஆடகம், இரணியம் – பொன். இரும்பூது – வியப்பு. பழனம் – வயல்.

15–28. கங்குல் உமாதேவிக்கும், பகல் சிவனார்க்கும் உவமைகள். 'நாகிளங் குழவி' என்றது முருகனை. எச்சினிர்: முற்றெச்சம். முச்சுடர் – சிவனாரின் கண்கள். எழுதாக் கிளவி – வேதம். ஐய: விளி.

2. மீனாட்சியம்மை குறம்.

செண்டு இருக்கும் வடவரை: கரிகாலன் செண்டா லெறிந்தமையால் அச்செண்டின் அடையாள மிருக்கும் இமயமலை. சேல் – பாண்டியருடைய அடையாளப் பொறி. தென்னர் – பாண்டியர். கண்டு – கற்கண்டு. துவர் இதழ் – சிவந்த உதடுகள். அம் கயல் கண் பாவை – உமாதேவி. இவர் தடாதகைப் பிராட்டி என மலயத்துவச பாண்டியற்குப் புதல்வியாய்த் தோன்றியமை குறித்துத் 'தென்னர் ஈன்ற......பாவை' என்றார். பரிபுரத் தாள் – சிலம்பணிந்த திருவடி.

விழுந்த – தாழ உண்டாகிய. தேறல் – தேன். பாயல் – படுக்கை. கயற்கணி – உமை. வினை – பாவம்.

3. முக்கூடற் பள்ளு.

கடம் – மதம். சிறை – சிறகு. கம்மியர் – கம்மாளர். வல்லி(அம்) கொம்பு – கொடிகளிலுள்ள இளங் கொம்புகள்.

மறுக – சுழல. தாபதர் – முனிவர். கக்கம் – சக்கணம்.

வினாக்கள்

(திருவாரூர் நான்மணி மாலை, மதுரை மீனாட்சியம்மை குறம், முக்கூடற் பள்ளு.)

1. குமர குருபரர், முக்கூடற் பள்ளு: குறிப்பு வரைக.

2. பூந்தண் சோலையில் பாதபத் தொதுங்கிய மந்தியின் செயலை ஒப்பனையுடன் விளக்குக.

3. சிவனாரும் தேவியாரும் முருகனுடன் மகிழ்ந்திருக்கும் செய்தியினைத் தெரிவிக்க.

4. குறத்தி பொதிய மலையினை எவ்வாறு சிறப்புச் செய்கின்றாள்?

5. குறக்குடிக் கடுத்த இயல்புகளாக அவள் கூறுவனவற்றை நும் சொற்களில் கூறுக.

6. "'முக்கூடற் பள்ளு' என்னும் பகுதியில் வந்துள்ள செய்யுள்களில் மறைத்துக் கூறப்படும் வளத்தை வெளிப்படை யாக்குக.

பயிற்சி

நீங்கள் வாழும் ஊரின் இயற்கை வளத்தைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

4. புறநானூறு.

1. பெருஞ்சித்திரனார் என்பவர் அன்பற்ற செல்வர்களை மதியாத தன்மானம் மிக்க ஒரு புலவர். இளவெளிமான் என்பான் வெளிமான் என்ற வள்ளலின் இளவல். துஞ்சுவான் – உறங்குவான். பகடு – ஆண் யானை.

குமணன் கடையெழு வள்ளல்களுக்குக் காலத்தாற் பிற்பட்டவன். முதிரமலைத் தலைவன்.

'காணினி' என்பதனை 'இனி காண்' என்க. கடிமரம் – காவல் மரம். எம் பரிசில் – எமக்குக் குமணன் வழங்கிய பரிசிலாகும். கடு மான் தோன்றல் – விரைவுடன் செல்லும் குதிரைகளையுடைய தலைவனே.

புரவலை, அல்லை: ஐ – முன்னிலை யொருமை விகுதி. செல் + வ் + அல் = செல்வல். அல்: தன்மை ஒருமை விகுதி.

2. நின் நயந்து – நின்னைக் காதலித்து. பல் மாண் கற்பின் நின் கிளை முதலோர் – பல்வகையிலும் மாட்சிமைப்பட்ட கற்பினை யுடைய நின் சுற்றத்து மூத்த மகளிர். கடும்பு – சுற்றம். யாழ: முன்னிலையசை. குறியெதிர்ப்பு – திரும்பவும் கொடுக்கப்படுவதற் கென ஓர் அளவோடு வாங்கப்பட்ட பொருள். இச்சொல் இன்று தென்னாட்டில் 'குறியாப்பு' எனச் சிதைந்து வழங்கும். 'நெடுமை' நெடுநாளாயினமையைக் குறித்தது. சூழாது – உசாவாமல். கொடுமதி: 'மதி' முன்னிலையசை. முதிரம் – முதிரமலை. இஃது இக்காலத்தே 'குதிரைமலை' என வழங்கப்படுவது.

பாடாண்டிணை யாவது, ஒருவனுடைய கீர்த்தி வலி கொடை தண்ணளி ஆகியவற்றை ஆராய்ந்து சொல்லுதல்.

5. குறுந்தொகை.

சுடுபுனம்: மரங்களை வெட்டிச் சுட்டு அவ்விடத்தே விதைத்துப் பயிர் காணும் கொல்லை. கலித்த ஏனல் – தழைத்த தினையிடத்தே. கொடிச்சி – குறிஞ்சி நிலத் தலைவி. குளிர்: கிளியோட்டுங் கருவிகளுள் ஒன்று. மூங்கிலை வீணைபோற் கட்டித் தெறிக்கும் கருவி இது. இசையின் இசை – இசைகளுள் சிறந்த இசை. பாணித்து – தாளத்தை யுடையது. விளி – பாட்டு. புலந்து – துன்புற்று. சாரல் குண்டு நீர் – மலைப்பக்கத்திலே யுள்ள ஆழமான நீரை யுடைய. குவளை – குவளையினது. கலைஇ: சொல்லிசை யளபெடை: கலந்து. துளிக்கு: உருபுமயக்கம்: துளியை. தலைவி அழுதமையால் அவள் கண்கள் நீர்த்துளியேற்று இதழ் கலந்த குவளை போல்வன வாயின.

6. மனோன்மணீயம்.

எதிர்ச்சையா – நினையாதபடி, திடீரென. தீம்புனல் – இனிய நீர். ஓதை – ஓசை.

வாய்க்கால் நீர் மீது மெல்லிய காற்று வீசிச் சிற்றலை எழுப்புகின்றது. இதற்கு ஒப்பனை, சிறுமி பண்ணிய சிற்றில்லைச் சிறுவன் ஒருவன் சிதைத்த லாகும். அவ்வாய்க்காலின் ஓசை, சிறுவன் செயலால் அழுகின்ற சிறுமியின் குரலை ஒக்கும். காவி – குவளை மலர். மான: உவம வுருபு. மாடு – பக்கம் (ஏழனுருபு).

7. சிலேடை.

வெம் + காயம் = வெங்காயம்; கொடிய தேகம். சுக்கானால்–சுக்குப்போ லுலர்ந்தால். தயம் – தீவினை. சரக்கு – உடல். சீர் அகம் – சீர்மை யினையுடைய மோட்ச வீடு. பெருமை + காயம் = பெருங்காயம். காயம் – இத்துலவுடல். ஏரகத்துச் செட்டியார் – திருவேரகத்தில் எழுந்தருளி யுள்ள முருகர்.

9. மாலைப்போது.

'ஆயிரங் கோடி' என்றது எண்ணிறந்த மைல்களை. பகலோன் – சூரியன். படை – போராயுதம். அடுகளம் – போர்க்களம். ஆடி – கண்ணாடி.. வானம் 'பிடித்து அதன் வண்ணம் சிவக்க' என்க. வண்ணம் – நிறம். விழுப்புண் – போரில் முகத்திலும் மார்பிலும் படும் காயம். ககனம் – வானம்.

இங்கே, அத்தமிக்கும் சூரியனுக்குப் பாசறை செல்லும் போர் வீரனும், செவ்வானத்திற்குக் குருதிக் களத்தைக் காட்டும் கண்ணாடியும், பிறைச் சந்திரனுக்கு மூதாட்டி எறிந்த அரிவாளும், பகலுக்குப் பருந்தும், மாலைக்கு நரியும் ஒப்பனைகள் ஆம்.

வினாக்கள்

(புறநானூறு, குறுந்தொகை, மனோன்மணீயம், சிலேடை, ஒரு மருத்து மாலைப்போது).

1. குறிப்பு வரைக:

இளவெளிமான், குமணன், குறுந்தொகை, மனோன்மணீயம், கடுபுனம், குளிர்.

2. இத்தொடர்களுக்குப் பொருள் தருக:

(அ) 'கடுமான் தோன்றல் செல்வல் யானே.'

(ஆ) 'கடும்பின் கடும்பசி தீர யாழநின் நெடுங்குறி யெதிர்ப்பை நல்கியோர்.'

(இ) 'சாரல் குண்டுநீர்ப் பைஞ்சுனை.'

3. இடஞ் சுட்டுக:

(அ) 'கடுமான் தோன்றல் செல்வல் யானே.'

(ஆ) 'எல்லோர்க்குங் கொடுமதி, மனைகிழ வோயே.'

(இ) 'கண்ணிணை யொற்றிலன்; உண்மனம் மூக்கிலன்.'

4. 'இரவலர் புரவலை நீயு மல்லை' எனப் பெருஞ் சித்திரனார் இள வெளிமானைக் கடிதற்குக் காரண மென்ன?

5. அவர் அவனைக் கடிந்து கூறியவற்றை நும் சொந்த சொற்களில் வரைக.

6. பரிசிலைக் கொணர்ந்த புலவர் இல்லக் கிழத்தியிடம் கூறுவ தென்ன?

7. கிளிகள் மயங்கியமைக்குக் காரணம் என்ன?

8. தலைவியின் புலந்த கண்களைக் கபிலர் எவ்வாறு ஒப்பனை செய் கின்றனர்?

9. சுந்தரம் பிள்ளை யவர்களின் வாய்க்கால் வருணனையை நும் சொற் களில் வரைக.

10. வாணியின் நெஞ்சக் கலக்கத்திற்குக் காரணம் என்ன?

11. உலகில் தோன்றியுள்ள பகைமை நோயை நீக்க இராமலிங்கம் பிள்ளையவர்கள் கூறும் மருந்து என்ன?

12. 'மாலைப்போது' என்ற கவிதையில் சந்திரனுக்குக் காட்டப்பட்ட ஒப்பனை யாது?

13. 'மாலைப்போது' வருணனையை நும் சொந்த சொற்களில் வரைக.

பயிற்சி

கட்டுரை வரைக:

1. பெருஞ்சித்திரனார் பெருமை.

2. இயற்கைக் காட்சிகள்.

உரை : பொதுப் பகுதி

திருவாரூர் திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்கள்

1. மனிதன்*

மனிதன் எவன்? மனித உடல் தாங்கினோர் அனைவரும் மனிதராவாரோ? பின்னை எவர் மனிதர்?

உலகத்திலே உயிர்கள் எடுக்கும் பிறவிகள் பல. அவைகளுள் சிறந்தது மனிதப் பிறவி. மனிதப் பிறவி விழுப்ப முடையதென்று கூறாத அறிஞரில்லை. பாரிடைத் தோன்றிய பலரும் "மனிதப் பிறவி விழுமியது" என்று ஒரு முகமாக உரைத்துப் போந்தனர்.

உலகில் ஒன்றைப்பற்றி ஒருமைக் கருத்து எழல் அரிது. அரிதில் ஒன்றெழுமேல் அஃது எத்தகைமையுடையதா யிருக்கு மென்று சொல்லவும் வேண்டுமோ? அஃது எவரும் ஏற்கத் தக்க உண்மை யுடையதா யிருந்தே தீரல் வேண்டும்.

மனிதப் பிறவியின் விழுப்பம்

மனிதப் பிறவியின் விழுப்பத்தைக் குறித்து யாண்டும் ஒரே கருத்து உலவுதல் வெள்ளிடை மலை. இஃதொன்றே மனிதப் பிறவியின் விழுப்பத்தை உறுதி செய்தற்குப் போதிய சான்றாகும்.

இவ்விழுமிய ஒருமைக் கருத்து நந்தமிழ்ச் சான்றோர் உள்ளத்திலும் முகிழ்த்திருக்கிறது. அவர் மனிதப் பிறவியின் மாண்பைப்பற்றி வாய்மலர்ந்த செம்மொழிகளிற் சில வருமாறு:—

---

* இது நம் தமிழ்ப் பெரியாரவர்களின் 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என்ற நூலிலிருந்து கொள்ளப்பட்டது.

"மனிதப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே"
"வாய்த்தது நந்தமக்கு ஈதோ
பிறவி மதித்திடுமின்"
"இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே"—அப்பர்
"அரிது அரிது மானுட ராதல் அரிது"—
ஔவையார்

பற்பல பிறவிகளுள் மனிதப் பிறவி மட்டுஞ் சிறந்து விளங்குதற்குக் காரண மென்னே? அதைச் சிறிது ஆராய்வோம்.

உயிர்கள் பல திறம். அவைகளில் எவ்வித வேற்றுமையும் இல்லை. உயிர்கள் உடலைப் பெற்ற பின்னரே அவைகளிடத்துப் பல திற வேற்றுமைகள் தோன்றுகின்றன. வேற்றுமை உயிரைப் பற்றியும் நிற்க வில்லை; உடலைப் பற்றியும் நிற்க வில்லை; உயிரும் உடலும் ஒன்றுபட்டு வாழ்க்கையுறுங் காலத்தே உண்டாகிறது.

உயிரும் உடலும் ஒன்றுபடுங் காலத்து அறிவு விளக்கம் பெறுகிறது. அவ்விளக்கம் உயிர்கள் புகும் உடலுக் கேற்றவாறும், அவ்வுடலுள் அரும்புங் காரணங்கட்குத் தக்கவாறும், மிளிர்ந்து மிளிர்ந்து படிப்படியாக விரிந்து வளர்கிறது. அவ்வவ் வளர்ச்சி தோறும் வேற்றுமை உற்றுக்கொண்டே போகிறது. இது பற்றியே உயிர்கள் கூட்டம் அறுவகையாக நம் முன்னோர்களால் பிரிக்கப்பட்டதுபோலும்.

தோல்காப்பியம்—பொருளதிகாரம்—மரபியலில் உயிர்கள் அறுதிறமாக வகுக்கப்பட்டிருப்பதைக் காண்க. அவை, ஓரறி வுயிர்களாகிய தாவர முதல் ஆறறி வுயிர்களாகிய மனிதர் ஈறாக உள்ளன. அவ்வுயிர்களிடை அறிவு விளக்கத்தில் முறை முறையே வேற்றுமை விளங்கல் கண்கூடு.

மனிதனுக்கு அடுத்தபடியாக உள்ளது விலங்கு. விலங்குக்கு ஐந்தறிவு உண்டு. மனிதனுக்கோ ஆறறிவு உண்டு. ஆறுவது அறிவே மன உணர்வு எனப்படும். மன உணர்வு விலங்குகளிடத்தும் ஏனைய உயிர்களிடத்தும் விளக்க மின்றிக் கிடக்கும். அவ்வுணர்வு, மனிதப் பிறவியிலேயே கூர்ந்து விளங்குகிறது. அது பகுத்தறிவு என்றுஞ் சொல்லப்படும்.

சுவை(ரசம்), ஒளி(ரூபம்), ஊறு(ஸ்பரிசம்), ஓசை (சப்தம்), நாற்றம்(கந்தம்) என்னும் ஐந்தறிவும் மனிதனுக்கும், விலங்குக்கும் பொதுவா யிருப்பன. பகுத்தறிவென்னும் மன உணர்வு மனிதப் பிறவியில் மட்டுங் கூர்ந்து விளங்குவது. இவ்வொன்றை மனிதன் சிறப்பாகப் பெற்றிருத்தலான் அவன் விலங்கினும் மேலாகப் போற்றப்படுகிறான். அவன் பிறவி விழுமிய தென்றுங் கொள்ளப்படுகிறது. இது பொது முறை. இதற்குப் புறனடையும் உண்டு.

"மனித உடல் தாங்கிய அனைவரிடத்தும் பகுத்தறிவு விளங்குகிறதா; அவ்வறிவு விளங்கப்பெற்ற எல்லாரும் அதன் வழி நின்றொழுகுகின்றனரா" எனில் இல்லை யென்க. சிலரிடம் பகுத்தறிவு விளங்குவதே யில்லை. அவ்வறிவு விளங்கப் பெறுவோருள்ளும் பலர் அதன் வழி நின்று ஒழுகுகிறா ரில்லை. இவ்விருவரும் ஓரினத்தவரே யாவர். இவரல்லாத பிறரே மனித ராவர்.

மக்கள், மாக்கள்

இக்காரணம்பற்றியே மனித வுடல் கொண்டோர் இரு திறமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார். ஒரு கூட்டத்தவர் மக்க ளெனப்படுவர்; மற்றொரு கூட்டத்தவர் மாக்க ளெனப்படுவர். முன்னவர் மன உணர் வென்னும் ஆறுவதறி வுடையவர். பின்னவர் அது விளங்கப் பெறாதவர். "மக்கள் தாமே ஆறறி வுயிரே" "மாவு மாக்களும் ஐயறி வினவே" என்பது தொல்காப்பியச் சூத்திரம்.

சரித்திரக் காலத்துக்கு முன்னரே நந்தமிழ் மக்கள் மெய்ப்பாட்டானும், அகத்திணையானும் உயிர்களின் புற நிகழ்ச்சிகளையும் உள் நிகழ்ச்சிகளையும் அளந்து, உயிர்க் கூட்டங்களை அவைகளின் அறிவு விளக்கத்துக் கேற்றவாறு வகுத்துத் தொகுத்திருக்கிறார்கள். அத்த கைய தமிழ் மக்களின் நுண்ணறிவு இதுகாலை "பாழ் பட்டதே" என்று இரக்கமுறுது வேறென் செய்வது? மனிதப் பிறவியில் விளக்கமுறும் மனவுணர் வென்னும் ஆறுவ தறிவு வழி நின்றொழுகுவோரே மனிதராவர். ஏனையோர் விலங்கனையா ரென்க.

மனிதன்

ஆறுவது அறிவு விளங்கப்பெற்று அதன் வழி நிற்கும் மனிதன் தன்னுயிர்போல் மன்னுயிரைப் பார்ப் பான். இரக்கமே அவன் உள்ளத்தில் குடிகொண்டு நிலவும். அவன் தனக்கென்று உலகத்தில் வாழான். தன் வாழ்க்கை மற்றவர்க்கே என்று அவன் கருதுவன். அவன் கொலை களவு கள் காமம் பொய் என்னும் ஐம் பெரும் பாவங்களுக்கு அஞ்சுவன். அவன் கரணங்க ளெல்லாம் அன்பு மயமாகப் பொலியும். விலங்கியல்பு அவனிடத்தில் தோன்றுதல் அருமை. அன்னான் பிற உயிர்களின் துன்பத்தைத் தன் துன்பமாகக் கொள்வன். இன்னோரன்ன இயல்பு வாய்ந்த ஒருவனையே மனிதன் என்று கூறலாம்.

மனிதப் பிறவியைப் பெற்றுள்ளோர் பலர் தமது உடலையே பொருளாகக்கொண்டு, தமது நலங்கருதி உல கத்தில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் விலங்கு போன்றவர்கள்; மாக்கள் எனப்படுவார்கள். அக்கூட் டம் உள்ள வரை உலகத்தில் போரும் பிணக்கும், நியாய மன்றங்களும் பெருகிக்கொண்டே போகும்.

இப்பொழுது உலகத்தில் பலர் மனிதச் சட்டை போர்த்துத் திரியினும், அன்னார் இன்னும் மனிதராய் வாழ்கின்றா ரில்லை. உலகத்தில் மக்கள் பெருகி மாக்கள் அருகுநாள் எந்நாள்?

அந்நாள் அணித்தோ? சேய்த்தோ? அதை அணித்தே காண்டல் கூடும். அது மனிதன் முயற்சியைப் பொறுத்து நிற்கிறது. மனிதன் முயற்சியெனில் கடவுள் என் செய்கிறார் என்று சிலர் கருதலாம். கடவுளைப்பற்றி உலவுந் தவறான எண்ணங்களுள் இஃதும் ஒன்று. கடவுள் துணை என்றும் ஒரு பெற்றியதாகவே யிருக்கிறது. அதன்கண் மாறுபாடு என்றும் உறுவதில்லை, அதை அடைய வேண்டுவது பகுத்தறிவு பெற்றுள்ள மனிதன் கடமை.

கடவுள் அங்கு இங்கு எனாதபடி எங்கும் நீக்கமற நிற்கும் பேரறிவு. அக்கடவுள் உண்மையை எங்ஙனம் உணர்வது? இயற்கையின் வாயிலாகவே அதன் உண்மையை உணரல் கூடும்.

உயிர் உடல்போலக் கடவுளும் இயற்கையும் இருக்கின்றன. இத்தொடர்பை நோக்கியே கடவுளை அப்பனென்றும், இயற்கையை அன்னையென்றும் புலவர்கள் கூறிப் போந்தார்கள்.

கடவுள் என்னும் நம் அப்பன், இயற்கை என்னும் நம் அன்னை வாயிலாகவே உயிர்களின் விளக்கத்துக்கு வேண்டப்படுங் கடன்களை ஆற்றியிருக்கிறான். இயற்கையின் வழி மனிதன் நிற்க நிற்க அவன் கடவுளின் அருட்டுணையைப் பெற்றுக்கொண்டே போவன். இயற்கைக்கு மாறுபட்டு நிற்பவன் அத்துணை பெறாது இடர்ப்படுவன். ஆகவே கடவுள் என் செய்வார்? கடவுள் செய்வதைச் செய்தே யிருக்கிறார்.

மன்பதை முற்றும் இயற்கை வழி நிற்கும் நாள் எந்நாளோ அந்நாளே அருளுலகம் முற்றும் மலரும் நாளென்க. அந்நாளை அணித்தே காண்டல் மனிதன் கொள்ளும் வாழ்க்கையைப் பொறுத்து நிற்கிறது.

வினாக்கள்

1. மனிதப் பிறவியினைப்பற்றிய கருத்தொருமைபற்றி ஆசிரியர் யாது கூறுகின்றனர்?

2. உயிரும் உடலும் ஒன்றுபடுங் காலத்து நிகழ்வது என்ன?

3. 'மனவுணர்வு' என்பது யாது?

4. பொதுமுறையாகக் கூறின் மனிதன்—விலங்கு வேறுபாடு யாது?

5. மனிதராவார் யார்?

6. ஆறாவது அறிவு விளங்கப் பெறும் மனிதரிடத்து விளங்கும் சிறப்பியல்புகள் யாவை?

7. இக்கட்டுரையில் கடவுளைப்பற்றி வெளியிடப்படும் கருத்துகள் யாவை?

பயிற்சி

'ஒழுக்கமே உயர்வு' என்னும் பொருள்பற்றி ஒரு கட்டுரை வரைக.

---

2. வெறுப்புப்பாயிரம்*

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சா. ஐயரவர்கள்

எந்த நூலாயினும் பலரிடம் சிறப்புப்பாயிரங்கள் பெற்று அவற்றோடு அதனை வெளியிடுதல் முற்காலத்து வழக்கம். அவை அதிகமாக இருப்பதை ஒரு பெரிய கௌரவமாக நினைத்து வந்தார்கள். ஒரு நூலுக்கு அதனிடத்துள்ள பொருட் சிறப்பால் மதிப்பு இருக்குமோ இராதோ அது வேறு விஷயம். தக்க வித்துவான்கள் சிறப்புப்பாயிரம் அளித்துவிட்டார்களானால் அந்த நூல் எல்லோராலும் மதிக்கப்பெறுவதாகும்.

நூல் இயற்றியவர் தக்க பண்டிதராக இருக்க வேண்டுமென்பது அவசியமன்று; பெரிய மனிதர்களுடைய பழக்கம் அவருக்கு இருந்தால் போதும். அவர்களைக்கொண்டு அங்கங்கே உள்ள வித்துவான்களிடம் சிறப்புப்பாயிரம் வாங்கச்செய்து சேர்ப்பார்கள். நூலாசிரியரை முன்னே பார்த்திராத வித்துவான்கள்கூட இடையே வந்து வற்புறுத்தும் கனவான்களுக்காகச்

* இவ்வரலாறு ஐயரவர்களின் "வித்துவான் தியாகராச செட்டியார்" என்னும் நூலிலிருந்து கொள்ளப்பட்டது.

சிறப்புப்பாயிரம் தருவார்கள். நூல் செய்தவர் அந்த நூலை இயற்றும் விஷயத்தில் தாம் மேற்கொள்ளும் உழைப்பைவிட அதிக உழைப்பை அதற்குச் சிறப்புப் பாயிரம் பெறுவதற்கு மேற்கொள்ளுவார். சில சமயங்களில் சில பாடல்களால் அமைந்த நூலுக்குப் பல பாடல்கள் சிறப்புப்பாயிரமாக இருப்ப துண்டு.

பெரிய வித்துவான்கள் சிறப்புப்பாயிரங்களைத் தகுதி அறிந்து அமைப்பார்கள். 'இன்னார் இன்ன நூலை இன்னார் கேட்க இயற்றினார்'' என்று மாத்திரம் சிலருடைய நூல்கள் விஷயத்திற் சொல்வார்கள். வேறு சிலருடைய விஷயத்தில் சிறப்புப்பாயிரமே ஒரு தனி நூலென்னும்படி சொற்சுவை பொருட்சுவை தோன்ற அமைப்பார்கள். வில்லிபுத்தூ ராழ்வார் பாரதத்திற்கு முன்னே உள்ள சிறப்புப் பாயிரமும், ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய சிறப்புப்பாயிரங்களிற் பலவும், அவருடைய மாணாக்கர்கள் அவர் முறையைப் பின்பற்றி இயற்றிய சில சிறப்புப்பாயிரங்களும் இவ்வகைக்கு உதாரணங்களாகும்.

இவ்வாறு அக்காலத்தில் சிறப்புப்பாயிரம் வாங்கும் முயற்சி அதிகமாக நிகழ்ந்தமையால் அதைச் சிறப்புப் பாயிர காலம் என்று சொல்லாம்.

சிறப்புப்பாயிரம் பெறும் முயற்சியில் ஈடுபட்டவர்களுடைய ஜபம் தியாகராச செட்டியாரிடம் பலியாது. செட்டியார் யாரிடமும் கண்டிப்பாகப் பேசுவார். செய்யுள் நன்றாக இல்லையானால் அந்த விஷயத்தை ஒளி மறைவில்லாமல் வெட்டென்று சொல்லிவிடுவார். ஆகையால் உண்மையான வித்துவான்களே சிறப்புப்பாயிரம் வேண்டுமென்று அவரை அணுகுவார்கள்.

இதற்கு மாறாக ஒருநாள் ஐயாத்துரை யென்பவர் சிறப்புப்பாயிரத்துக்காகச் செட்டியாரிடம் வந்தார். அவர் முன்பே பலமுறை செட்டியாரிடம் வந்து முயன்றும் இவர் சம்மதியாமையால் போய்விட்டார். அவர் ஓர்

அந்தாதி இயற்றியிருந்தார். இலக்கண இலக்கியங்களை ஆராய்ந்து மிகவும் சிரமப்பட்டு அந்தப் பிரபந்தத்தைச் செய்ததாகச் செட்டியாரிடம் சொல்லி எப்படியாவது ஒரு சிறப்புப்பாயிரச் செய்யுள் வேண்டுமென்று மன்றாடினார். அதில் உள்ள குறைகளைக் கண்டு செட்டியார் கொடுக்க வில்லை. பிறகு ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் சென்று அவர் மனம் உருகும்படி பேசி ஒரு பாடல் கேட்டார். ஏழைகளிடத்தில் மிக்க கருணையுள்ள அப்புலவர்பிரான் மனமிரங்கி ஒரு செய்யுள் செய்து கொடுத்தார். அந்த வித்துவானுக்கு உத்ஸாகம் கட்டுக் கடங்காமல் பெருகியது. 'இதைக் காட்டித் தியாகராச செட்டியாரிடமும் சிறப்புப்பாயிரம் வாங்கிவிட்டுத்தான் மறு காரியம் பார்ப்பது,' என்ற உறுதி பூண்டு கும்ப கோணத்திற்கு வந்தார்.

செட்டியாரைப் பார்த்து, 'நான் எவ்வளவோ வித்துவான்களிடம் சிறப்புப்பாயிரம் வாங்கியிருக்கிறேன், உங்களுக்குத்தான் மனம் இரங்க வில்லை. உங்கள் சிறப்புப்பாயிரம் இல்லாவிட்டால் எனக்குப் பெருங் குறையாகவே இருக்கும். இந்தப் பிரபந்தத்தில் குற்றம் இருக்கலாம். தாங்கள் சொல்லுகிறபடி அவற்றைத் திருத்திக்கொள்ளுகிறேன். எப்படியாவது ஒரு பாடல் செய்து தந்து என்னை ஆதரிக்க வேண்டும்' என்றார்.

'அவ்வளவு வித்துவான்கள் கொடுத்திருக்கிறார்களே; பின்னும் என்னுடையது எதற்காக?' என்று கேட்டார் செட்டியார்:

'அப்படிச் சொல்லக்கூடாது. பெரிய வித்துவான்கள் கொடுத்திருக்கிறார்களென்பது வாஸ்தவந்தான். உங்கள் குருவாகிய மகாவித்துவான் பிள்ளையவர்களே கொடுத்திருக்கிறார்கள்; ஆதலால் தாங்களும் கொடுக்க வேண்டும்.'

'என்ன! உண்மையாகவா? எங்கே அதைக் காட்டும்' என்று பரபரப்புடன் செட்டியார் கேட்டார். வித்துவான் எடுத்துக் காட்டினார்.

செட்டியாருக்குப் பிள்ளையவர்களுடைய கருணையின்மேல் கோபம் வந்தது. சிறிது நேரம் யோசித்தார். "சரி, இதோ ஒரு பாடல் சொல்கிறேன்; எழுதிக் கொள்ளும். நீர் நல்ல இலக்கணப் பயிற்சி உடையவரானால் இந்தச் செய்யுளில் அருமையான இலக்கணப் பிரயோகங்கள் இருப்பதைக் காணலாம்" என்று சொல்லிவிட்டுப் பின்வரும் செய்யுளைச் சொன்னார்:

"ஐயாத் துரையென்பா னந்தாதி யொன்றினிது
செய்யாக் கொடுத்தான் திரைப்புவிக்கே—மெய்யாக
மேலோர்செய் அந்தாதி மேன்மை
விளங்கிடப்பன்
னூலோராப் புல்லறிவி னால்."

இந்தப் பாடலை வித்துவான் எழுதிக்கொண்டு வாசித்தார்.

"விஷயம் விளங்குகிறதா?" என்று கேட்டார் செட்டியார்.

"ஒருவாறு விளங்குகிறது. பின் இரண்டடிகளில் தான் சந்தேகம்—"

'தெரியுமே, அங்கே உள்ள இலக்கணப் பிரயோகம் உமக்கு விளங்க வில்லைபோல் இருக்கிறது. சரி, பாட்டு முழுவதுக்குமே அர்த்தம் சொல்கிறேன், கேளும்' என்று இவர் ஆரம்பித்தார்.

'ஐயாத்துரை யென்பான்—ஐயாத்துரை என்று சொல்லப்படுபவன். இங்கே, என்பான் என்பதற்கு, என்று சிறப்பிக்கப்படுவ னென்பது அர்த்தம். பழைய உரைகளில் ஊரெனப்படுவது உறையூரென்று உதாரணம் காட்டியிருப்பதை நீர் படித்திருக்கலாமே!'

வித்துவான் படித்தாரோ படிக்கவில்லையோ சந்தோஷத்தினால் பல்லை இளித்துக்கொண்டே, 'ஆமாம்' என்றார்.

'அந்தாதி ஒன்று—ஓர் அந்தாதிப் பிரபந்தத்தை. ஒன்று என்பதைக் கவனியும். மற்ற எல்லாவற்றைக்காட்டிலும் சிறந்து தனியே புகழ்பெற்று நிற்பது; ஆகையால் ஒன்று என்று சொல்லப்பட்டது.'

'நன்ருயிருக்கிறது' என்று தலையை அசைத்தார் நூலாசிரியர்.

'இனிது செய்யாக் கொடுத்தான் திரைப்புவிக்கே: திரைப்புவிக்கு—கடல் புடைசூழ்ந்த உலகத்திற்கு உபகாரமாக, இனிது செய்யா—இனிமையாகச் செய்து, கொடுத்தான்—வழங்கிஞன். உம்முடைய செய்யுள் உலகமெல்லாம் பரவிப் புகழடைவதற்கு ஏற்ற தென்பதைத் திரைப்புவிக்கே என்ற பாகம் குறிப்பிக்கின்றது. செய்யா என்பது செய்து என்ற அர்த்தத்தில் வரும் வினையெச்ச மென்பது தெரியு மல்லவா?'

'ஆமாம் தெரியுமே' என்ருர் வித்துவான்.

'மெய்யாக—உண்மையாக, மேலோர் செய் அந்தாதி மேன்மை விளங்கிட—பெரியோர்கள் இயற்றிய அந்தாதிகளின் சிறப்பெல்லாம் இந்த அந்தாதியிலே விளங்கும்படி, பல அந்தாதிகளில் உள்ள பலவகை நயங்களும் இதில் உள்ளன என்பது கருத்து. இவ்வளவு சிறப்புப் போதாதா?'

'எல்லாம் உங்கள் பேரன்பு. உங்கள் வாக்கின் பெருமையை நான் சொல்லவேண்டுமா?' என்று குதூகலத்தோடு வித்துவான் சொன்ஞர்.

'பன்னூல் ஓரா—பல நூல்களை ஆராய்ந்து, புல்—அதனுற் பொருந்திய, அறிவினல்—கல்வியறிவினல். ஓரா என்பது செய்யா வென்னும் வாய்பாட்டு வினையெச்சம். புல்லறிவு வினைத்தொகை. தெரிந்ததா?'

'தெரிந்தது.'

'ஆகவே இந்தப் பாட்டினால் உம்முடைய நூலா ராய்ச்சியையும் அறிவையும் சிறப்பித்துப் பாராட்டியி ருக்கிறேன்' என்று செட்டியார் தம் பிரசங்கத்தை முடித் தார்.

அந்த வித்துவான் சந்தோஷத்தால் பூரித்துப் போனார். பாவம்! அந்தச் செய்யுளை விஷமமாகச் செய்து கொடுத்ததாக எண்ண முடியாதபடி செட்டியார் பொருள் சொல்லி அவரை மயக்கி அனுப்பிவிட்டார். அந்தப் பாட்டுச் சிறப்புப்பாயிரமாக இராமல் வெறுப்புப் பாயிரமாக இருப்பதை அந்த மனிதர் உணரவே இல்லை.

ஐயாத்துரை மறுநாளே திருவாவடுதுறைக்கு வந்து செட்டியார் அளித்த செய்யுளைப் பிள்ளையவர்களிடமும் அவருடைய மாணாக்கர்களிடமும் காட்டி மகிழ்ந்தார். நாங்கள், செட்டியார் வேண்டு மென்று அவ்வித்து வானைக் குறைவாகச் சொல்லியிருத்தலை அறிந்து உள் ளுக்குள்ளே சிரித்தோம். வித்துவானிடம் ஒன்றும் சொல்ல வில்லை. அந்த வாரம் சனிக்கிழமை யன்று செட்டியார் மடத்திற்கு வந்தார். பிள்ளையவர்களிடம், "யார் வந்து கேட்டாலும் சிறப்புப்பாயிரம் கொடுத்து விடுகிறீர்கள். எனக்கு அது கழுத்தறுப்பாக முடிகிறது. எந்த மடையனாவது தப்புந் தவறுமாக எதையாவது பாடிக்கொண்டு வந்து சிறப்புப்பாயிரம் வேண்டு மென்று கேட்கிறான். நான் கண்டிப்பாக மறுத்து விடுகிறேன். உடனே இங்கே ஓடிவந்து உங்களிடம் அழுது புலம்பிக் கேட்கிறான். நீங்கள் சிறப்புப்பாயிரம் கொடுத்துவிடு கிறீர்கள். அவன் அதைப் பெற்றுக்கொண்டு சும்மா போகிறானா? அதை எடுத்துக்கொண்டு என் முகத்துக்கு நேரே நீட்டி, 'உங்கள் குருவே கொடுத்திருக்கிறபோது நீங்கள் பிரமாதப்படுத்திக்கொள்கிறீர்களே' என்கிறான். 'அரவு யர்த்தோன் கொடுமையினும் முரசுயர்த்தோய் நினதருளுக் கஞ்சினேனே' என்று பீமன் சொன்ன

வார்த்தையை நான் சொல்லவேண்டி யிருக்கிறது. உங்கள் கருணை என்னைத் தர்ம சங்கடத்திற்கு உள்ளாக்குகிறது" என்று படபடப்பாகப் பேசினார்.

'அது கிடக்கட்டும்; ஐயாத்துரைக்கு நீ என்ன, அப்படிப் பாடிக் கொடுத்தாய்?' என்று பிள்ளையவர்கள் கேட்டார்கள்.

'பின்னே என்ன செய்வது. அவன் அதில் இருக்கிற விஷயம் இன்ன தென்று தெரியாமலே உத்ஸாகத்தோடு வாங்கிக்கொண்டு போய்விட்டான். நாளைக்கு யாராவது அந்தப் பாட்டின் உண்மைப் பொருளைச் சொன்னால் பிறகு என் பக்கமே திரும்பிப் பார்க்கமாட்டான்' என்று விடை யளித்தார் செட்டியார்.

'அந்தப் பாட்டினால் அவரை எப்படித் திருப்திப் படுத்தினாய்?' என்று ஆசிரியர் கேட்டார்.

செட்டியார் தாம் அவருக்குச் சொன்னபடி பொருளைச் சொல்லிக் காட்டினார். அருகில் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த நாங்கள், "அதன் உண்மைப் பொருளையும் உங்கள் வாயாலேயே சொல்லி விடுங்கள்" என்று வேண்டிக்கொண்டோம். அவர் சொல்லத் தொடங்கினார்:

'ஐயாத்துரை என்பான்—ஐயாத்துரை யென்னும் அநாமதேயப் பேர்வழி, அந்தாதி ஒன்று—அந்தாதி ஒன்றை, இனிது செய்யா—இனிமையாகச் செய்யாமல் (பல குற்றங்களுடன் இயற்றி), திரைப்புவிக்கே கொடுத்தான்—இந்த மண்ணில் போடுவதற்குத் தகுதியானபடி கொடுத்தான் மெய்யாக—உண்மையாக, மேலோர் செய் அந்தாதி மேன்மை விளங்க—இந்த நூலின் சிறுமையாலே முன்னோர்கள் இயற்றிய அந்தாதிகளின் மேன்மை நன்றாகப் புலப்படும்படி, பன்னூல் ஓராப்புல் அறிவினால்—பல நூல்களை ஆராயாத புன்மையான

அறிவினால். படிக்காத மூடன்; அவன் பிரபந்தம் மண்ணிலே எறியத்தான் ஏற்றது என்பது கருத்து.'

இப்படிச் சொல்லி முடிந்தவுடன் முன்னே அவர் சொன்ன அர்த்தத்துக்கும் இதற்கும் எவ்வளவு மாறு பாடு உள்ள தென்பதை அறிந்து விழுந்து விழுந்து சிரித்தோம்.

வினாக்கள்

1. முற்காலத்தில் சிறப்புப் பாயிரம் பெறும் வழக்கத்தினைப்பற்றி எழுதுக.

2. அக்காலத்தே பெரிய வித்துவான்கள் சிறப்புப்பாயிரம் எவ்வாறு வழங்கினார்கள்.

3. தியாகராச செட்டியாருடைய குணவிசேடத்தினைப்பற்றி எழுதுக.

4. ஐயாத்துரை என்பார் தம் அந்தாதி நூலுக்குச் செட்டியாரவர்களிடம் சிறப்புப் பாயிரம் பெற்ற வரலாற்றினை வரைக.

5. தாம் செய்த பாயிரப் பாட்டுக்குச் செட்டியாரவர்கள் ஐயாத்துரையிடம் சொன்ன பொருள் யாது?

6. அவர்கள் பிள்ளையவர்களின் மாணாக்கரிடம் அப்பாடலுக்குச் சொன்ன உரை யாது?

பயிற்சி

'ஆசிரியரும் மாணவரும்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

---

3. திருக்குறள் உவமைத்திறம்*

பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள்

உலகில் வழங்கி வருகின்ற ஒவ்வொரு மொழியிலும் நூல் இயற்றுகின்ற புலவர்கள் பலவகை அணிகளை ஆங்காங்கு அமைத்துத் தமது நூலை அழகு செய்வது வழக்கம். அவ்வாறே தமிழ் மொழியிலும் நூல் எழுதப்போந்த புலவர்கள் சிந்தைக்கும் செவிக்கும் இன்பம் தருவனவாகிய பலவகை அணிகளை அமைத்து

*இக்கட்டுரை 'திருவள்ளுவர் நூல்நயம்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. சென்னை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் வெளிவிடப்பட்டது இந்நூல்.

அழகு செய்துள்ளார்கள். இத்தகைய அணிகளில் உவமை அணி என்பதே சிறந்த தாகும்.

உவமை அணியின் தன்மை

ஒரு நூலாசிரியர் தாம் எடுத்துக்கொண்ட பொருளை இனிது விளக்கி மேம்படுத்தும் பொருட்டு அதனோடு மற்றொரு தெரிபொருளை ஒப்பிடும் பான்மையே உவமை யென்று சொல்லப்படும். இத்தன்மை வாய்ந்த அணி பலவகையாக இலக்கியங்களில் பயின்றுள்ளது.

சங்க நூல்களும் பின் நூல்களும்

உவமை அணியை ஆளும் தன்மையில் சங்க மருவிய நூல்களுக்கும், பிற்காலத்து நூல்களுக்கும் பெரிதும் வேற்றுமை காணப்படுகின்றது. சங்க நூல் களில் காணப்படுகின்ற உவமைகள் பெரும்பாலும் மிகைபடாமல், எடுத்துக்கொண்ட பொருளை இனிது மனத்தில் விளக்குகின்றன. ஆனால் பிற்காலத்துச் சிலவற்றில் ஆளப்பட்டுள்ள உவமைகள் வரம்பு இகந்து மிகைபட்டு வனப்பின்றி அமைந்திருக் கின்றன.

சாதாரணப் பொருளை உவமையாகக் கூறல்

தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் அமைத் திருக்கின்ற உவமைகள் பெரும்பாலும் ஆழமும் அழ கும் உடையனவாய், நவில்தோறும் நமக்கு இன்பம் தந்து மகிழ்விக்கின்றன. உவமைக்காக எடுத்துக் கொள்ளும் பொருளும், எப்போதும் நம்மைச் சுற்றிலும் காணப்படும் சாதாரணப் பொருள்களாகவே இருக்கக் காண்கின்றோம். இத்தகைய சாதாரணப் பொருள்களைக் கொண்டு உயரிய உண்மைகளை ஆசிரியர் விளக்கும் திறம் கண்டு மகிழ்வதற் குரியதாகும். உலகப் பொருள் களை ஒரு புலவர் பார்ப்பதற்கும், மற்றையவர்கள் பார்ப் பதற்கும் பெரிதும் வேற்றுமை யுண்டென்று அறிவுடை யோர் கருதுகின்றார்கள். மற்றைய மக்களுக்குச் சாதா

ரணப் பொருள்களாகவே தோன்றும் உலகப் பொருள்கள் புலவர்கள் மனத்தில் மாண்புடைய கருத்துக்களையும், எண்ணங்களையும் எப்பொழுதும் எழுப்புவனவாகும். நறுமணங் கமழும் நந்தவனத்தில் செல்லும் ஒருவன், அதன்கண் அழகிய பல நிறங்களோடு அமைந்து விளங்கும் மலர்களைக் கண்டு மகிழ்வான். அம்மலர்களின் இனிய மணத்தை நுகர்ந்து இன்பமடைவான். ஆனால் ஒரு புலவன் அந்நந்தவனத்தில் செல்வானானால், அங்கு அவன் கண்ணெதிரே தோன்றும் ஒவ்வொரு மலரும் இறைவனது பெருங் கருணைத் திறத்தையும் பேராற்றலையும் விளக்கிக் காட்டும் விழுமிய பொருளாக அமையும். மலரில் அமைந்து விளங்கும் மணமானது இறைவனுடன் இரண்டறக் கலந்த ஆன்றோர் தன்மையை அறிவுறுத்தி நிற்கும். இதுவே கற்றோர் ஒரு பொருளைக் காண்பதற்கும், மற்றோர் அதனைக் காண்பதற்கும் உள்ள வேற்றுமையாகும்.

தலைமயிரும் இழிந்த மக்களும்

இத்தன்மையை நாயனார் குறளில் நன்கு காணலாம். தலையினின்றும் மயிரானது பிரிந்து கீழே விழுவதை நாம் ஒவ்வொரு நாளும் கண்டிருக்கின்றோம். ஆனால் அக்காட்சி நம்முடைய மனத்தில் ஓரெண்ணத்தையும் எழுப்பியதில்லை. ஆனால் இப்பொருளை உவமையாகக் கொண்டு நம் ஆசிரியர் ஓர் உயர்ந்த உண்மையை வெளியிடுகின்றார்.

> தலையின் இழிந்த மயிர்அனையர் மாந்தர்
> நிலையின் இழிந்தக் கடை

என்னும் குறளில் கண்ட உவமையைச் சிறிது கருதுவோம். மக்களாய்ப் பிறந்தவர்கள், தமக்குரிய நிலையினின்றும் தவறுவார்களானால், அவர்கள் தலையினின்றும் இழிந்த மயிரினை ஒப்பார்கள் என்பது இக்குறளின் கருத்தாகும். மக்களாய்ப் பிறந்தவர்கள் தமது உயர் பிறப்பிற்கு உரிய ஒழுக்கத்தில் தவறாதவர்களாய், தமக்

குரிய நிலையில் வழுவாது இருப்பார்களேயானால், எல்லாராலும் போற்றப்படுவார்கள். ஆனால், மக்கள் தம் நிலையினின்றும் தவறுவார்களாயின், எல்லாராலும் அவமதிக்கப்பட்டு இழிவடைவார்கள். தலையி லுள்ள மயிரானது தனக்குரிய உயர்ந்த இடத்தில் இருக்கு மளவும், நறுநெய் பூசி, நன்மலர் சூடி, பூவும் புகையும் மேவிய விரையும் பொருந்தித் திகழும். ஆனால் அம் மயிரானது, தன்னிலையினின்றும் தவறிக் கீழே விழு மானால் தனது வளமும் வனப்பும் இழந்து, காலால் மிதியுண்டு, புழுதியில் விழுந்து, துடைப்பத்தால் புழைக்கடையில் தள்ளுதற்குரிய தன்மை எய்தும். இவ்வுவமையின் பொருத்தமும் உண்மையும் தெளிவாக விளங்குகின்றது.

உறங்கலும் விழித்தலும் இறத்தலும் பிறத்தலும்

இன்னும் ஓர் உவமையை எடுத்துக்கொள்வோம். உறங்குவதும், விழிப்பதும் நாம் ஒவ்வொருவரும், ஒவ்வொரு நாளும் செய்கின்ற தொழில்களாம். சிலர் தம் மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றில், ஒரு நாளிலேயே பலமுறை உறங்குவதும் விழித்தலும் உண்டு. ஆயினும் அந்நிகழ்ச்சி நம் மனத்தில் யாதோர் அரிய கருத்தையும் தூண்டியதில்லை. ஆனால் நம் தெய்வப் புலவர், இவ்வியற்கை நிகழ்ச்சியைக்கொண்டு, விளக்குதற்கரிய மறுபிறப்புண்மையை நன்கு விளக்கு கின்றார்.

> உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி
> விழிப்பது போலும் பிறப்பு.

மக்களுக்கு இவ்வுலகில் இறத்தலும், பிறத்தலும், இயல்பாகவே மாறி மாறி வருகின்றன. பிறந்தவர் இறத்தலும், இறந்தவர் மீண்டும் பிறத்தலும், உறங்கு வதும் பின் உறக்கத்தினின்றும் விழித்தலும் போலவே இருக்கின்றன. ஒருவன் உறங்கும் காலத்தில், அவ னுடைய ஐம்பொறிகளும் அயர்ந்து, உணர்வு அ

றிருந்தாலும், மனம் அயராத நிகழ்ச்சி யுடையதாய் இருத்தல்போல, 'இறக்கும்பொழுது உடல் ஒன்றே போன்றி ஒழியுமன்றி, அவ்வுடம்பில் தங்கியிருந்த உயிர், அழியாது மறு பிறப்பில் சென்று சேரும்.' இவ்வுவமையின் நயத்தை உணர்ந்தே, மணிமேகலை நூல் செய்த சீத்தலைச் சாத்தனர்,

பிறந்தவர் இறத்தலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்றது உண்மையின்,

என்று திருக்குறள் உவமையையே அமைத்துத் தம் நூலை அழகு செய்தனர்.

கை மானம் காத்தலும் நண்பன் துன்பங்களைதலும்

இன்னும் மற்றொரு எளிய உவமையால் நாயனார் நட்பின் திறத்தினை நன்றாக எடுத்துரைத்தார்.

• உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

ஒருவனது மானத்தைக் காக்கின்ற ஆடை நெகிழ்ந்து விடுமாயின், கையானது விரைந்து சென்று அவிழ்ந்த ஆடையைக் கட்டுவதை நாம் ஒவ்வொருவரும் கண்டிருக்கின்றோம். இதனை உவமையாகக் கொண்டு நட்பின் இயல்பை நாயனார் விளங்கவைத்தார். ஒருவன் அரையில் கட்டியிருக்கும் ஆடை அவிழ்ந்து விழுமேயானல், அவ்வரைக்கு வந்த மானத்தைத் தனக்கு வந்ததாக எண்ணி, கையானது விரைந்து சென்று உடையை மறுபடியும் உடுத்து மானங் காக்கும். அதுபோல, ஒருவன் துன்பத்தால் வருந்துவானாயின், அவனுக்கு நேர்ந்த துன்பத்தைத் தனக்கு நேர்ந்ததாக நினைந்து விரைந்து சென்று அத்துன்பத்தைக் களைதலே நண்பனது தன்மையாகும். மெய்வேறு கைவேறு என்னும் வேற்றுமை யின்றி மெய் தானடைந்த மானத்தைக் கை தானகவே சென்று காத்தல்போல, அவன் வேறு, தான் வேறு என்னும் உணர்ச்சியின்றி அவனே தானாய்த் தானே யவனாய் எண்ணி, அவன் வேண்டிக்

கொள்ளாத நிலைமையில், தானே விரைந்து சென்று துயர் களைதல் நண்பனது தன்மை யாகும். இவ்வாறு உலகில் ஒவ்வொருவரும் அறிந்த ஒரு நிகழ்ச்சியைக் கொண்டு நாயனர் ஓர் உயரிய உண்மையைத் தெளிவாக விளக்கியுள்ளார்.

மணமற்ற மலர்

இன்னும், நன்றாகப் பல நூல்களைப் படித்திருந்தும் பேசுந்திறமை அமையப்பெறாத மக்களைப்பற்றிப் பேசவந்த நாயனர்,

இணரூழ்த்தும் நாறா மலர்அனையர் கற்ற(து)
உணர விரித்துரையா தார்,

என்று கூறுகின்றார். கொத்துக் கொத்தாய் மிக அழகாக மலர்ந்திருக்கும் பூக்கள் மணமில்லாதிருந்தால் பயனழிதல் போல, தாம் கற்ற பொருளை எடுத்துச் சொல்லும் இயல் பில்லாதவர்கள் பயனற்றவராவார்கள் என்பது இக்குறளின் பொருளாகும். ஒரு மலரைக் காணும்பொழுது, அதனது அழகிய இதழ்களையும், நிறத்தையும், அழகையும் கண்டு ஆனந்த மடைகின்றோம் இன்னும் கொத்துக் கொத்தாக மலர்ந்து விளங்கும் மலர்களின் அடுக்கையும் அமைப்பையும் கண்டு களிக்கின்றோம். ஆயின் ஒரு மலரின் நலம் அதன் மணமே யாகும். மணமற்ற மலர் மாண்புடையதாகக் கொள்ளப்படமாட்டாது. அதுபோல பல நூல்களையும் கற்றுணர்ந்த நல்லாரைக் காண்பது நன்றே யாகும். கல்வி அழகைத் தம்மிடத்தில் கொண்டு விளங்குதலால் அவர் காட்சி மனத்திற்குப் பெரிதும் மகிழ்ச்சி தருகின்றது. ஆனல் தாம் கற்ற பொருளைப் பிறர்க்கு எடுத்துச் சொல்ல இயலாதவிடத்து, அவர் கல்வி மணமற்ற மலர்போல் பயனற்ற தாகும். இக்கருத்தையே பிற்காலத்துப் புலவர் ஒருவர், கல்வியொடு சொல் வன்மையும் அமைந்திருப்பது பொன்மலர் மணமும் உடையது போலாகும் என்று கூறிப்போந்தார்.

உவமானமும் உதாரணமும்

இனி உவமானத்திற்கும், உதாரணத்திற்கும் உள்ள வேற்றுமையை நன்ருய் உணர்ந்து கொள்ள வேண்டும். இவ்வேற்றுமையை நாயஞர் குறளில் நன்கு காணலாம். பெரும்பாலும் உவமை என்னும் அணியில், உவமானம் என்றும் உவமேயம் என்றும் இரண்டு பகுதிகள் காணப்படும். இவற்றுள் உவமானமாக ஆசிரியர்கள் எடுத்து ஆளும் பொருள், காட்சியாலாவது அல்லது நூலறிவாலாவது, நன்ருய்த் தெளியப்பட்ட ஒரு பொருளாக இருக்கும். இவ்வாறு தெரிந்த பொருளைக் கொண்டு, வேருெரு பொருளின் தன்மையையோ, அல்லது உயரிய உண்மைகளையோ, தெளிவுபடுத்துவதே வழக்கமாகும். இதுவே உவமையின் தன்மையென்று இதுகாறும் ஆராய்ந்த உவமைகளால் அறிந்திருக்கலாம். ஆனல் நாயஞர் நூலில் உவமைபோன்ற உதாரணங்கள் அமைந்திருக்கக் காண்கின்ரும். அருளில்லார்க்கு அவ்வுலக மில்லாததுபோல, பொருளில்லார்க்கு இவ்வுலக மில்லை என்பது ஒரு குறளின் கருத்தாகும். அழுக்காறுடையவனிடம் ஆக்கம் இல்லை. அதுபோல ஒழுக்க மில்லானிடம் உயர்வு இல்லை என்பது மற்றெரு குறளின் பொருளாகும். இவைகளில், ஓர் உண்மையை மற்ருெர் உண்மையால் விளக்கும் தன்மை காணப்படுகின்றதே யல்லாமல், உவமையணியாக இவற்றைக் கருதுவதற்கு இட மில்லை. ஆகவே இத்தன்மை வாய்ந்த ஒப்புமை காணுமிடத்து அதனை உவமை யென்று கொள்ளாது உதாரணம் என்று கொள்ளுதலே பொருத்தமாகத் தோன்றுகிறது.

முடிவு

இதுகாறும் கூறியவற்ருல், தெய்வப் புலமைத் திருவள்ளுவஞர் தமது நூலில் அமைத்த உவமைகள், அப்பெரியாரது அறிவின் ஆழத்தையும் பரப்பையும் வெள்ளிடை மலைபோல் விளக்குகின்றன வென்பதும், அவர் எடுத்தாண்ட உவமைகள், அளவிற் சிறியனவாய்

அமைந்திருப்பினும், ஆழமும் அழகும் ஒருங்கே யுடையனவாய், பயில்வோருக்குப் பெரும்பயனையும், நயனையும் அளிக்கின்றன வென்பதும் நன்கு அறியப் படும்.

வினாக்கள்

1. உவமை என்பது என்ன?

2. உவமை ஆட்சியில் சங்க கால நூல்களுக்கும் பிற்கால நூல்களுக்கும் உள்ள வேற்றுமை என்ன?

3. 'மாந்தர் நிலையின் இழிந்தக் கடை' அவர் எதனை ஒப்பர்? எவ்வாறு?

4. சாக்காடு பிறப்பு ஆகிய இவ்விரண்டனையும் வள்ளுவர் விளக்கும் நயத்தினைப் புலப்படுத்துக.

5. 'உடுக்கை இழந்தவன் கை' எதற்கு உவமையாக ஆளப்பட்டது? அவ்வாட்சியின் பொருத்தத்தினைக் காட்டுக.

6. 'இணரூழ்த்தும் நாறா மலர்' எதற்கு உவமையாக ஆளப்பட்டது? அவ்வாட்சியின் பொருத்தத்தினைக் காட்டுக.

7. 'உவமைபோன்ற உதாரணங்கள்' என ஆசிரியர் கூறும் கருத்தினைச் சுட்டிச் சான்றுகளும் தருக.

பயிற்சி

இப்பாடத்துள் வாராதனவும் உவமையணி அமைந்தனவுமாய இரண்டு குறட்பாக்களைத் தெரிந்துகொண்டு அவற்றிற்கு நும் சொந்த சொற்களில் நயம் வரைக.

4. கீதாஞ்சலி *

இரவீந்திரநாத தாகூர். தமிழாக்கம் : வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ.

இறைவன் சிருஷ்டித்தான்

இறைவ! என்னை முடிவற்ற நிலையில் சிருஷ்டித்திருக்கின்றாய். அதுவே நினது இச்சை. இந்த மண் பாண்டத்தை அடிக்கடி காலி செய்து புத்துயிர் நிறைக்கின்றாய்.

இச்சிறிய வேய்ங்குழலைக் கையி லேந்தி நீ காடு மலையெல்லாம் கடந்து செல்கின்றாய், போகுமிட மெல்லாம் குழல் ஊதி நவ நவமான அமுத கீதங்களை அள்ளிச் சொரிகின்றாய்.

---

*இவை சென்னை, "ஸ்டார் பப்ளிகேஷன்ஸ்" என்ற பண்ணையாரின் 'கீதாஞ்சலி' என்னும் தமிழ்ப் பதிப்பிலிருந்து கொள்ளப்பட்டவை.

சாகா வரமளிக்கும் நின்கரம் தீண்டியதும், என் ஏழை உள்ளம் இன்பத்தின் எல்லை தாண்டி நின் வண்மையைப் பாட ஆரம்பிக்கிறது.

என் சின்னஞ் சிறு கைகள் நிரம்பி வழியும்படி நீ அரிய பல கொடைகள் அருள்கின்றாய். யுகம் யுகமாக நின் கொடைகள் கருணைப் பிரவாகமாய்க் குவிந்து பெருகுகின்றன. ஆயினும் நான் இன்னும் குறையிரந்து நிற்கின்றேன்.

காணிக்கை

இந்தச் சிறு பூவைப் பிடுங்கி எடுத்துக்கொள்! தாமதியாதே, அது வாடி மண்ணில் விழுந்து மறையும் என்று அஞ்சுகிறேன்.

நினது மாலையில் அதற்கு ஓர் இடம் அமையாவிடினும், நினது கையால் கிள்ளி எடுத்துக்கொள்; அதில் ஒரு துக்க ஸ்பரிசம் அமைந்துள்ளது. நான் இதை அர்ப்பணிக்குமுன், இன்றைய தினம் முடிந்து விடுமோ என்று கவலையுறுகிறேன்.

அதனுடைய வருணம் ஆழமில்லாவிடினும், அதனுடைய வாசனை மங்கியிருந்தபோதிலும், இப்போதே காலத்தை இழந்துவிடாமல், இந்தப் பூவைக் கிள்ளி நினது பணிக்கு அமைத்துக்கொள்ளுக!

திருவடிகள் திரியும் இடங்கள்

உனது பாத கமலங்களுக்கு ஏற்ற பொன்மனை இங்கே இருக்கிறது. ஆனால் பாதங்களை இங்கே காணவில்லை. தீனர், திக்கற்றவர், தாழ்ந்தோருடைய குடிசைகளிலே, உன்திருவடிகள் தங்குகின்றன.

நான் உனக்குச் செய்யும் பணி அவ்வளவு தாழ்ந்த ஆழத்தில் கலக்க வில்லை. அங்கமெலாம் வளைந்து நான் பணிந்து பணிந்து பார்த்தாலும், தீனர், திக்கற்றவர், தாழ்ந்தோரிடையே விளங்கும் உன் சேவடிக்

கொழுந்துவரை அவ்வளவு தாழ்வாகப் பணிய முடிய வில்லை.

தீனர், திக்கற்றவர், தாழ்ந்தோரிடையே கந்தை உடுத்துத் திரியும் நின் கழலினைச் செருக்குடையார் எந் நாளும் சேரவே முடியாது.

தீனர், திக்கற்றவர், தாழ்ந்தோரிடையே, நாதியற்ற வருக்கு நாதியாய், ஏழை பங்காளனாய் நீ திரிந்து உல வும் இடத்தைச் சேர்வதற்கு, எது வழி என்று அறியா மல் என் இருதயம் இடர்ப்படுகின்றது.

இறைவன் எங்கே

ஜபமாலை உருட்டுவதை விட்டுவிடு! மந்திரமும் தந்திரமும் ஆடலும் பாடலும் அவனைக் காட்ட மாட்டா! தாளிட்ட அடைபட்ட கோயிலின் இரு ளடைந்த மூலையில், யாரைப் பூசிக்கிறாய்? கண்களைத் திறந்து, உன் கடவுள் உன் முன்னிலையில் இல்லையென அறிந்துகொள்!

கடினமான தரையில் ஏர் கட்டி உழுவாரிடமும், சாலை அமைக்கச் சரளைக்கல் உடைப்பாரிடமும் அவன் இருக்கிறான். அவர்களுடன் அவன் மழையில் நனை கிறான், வெயிலில் உலர்கிறான். அவன் ஆடையில் தூசி படிந்திருக்கிறது. உன் காஷாயத்தைக் களைந்தெறி; அவனைப் போலவே நீயும் புழுதியில் இறங்கி வா!

விடுதலை? எங்கிருந்து விடுதலைகிடைக்கும்? நம் ஆண்டவனே நம்மீது அருள்சுரந்து சிருஷ்டித் தளை களைத் தன் திருமேனியில் பூண்டிருக்கிறான்; என்றும் நம்மைவிட்டுப் பிரியமுடியாமல் அவன் இணைக்கப்பட் டிருக்கிறான்.

பூவையும் நறும்புகையையும் உன் பூசையையும் விட்டு வெளியே வா! உன் ஆடை கிழிந்து அழுக் கடைந்தால் என்ன? நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்து, நின் ஈசனைக் கண்டுகொள்!

சுதந்தர சுவர்க்கம்

எங்கு மனம் பயமற்று விளங்குகிறதோ,
எங்கே தலை கம்பீரமாய் நிமிர்கிறதோ,
எங்கு அறிவு சுதந்தரத்துடன் பொலிகிறதோ,
எங்குக் குறுகிய சாதிமதப் பிளவுகளால் உலகம்
உடையாமல் உருப்பெற்றிருக்கிறதோ,
எங்கு உண்மையின் ஆழத்தினின்று சொற்கள்
உதயமாகின்றனவோ,
எங்கே தளரா முயற்சி பரிபூரணத்தை நோக்கிக்
கைகளைப் பரப்புகிறதோ,
எங்குப் பகுத்தறி வெனும் தெளிந்த ஆறு
மாண்டொழிந்த பழக்கங்களான பயங்கரப்
பாலை மணலில் பாயாது மீள்கிறதோ,
எங்கே விரிந்த சிந்தனையிலும் செயலிலும் எனது
உள்ளத்தை நினது அருள் இழுத்துச்
செல்லுகின்றதோ
அந்தச் சுதந்தர சுவர்க்கத்தில், என் அப்பனே,
எனது நாடு விழித்தெழுவதாக!

குழந்தை

குழந்தையின் கண்களில் தவழும் தூக்கம் எங்கிருந்து வருகிறது, யாருக்காவது தெரியுமா? மின்மினிகள் பிரகாசிக்கும் நிழல் நிறைந்த கானகத்தின் நடுவிலுள்ள ஒரு கிராமத்தில், இரண்டு மாய மொட்டுக்கள் தொங்கிக்கொண்டிருக்கின்றன. இவைகளிலிருந்துதான் தூக்கம் பிறக்கிற தென்று வதந்தி. அங்கிருந்துதான் தூக்கம் குழந்தையின் கண்களைக் கொஞ்ச வருகிறது!

குழந்தை தூங்கும்போது அதன் உதடுகளில் மின்னும் சிரிப்பு எங்கிருந்து வருகிறது, யாருக்காவது தெரியுமா? ஆம், ஒரு பிறைச் சந்திரனின் வெண்மையான இள வெண்கிரணம், இலையுதிர்காலத்தில், மறையும் ஒரு மேகத்திரையின் முனையைத் தொட்டு, காலைப்

பனியிற் குளித்த கனவில் தோன்றியது அந்தப் புன்முறுவல்,—என்றொரு வதந்தி பரவி வருகிறது—குழந்தையின் உதடுகளில் தவழ்ந்து விளையாடும் புன்முறுவல்!

குழந்தையின் அவயவங்களில் மலர்ந்து ஜொலிக்கும் மெல்லிய இனிய புதுமை—இது இந்நாள்வரை எங்கே ஒளிந்திருந்தது, யாருக்காவது தெரியுமா? ஆம், குழந்தையின் தாய் ஒரு சிறு பெண்ணாயிருந்தபோது, அது காதலின் மௌன விந்தையாக அவளுடைய இதயத்தில் உறங்கிப் பரவிக்கிடந்தது—சிசுவின் உடலில் மலர்ந்து கிடக்கும் இனிய மெல்லிய புதுமை வெள்ளம்!

காரணம்

எனது குழந்தாய், நான் உனக்கு வருணம் தீட்டிய பொம்மைகள் கொண்டுவரும்போது, மேகங்களிலும் நீரிலும் வர்ண ஜாலங்கள் விளையாடுவதன் காரணத்தையும் புஷ்பங்களில் வர்ணங்கள் தீட்டப்பட்டிருப்பதன் காரணத்தையும் உணர்கின்றேன்.

நீ ஆடவேண்டும் என்பதற்காக நான் பாடும்பொழுது, இலைகளின் சலசலப்பில் இசை அமைந்திருக்கும் காரணத்தையும், பூமி தேவியின் இதயத்தில் ஒலிக்கும்வண்ணம் கடல் அலைகள் ஒன்று சேர்ந்து இசைப்பதன் காரணத்தையும் நான் உண்மையாக அறிந்துகொள்கிறேன்.

நீ ஆவலோடு நீட்டியுள்ள கைகளுக்கு நான் இனிமையான தின்பண்டங்கள் கொண்டு வரும்பொழுது, பூக்கிண்ணத்தில் தேன் நிறைந்திருப்பதற்கும், கனிவர்க்கங்களில் இனிய ரசம் இரகசியமாய் நிரம்பி வருவதற்கும் என்ன காரணம் என்பதை நான் உண்மையாகவே அறிந்துகொள்கிறேன்.

உன்னைச் சிரிக்க வைக்க நான் உன் முகத்தில் முத்தமிடும்போது, விண்ணிலிருந்து காலை ஒளி மின்னிப் பீறிட்டு வரும் இன்பத்தையும், வேனில் காற்று என் உடலுக்கு அளிக்கும் இன்பத்தையும் நான் நன்கு உணர்கிறேன்.

இறை தரும் கோடை

அநித்தியமான மானிடராகிய எங்களுக்கு நீ அளிக்கும் கொடைகள், எங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்துவிட்டுக் குறையாமல் உன்னிடமே திரும்பி வருகின்றன.

ஆறு தன்னுடைய நித்திய வேலையைச் செய்கின்றது; கழனிகளின் வழியாயும் கிராமங்களின் வழியாயும் வேகவேகமாய் ஓடுகிறது. ஆனால் இடையறாது அதன் வெள்ளம் இறுதியில் உன் திருவடிகளைக் கழுவவே ஓடி வருகிறது.

பூ தன் மணத்தால் காற்றை இனிமையாக்குகிறது; ஆனால் இறுதியில் தன்னையே உனக்கே அர்ப்பணிக்கிறது.

உன்னைப் பூஜிப்பதால் உலகம் குறைவடைய வில்லை; வறுமை யடைய வில்லை.

கவிஞனின் சொற்களினின்று, மனிதர்கள் தமக்கு இஷ்டமான பொருள்களைக் கொள்ளுகிறார்கள். ஆனால் அச்சொற்களின் இறுதிப்பொருள் உன்னையே சுட்டிக் குறிக்கின்றது.

வினாக்கள்

1. கீதாஞ்சலி குறிப்பு வரைக.

2. 'வேய்ங்குழல்' என்று இங்குக் குறித்தது எதனை? அதன் பொருட் சிறப்பினைப் புலப்படுத்துக.

3. கவிஞர் தம்மை இறைவற்குக் காணிக்கையாகப் படைக்கும் பண்பினைக் கூறுக.

4. இறைவர் திருவடி நடமாடும் இடங்கள் யாவை?

5. ஈசன் எங்கே இருக்கின்றனன்? அவனைக் கண்டு கொளற்கு மார்க்கம் யாது?

6. கவிஞரின் கற்பனையிற் காணப்படும் சுதந்தர சுவர்க்கம் எவ்வியல்புகளை யுடையது?

7. தூக்கம், தூங்கும்போது உதடுகளில் மின்னும் சிரிப்பு, அவயவங்களில் மலரும் மெல்லிய இனிய புதுமை ஆகிய இவைகள் குழந்தைகளுக்கு எங்கிருந்து வருகின்றன?

8. தாகூர் இயற்கையை வருணிக்கும் திறமையைப் புலப்படுத்துக.

5. திபேத்தும் திபேத்தியரும்*

வித்துவான் ம. வி. இராகவன் அவர்கள்

திபேத்துப் பீடபூமி

திபேத்து நாடு முழுவதும் உயரமான பீடபூமியாகும். இப்பீடபூமி உலகில் உள்ள ஏனைப் பீடபூமிகள் அனைத்தினும் உயரமானது. இது, கடல் நிலையினின்றும் பதினையாயிரம் அடி உயரத்தில் உள்ளது. கண்ணுக்கு எட்டுமளவும் எல்லை யற்ற பெருவெளி கடல் போலப் பரந்து தோன்றுகிறது. மரம் செடி கொடிகள் அற்ற வெறும் மலைகள், எங்கும் நிறைந்திருக்கின்றன. உயரமான மலைகளின்மீது உருகாத பனியடைகள் மூடிக்கொண்டுள்ளன. இங்குப் பயிர் நிலங்களைக் காண்டல் அரிது. இந்நாடு உயரமான பீடபூமியாகையால், இங்கு மழை பெய்வ தில்லை; மழைக்கு மாறாகப் பனிக்கட்டியே பெய்யும். இது பெரும்பாலும் வறட்சியும் குளிர்ச்சியும் மிக்க நாடு. வேனிற் காலத்தில் முற்பகல் வெப்பமாக இருக்கும்; பிற்பகலில் குளிர்காற்று வீசும். திபேத்தின் குளிர், தாங்குதற் கரிய கடுமையாக உள்ளது. அஃது உடலுக்குள் ஊடுருவிச் சென்று எலும்பையும் ஒடுக்கி உள்ளத்தையும் நடுக்குறுத்தும். காற்றுப் படும் உறுப்புகள் தீயினுற் சுட்டாற் போன்று தீய்ந்து கருகிவிடும். வேனிற் காலத்தில் ஆங்காங்கு புல் பூண்டுகள் காணப்படும். நாடு முழுவதும் சுற்றினும் மரங்களைக் காண முடியாது. சில இடங்களில் ஒன்று அல்லது இரண்டு அடி உயரமுள்ள ட்ராமா என்னும் ஒருவகைக் காரைச் செடிகள் குத்துக் குத்தாக வளர்ந்திருக்கும். அவை பசுமையாக இருக்கையிலேயே தீப்பற்றி எரியும் அற்புதத் தன்மை வாய்ந்தவை! கெண்டைக்கால் அளவே உள்ள இக்காரைச் செடிகள் வளர்ந்துள்ள இடத்தைத் திபேத்தியர் காடு என்று கூறு-

---

*இஃது ஆசிரியரவர்களின் 'கயிலை மால்வரை' என்னும் நூலிலிருந்து கொள்ளப்பட்டது. சென்னை, 'பழனியப்பா பிரதர்ஸ்' வெளியீடு.

கின்றனர். மரத்தையே கண்டறியாத அவர்கட்கு அக் குறுஞ் செடிகளின் செறிவே காடாகக் காட்சியளிக் கிறது!

பிராணிகள்

திபேத்தில் செம்மறியாடுகளும், வெள்ளாடுகளும் மிகுதியாக வுள்ளன. இங்கு யாக் என்னும் ஒருவகைச் சடை மாடுகள் வளர்க்கப்படுகின்றன. அவை கவரி என்றும், சமரி என்றும் வழங்கப்பெறும். அவை திபேத்தியருக்கு வாகனமாகவும் பொதி மாடுகளாகவும் பயன்படுகின்றன. அவற்றின் வாலில் மயிர் அடர்ந் திருக்கும். அவற்றின் வெண்ணிற மயிர் ஆலயங்களில் கடவுள் திருவுருவங்கட்கும், அரண்மனைகளில் அரசர் கட்கும் வீசப்படும் சாமரைகளாக உபயோகப்படுகின்றன; கருநிற மயிரால் மகளிர் கூந்தலோடு சேர்த்து முடித்துக் கொள்ளும் சவரி செய்யப்படுகிறது. திபேத்தியர் அவற் றின் மயிரைக்கொண்டு கூடார அமைப்புக்கு வேண்டும் கம்பளங்களைச் செய்துகொள்ளுகின்றனர். சடை மாட்டின் பாலைத் திபேத்தியர் பானமாகப் பருகுகின்ற னர். அதன் மணமும் சுவையும் நம்மனோர்க்கு ஒவ்வா. சடை மாட்டின்பால் மிக்க தடிப்புள்ளதாகையால், அது நம் உடலுக்கு ஊறு பயக்கும். திபேத்தியர் அப்பாலைக் கடைந் தெடுத்து வெண்ணெயைத் தோற் பைகளில் இட்டு விற்கின்றனர். அதன் முடை நாற்றம் நம் குட ரைப் புரட்டும். திபேத்தியர் உப்பிட்ட தேனீர்ப் பானத்தையும் அவ்வெண்ணெயையும் மூங்கிற் குழாயில் பெய்து கடைந்து பருகுகின்றனர். அவர்கள் அதனை விளக்கெரிக்கவும் பயன்படுத்திக்கொள்ளுகின்றனர். சடைமாடுகளே யன்றிக் கழுதை கோவேறு கழுதை முதலியனவும் திபேத்தியரால் வளர்க்கப்படுகின்றன. இங்கு ஐப்பு என்னும், ஒருவகை மாடுகளும் உள்ளன. அவை சவரிக் காளைக்கும் இந்தியப் பசுவிற்கும் பிறந்த கலப்புச் சாதிப் பிராணிகளாகும். இவை யாவும் திபேத் தியருக்குப் பொதி சுமக்க உதவுகின்றன.

ஊரும் வீடும்

திபேத்தில் பிராணிகளைத் தவிர வேறு வண்டி போன்ற ஊர்திகள் கிடையா. ஆதலின், அவை செல்லு தற்குரிய நிலையான அகன்ற வழிகள் இல்லை; பிராணி களும் மக்களும் நடந்து செல்வதால் தேய்ந்து தோன் றும் குறுகிய நடைவழிகளே உள்ளன. திபேத்தில் தக்களக்கோட்டை ஒன்றே பெரிய ஊராகும். வேறு எங்கும் அது போன்ற ஊர்களே கிடையா. ஒரு கூடா ரம் அல்லது இரு கூடாரங்கள் உள்ள இடங்கள் கிராமங்கள் எனப்படுகின்றன. திபேத்திய மக்களுள் பெரும்பாலோர் சடை மாட்டின் மயிரால் அமைத்த கூடாரங்களிலேயே வசிக்கின்றனர். சிலர் மலைச்சரிவு களில் குகைபோன்று குழி வெட்டி, அதனுள் வாழ்கின்ற னர். ஒரோவழி அருமையாகக் காணப்படும் ஒரு சில வீடுகளும் கல்லாலும் மண்ணாலுமே கட்டப்பட்டுள்ளன. திபேத்தியர் வீடுகள் அழுக்கும் அசுத்தமும் நிறைந்து காணப்படும். வீடுகளைச் சுற்றிலும் ஆட்டுக் கொம்பு களும் எலும்புகளும் சிதறுண்டு கிடக்கும். அவ்வீடு களின் அருகில் செல்லவும் நம் உள்ளம் கூசும்.

திபேத்திய மக்கள்

திபேத்தியருள் பெரும்பாலோர், ஆடு மாடு மேய்க் கும் ஆயர் வாழ்க்கையர்; வீடு வாயில் இன்றிக் கூடாரங் களிலும் குகைகளிலும் வசிப்பவர்; நிலையாக ஓரிடத்தில் இருந்து வாழாது, அலைந்து திரிபவர். அவர்களில் வாணிகம் செய்து வாழ்வோரும் சிலர் உள்ளனர். அவர்கள் கம்பளம், உப்பு, வெங்காரம் போன்ற பொருள்களை ஓரிடத்தினின்றும் வேறிடங்கட்குக் கொண்டுசென்று விற்கின்றனர். அவர்கள் தூய்மை இன்றியும் நாகரிகம் அற்ற நிலையிலும் உள்ளனர். பல் துலக்குவதும், நீராடுவதும், ஆடை துவைப்பதும் அவர்கள் அறியாத செயல்களாகும். அவர்கள் உடலின் றும் ஒருவகைத் தீய நாற்றம் வீசும்; உடலில் வெண்

ணெய் ஊறிக் கிடக்கும். திபேத்தியர் உடல்வன்மை வாய்ந்தவர்கள்; அழகுடையவர்கள் அல்லர். வெறுக்கத் தக்க விகாரத் தோற்றம் உடையவர்கள். குளிர்காற்றினால் அவர்கள் முகமும் கையும் கரிந்து கறுத்திருக்கும். அவர்கள் குளிர்காற்றின் கொடுமையினின்றும் காத்துக் கொள்ளுதற்பொருட்டு உடல் முழுதும் சடைமாட்டின் வெண்ணெயைப் பூசிக்கொள்ளுவர்; தாளளவு நீண்ட கம்பள உடைகளையும், காலுறைகளையும் அணிவர். குளிர்காலத்தில் அவர்கள் ஆட்டுத் தோலினாலான உடையை உடுப்பர். திபேத்தில் ஆடவர் முகத்திலும் மயிர் வளர்வ தில்லை. ஆடவரும் பெண்டிரும் ஒத்த உடையே உடுக்கின்றனர். இருபாலரும் தலைமயிரைப் பின்னிக்கொள்ளுகின்றனர். இங்கு இருபாலர்க்கும் வேற்றுமை காண்பது அரிது.

திபேத்திய ஆடவர்கள் இடக்காதில் பெரிய வளையங்களை அணிகின்றனர். மகளிர் தலைமயிரைப் பல சடைகளாகப் பின்னி, நுனியில் சோழிகளையும் மணிகளையும் கோத்த கோவைகளைத் தொங்கவிட்டுக் கொள்ளுகின்றனர். அவர்கள் அணியும் ஆபரணங்கள் பெரும்பாலும் வெள்ளியும் பவளமும் கலந்தவை. கஸ்தூரி மான்களின் கொம்புகளையும் அவர்கள் கழுத் தணியாக அணிவர். அவர்கள் முத்தும் பவளமும் கோக்கப்பெற்ற தலைப்பாகைகளை அணிவதும் உண்டு. பேய் பிசாசுகள் தீண்டாதிருத்தற் பொருட்டு மந்திரம் பொறித்த கவசங்களையும் செப மாலைகளையும் கழுத்தில் அணிந்து கொள்ளுகின்றனர். அந்நாட்டு மகளிர் முகத்தில் பனிப்புண்ணை மறைக்கக் கருப்பட்டி பூசிக் கொள்ளுவர். இது பார்ப்பதற்கு மிகவும் அருவருப்பா யிருக்கும்.

ஆடவரும் பெண்டிரும் தக்களியால் நூல் நூற்பர்: எலும்பினாற் செய்த ஊசி கொண்டு கையுறை காலுறை கள் பின்னுவர். பெண்டிர் சாணம் சேர்க்கும் கூடை

ஒன்றை முதுகில் கட்டிக்கொண்டிருப்பர். திபேத்தில் விறகு கிடையாதாகலின் ஆடு, குதிரை, சடைமாடு ஆகிய பிராணிகளின் உலர்ந்த சாணத்தைக்கொண்டே அடுப்பு எரிக்க வேண்டும். திபேத்தியர் தங்கள் ஆடு மாடுகட்கு எங்கெங்கு புல் கிடைக்குமோ, அங்கெல்லாம் சென்று கூடாரம் அமைத்துக்கொண்டு வாழ்கின்றனர். அவர்கள் புகையிலை, கத்திகள், எலும்புக் கரண்டிகள், உணவுகள் இவற்றைச் சட்டைப் பையில் உடன்கொண்டு செல்லுகின்றனர். அவர்கள் வளர்க்கும் ஆயிரக்கணக்கான ஆடு மாடுகள், கல்வலைகளில் அரிதாகக் காணப்படும் அற்பப் புல் பூண்டுகளை மேய்ந்து உயிர் வாழ்வது வியக்கத்தக்கதாகும்.

திபேத்தியர் புலால் உண்பவர்கள். வறுத்த கோதுமை மாவு, பச்சை இறைச்சி இவையே திபேத்தியரின் சிறந்த உணவுகள். சடைமாட்டின் பாலையும் வெண்ணெயையும் அவர்கள் விரும்பி உட்கொள்ளுகின்றனர். பிராணிகளின் உலர்ந்த சாணத்தைக்கொண்டு துருத்தியின் உதவியால் தீ மூட்டித் தேயிலைப் பானம் செய்து பருகுகின்றனர். திபேத்தியர் ஒருவகை மதுபானமும் செய்கின்றனர். அவர்கள் எங்குச் செல்லினும் அப்பானம் நிரம்பிய மரப் புட்டிலை உடன்கொண்டு செல்வர்; நண்பர்களைக் கண்டு அளவளாவுகையில் அதனை மரக்கிண்ணங்களிற் பெய்து வைத்துக்கொண்டு பேச்சுக்கு இடையிடையே பருகி மகிழ்வர்.

திபேத்தியர் வழங்கும் மொழி, திபேத்து—பர்மாத் தொகுதியைச் சேர்ந்தது. இது, கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தோம்மிசம் போதனால் தோற்றுவிக்கப்பட்டது என்பர். பௌத்தத் துறவிகளாகிய லாமாக்கள் இதனைப் போற்றி வளர்த்துவருகின்றனர். எனினும், திபேத்தியருள் கல்வி கற்றவர்கள் மிகவும் அரியராவர்.

திபேத்தியர்கள் அனைவரும் புத்தமதத்தைச் சார்ந்தவர்கள்: அவர்களுள் துறவு பூண்டவர்கள் லாமாக்கள்

எனப்படுவர். ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவர் இருவர் லாமாவாக விடப்படுவர். மகளிர் துறவு பூண்டு லாமாக்களாவதும் உண்டு. லாமாக்கள் கோம்பா என்னும் மடங்களில் தங்கி வசிப்பர். அவர்கள் மடங்களில் புத்தர் பெருமானின் திருவுருவச் சிலைகளை வைத்து வழிபடுகின்றனர்.

வினாக்கள்

1. திபேத்தப் பீடபூமியின் இயற்கை யமைப்பு தட்பவெப்ப நிலை ஆகியவற்றைப்பற்றி எழுதுக.
2. 'யாக்' என்பது என்ன? அது திபேத்தியருக்கு எவ்வகையிலெல்லாம் பயன் தருகிறது என்பதை எழுதுக.
3. திபேத்தியரின் வீடும் அதன் சுற்றுப்புறமும் எத்தகையன?
4. திபேத்து மக்களின் தொழில் யாது?
5. அவர்களுடைய தோற்றம் பழக்க வழக்கம் எத்தகையன?
6. அவர்கள் தங்களை எவ்வாறு அலங்கரித்துக் கொள்ளுகின்றனர்?
7. திபேத்தியர் உட்கொள்ளும் உணவு வகையினைப்பற்றி யுரைக்க.
8. டாமா, லாமா, ஜப்பு: குறிப்பு வரைக.

6. புலையன் தண்ணீர்*

பாரத இரத்தினம், சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்கள்

பாரத யுத்தம் முடிந்த பிறகு, துவாரகைக்குப் போகும் வழியில் கண்ணபிரான் உதங்கர் என்ற பிராமணரைக் கண்டான். கண்டதும் தேரை நிறுத்தி அவருக்கு நமஸ்காரம் செய்து பூஜித்தான். பிராமணர் கண்ணன் செய்த மரியாதையை ஏற்றுக்கொண்டு கேட்கிறார்:

"மாதவா! நீ பாண்டவ கௌரவர்களிடையில் வெகு நாள் இருந்துவிட்டு வருகிறாய்: அவர்களுக்குள் சகோதர வாஞ்சையைப் பலப்படுத்தினாயா? எல்லோரும் சுகமாக இருக்கிறார்களா? என்று கேட்டார்.

* (இச் சிறு கதை 'ராஜாஜி மலர் 2: கட்டுரைகள்' என்று மகுடமிட்ட நூலிலிருந்து கொள்ளப்பட்டது. 13-10-'47-இல் வெளியிடப்பட்டது. காரைக்குடி, 'புதுமைப் பதிப்பகம் லிமிடெட்' வெளியீடு.)

• கண்ணன் என்ன சொல்லுவான்! "ஐயா! கௌர வர்களைச் சமாதானம் செய்ய முயன்றேன். அவர்கள் கேட்கவே மாட்டோம் என்றார்கள். யுத்தம் நடந்து எல்லோரும் மாண்டார்கள். புத்தியும் பலமும் விதியை மீற முடியாது என்று சொல்லி, நடந்த வரலாற்றை யெல்லாம் சொன்னான். இந்த வார்த்தையைக் கேட்டதும், உதங்கர் மிகக் கோபாவேசம் அடைந்தார். அவருடைய கண்கள் சிவந்தன. அவர் மாதவனைப் பார்த்துச் சொன்னார்:

"வாசுதேவனே! நீ கௌரவ குலத்தைக் காப்பாற்றாமல் போனாய்! வலுவிலாவது அவர்களை யுத்தத்திலிருந்து தடுத்துக் காப்பாற்றியிருக்க வேண்டியது உன் பொறுப்பு. நீ கபடமாக இருந்துகொண்டு அவர்கள் அழிந்துபோக விட்டுவிட்டாயே! நான் உன்னைச் சபிக்கப்போகிறேன்."

இவ்விதம் உதங்கர் கோபாவேசமாய்க் கூறிய வார்த்தைகளைக் கேட்ட வாசுதேவன், புன்னகை புரிந்து, "சாந்தம்! சாந்தம்! நீர் தபஸ்வி! உம்முடைய தவத்தின் பயனைக் கோபத்தில் இழந்துவிட வேண்டா. முதலில் நான் சொல்லுவதைக் கேளும், பிறகு வேண்டுமானால் சாபத்தைக்கொடும்" என்று சமாதானப் படுத்தினான்.

* * * * *

கண்ணன், தான் ஈசுவர அவதாரம் என்பதை உதங்கருக்குக் காட்டினான். "நான் உலகத்தைக் காப்பதற்காகவும் தர்மத்தை நிலைநிறுத்துவதற்காகவும் பல பிறவிகள் எடுக்கிறேன். நான் எந்த அவதாரத்தை எடுக்கிறேனோ, அந்த அவதார தருமத்தை அனுசரிக்கிறேன். தேவ ஜாதியில் பிறக்கும்பொழுது தேவன் போல எல்லாவற்றையும் செய்கிறேன். யக்ஷனாகவோ, ராக்ஷஸனாகவோ பிறந்தால் யக்ஷனைப்போல் அல்லது ராக்ஷஸனைப்போல் எல்லாக் காரியங்களையும் செய்வேன். மனிதனாகப் பிறந்தாலும் மிருகமாக அவதரித்

தாலும் அவ்வாறே. அவிவேகிகளான கௌரவர்களைக் கெஞ்சினேன். அவர்கள் மதி மயக்கங் கொண்டு என்னுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ள வில்லை. பயமுறுத்திப் பார்த்தேன் அதற்கும் அவர்கள் இணங்க வில்லை. கோபங்கொண்டு என் விசுவ ரூபத்தையும் அவர்களுக்குக் காட்டினேன். அதுவும் வீணாயிற்று! அதர்மம் புரிந்து அவர்கள் யுத்தத்தில் மாண்டு மேலுலகம் சென்றார்கள். பிராமண சிரேஷ்டரே! நீர் என் மேல் அபவாதம் சொல்லக்கூடாது'' என்று கண்ணன் விளக்கியபிறகு உதங்கர் சமாதான மடைந்தார்.

* * * * *

கண்ணன் மகிழ்ச்சி யடைந்து உதங்கரை நோக்கி, “உமக்குவேண்டிய வரம் ஒன்று கேளும்” என்றான். உதங்கர் வாசுதேவனைப் பார்த்து, “அச்சுதா! உன்னை நான் பார்த்ததே பெரிய வரம். வேறொன்றும் வேண்டா” என்றார். கண்ணன் மறுபடியும் வற்புறுத்த, உதங்கர், “பிரபுவே, அவசியம் எனக்கு ஏதேனும் கொடுக்க விரும்பினால், நான் எப்போது எந்த இடத்தில் தண்ணீர் வேண்டினாலும் கிடைக்குமாறு வரம் தருவாயாக,” என்றார்.

பாலைவனத்தில் திரிபவரும் ஆசை யற்றவருமான உதங்கர் இந்த வரத்தைக் கேட்டதும், “அப்படியே ஆகட்டும். நீர் தண்ணீர் வேண்டுமென்று எந்தச் சமயத்தில் எங்கே எண்ணினாலும் என்னை நினைத்துக் கொள்ளும்'' என்று சொல்லிவிட்டுக் கண்ணன் துவாரகைக்குச் சென்றான்.

* * * * *

பிறகு ஒரு சமயம், உதங்கர் தாகம் மிகுந்து தண்ணீரை விரும்பிக் காட்டில் இங்குமங்கும் அலைந்தும் கிடைக்காமையால், அச்சுதனை நினைத்தார். அப்போது ஒரு புலையன் தோன்றினான். அவன் உடம்புக்குப் போதிய ஆடை யில்லை. உடுத்திருந்த கந்தல் துணியும்

அழுக்குப் படிந்து அவலட்சணமாக இருந்தது. கூட, ஒரு நாய்க் கூட்டம்; கையில் வேட்டைக்கு வேண்டிய வில்லும் அம்பும்; தோளில் கட்டித் தொங்கிய ஒரு தோற் பையில் ஜலம் வைத்திருந்தான். புலையன் நகைத்துக் கொண்டு உதங்கரைப் பார்த்து, "வாரும், பிருகு குல சிரேஷ்டரே, தாகத்தால் வருந்துகிறீர்போலும்! உம் மைப் பார்க்க ரொம்பவும் பரிதாபமாயிருக்கிறது. ஜலம் பெற்றுக்கொள்ளும்" என்று சொன்னான்.

தன் தோற்பையிலிருந்த தண்ணீரை அப்புலையன் அவருக்கு ஊற்றப் போனான். உதங்கர் மிக்க அருவருப் படைந்து, "வேண்டா" என்றார். மனத்தில் கண்ணனை நிந்தித்தார். "இதுவா உன் வரம்" என்று கோபித்தார்.

புலையன், ஜலத்தைப் பெற்றுக்கொள்ளும்படி தோற் பையைக் காட்டி உதங்கரைப் பலமுறை வற்புறுத்தி னான். அவர் கோபமாக மறுத்து விட்டார். புலையன் தன் நாய்களோடு அவ்விடத்திலேயே மறைந்தான்.

* * * * *

புலையன் மறைந்த அதிசயத்தைக் கண்ட உதங்கர் யோசிக்கலானார். "நான் என்ன செய்தேன்? என் ஞானம் என்ன வாயிற்று! புலையன் கொடுத்ததை மறுத்தது பாவ மல்லவா?" என்று வருந்தினார்.

கொஞ்ச நேரம் கழித்து, சங்கமும் சக்கரமும் ஏந்திய பகவான் தோன்றினான்.

"புருஷோத்தமா! நீ இவ்வாறு புலையனுடைய தோற்பையி லுள்ள அசுத்த ஜலத்தைப் பிராமணனாகிய எனக்குக் கொடுக்கச் செய்தது தருமமா?" என்று உதங்கர் நிந்தித்துக் கேட்டார்.

ஜனார்த்தனன் புன்னகை புரிந்தான். "உதங்கரே! உமக்காக இந்திரனிடம் போய், ஜலரூபத்தில் அமிரு தத்தைக் கொடுக்கச் சொன்னேன். இந்திரன் முதலில்

ஒப்புக்கொள்ள வில்லை. "மனிதன் ஒருவனைத் தேவனு கச் செய்வது எனக்குப் பிடிக்கவில்லை. வேறு ஏதேனும் வரம் தருவது நலம்" என்று என்னைப் பலமுறை தடுத் தான். நான், "கூடாது, அமிருதமே கொண்டுபோய்க் கொடு" என்று வற்புறுத்தினேன். இந்திரன், "உதங்க ருக்கு அவசியம் அமிருதம் தரவேண்டுமானால், அப் படியே செய்கிறேன். ஆனால் நான் சண்டாள வேஷம் தரித்துக்கொண்டு போவேன். அந்த வேஷத்தில் உதங்கர் என்னிடம் தண்ணீர் பெற்றுக்கொள்வாரானால் சரி, அவர் என்னை அவமதித்தால் நான் கொடுக்க மாட் டேன்" என்றான். உம்முடைய ஞானத்தை நம்பி நான் ஒப்புக்கொண்டேன். நீர் இவ்விதம் நடந்துகொண்டீர். "சண்டாளனைக் கண்டு நீர் வெறுப்படைந்தது பெரிய குற்ற மல்லவா? அமிருதத்தை மறுத்துவிட்டீரே" என்று கண்ணன் சொல்ல, உதங்கர் வெட்கத்தில் ஆழ்ந்தார்.

ஏழைகளை இகழலாகாது என்பது இந்தப் பாரதக் கதையின் உபதேசம். இந்த உபதேசத்தை என்றும் நாம் மனதில் இருத்துவோமாக.

வினாக்கள்

1. உதங்கர் சீற்றங் கொண்டதன் காரண மென்ன?

2. கௌரவரைப் போரினின்று தடுக்கக் கண்ணன் எடுத்த முயற்சிகள் யாவை?

3. நீர் வேட்கையால் வருந்திய உதங்கர் கண்ணனை நிந்திக்கக் காரண மென்ன?

4. உதங்கர் வெட்கமுற நேர்ந்தது ஏன்?

பயிற்சி

உலகில் அமைதியை நிறுத்தப் போர் அவசியமா இல்லையா என்பது பற்றி ஒரு கட்டுரை வரைக.

7. பெர்னார்ட் ஷாவின் நாடகப் புலமை*

டாக்டர் மு. வரதராசனார்

ஷாவின் மூளை எதையும் நாடகக் காட்சியாகவே எண்ணி எண்ணிப் பழகிய மூளை. ஆகையால் எதையாவது நன்றாக விளக்க வேண்டும் என்று கருதினால், உடனே அதைச் சிறிய ஓரங்க நாடகமாக அமைத்துத் தெளிவாகக் காட்டுவது அவர் வழக்கம். 'நாடக அமைப்பில் எதையும் விளக்குவது எனக்கு எளிதாக இருக்கிறது; மிக நல்ல முறையாகவும் இருக்கிறது' என்று அவர் கூறி யுள்ளார்.

நாடகம் எழுதி முடித்த பின், அதில் கை வைத்துத் திருத்தவோ மாற்றவோ ஷா யாருக்கும் இடம் கொடுப்பதில்லை. ஆஸ்திரியாவில் ஒருமொழி பெயர்ப்பாளருக்கு எழுதிய கடிதத்தில், 'என் நாடகங்களில் ஒரு வரியை விட்டு விடவோ ஒரு காற் புள்ளியை மாற்றவோ கூடாது. எனக்குத் தெரியும்; நாடக உலகில் வேலையாள் முதல் பொறுப்பாளர் வரையில் ஒவ்வொருவரும், எழுதிய ஆசிரியரைவிட, தங்களுக்கு மிகுதியாகத் தெரியும் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இப்படி மாற்றினால் நாடகம் பலராலும் விரும்பப்படும் என்றும், வெற்றி தரும் என்றும் அவர்கள் எண்ணுகிறார்கள். அவர்களுக்குச் சொல்லுங்கள்: 'நான் தலை கொழுத்தவன், செருக்கு உடையவன், பிடிவாதக்காரன், அறிவாற்றலில் மேம்பட்டவன், காரணங்களுக்குச் செவி சாய்க்காதவன், என் நூல்களைப் பொறுத்த வரையில் என் வழியில் செல்லத் துணிவு கொண்டவன், என்றெல்லாம் அவர்களுக்குத் தெரிவியுங்கள், என்று எழுதினார். இப்படி உறுதியானவர் போல்தோன்றினாலும், யாராவது ஒரு திருத்தம்

*இது ஆசிரியரவர்களின் 'அறிஞர் பெர்னார்ட் ஷா' என்ற நூலிலிருந்து கொள்ளப்பட்டது.

அல்லது மாற்றம் செய்வது நல்லது என்று தெரிவித்தால், அது நல்லது என்று அவருக்கும் தோன்றினுல், உடனே தயங்காமல் திருத்தியும் மாற்றியும் அமைத்து விடுவார். சொன்ன அளவிற்கு மேலும் திருத்தங்கள் செய்துவிடுவார். ஆனுல் அந்த மாறுதல்களை நூலாசிரியராகிய தாமே செய்ய வேண்டும் என்பதில் மட்டும் அவர் மிகமிக உறுதியானவர்.

ஷா எத்தனையோ குழுக்களில் உறுப்பினராக இருந்து உழைத்துவந்தார். இடையிடையே நாடகங்களை எழுதிவந்தார். ஒரு நாடகத்தை எழுதி முடித்தபின் உடனே அதை வெளியிடுவ தில்லை. அதை இயன்றவரை நல்ல முறையில் அமைக்க முயன்று, நாடகம் காணவருவோர் எளிதில் உணர்ந்துகொள்ளத் தக்க வகையில் மேலும் எளிமைப்படுத்திய பிறகே அதைத் தம் கைவிட்டு வெளியெறச் செய்வார். "மாதக் கணக்காக இவ்வளவு அரும்பாடுபட்டு நான் எழுதி முடித்த நாடகத்திற்குக் கைம்மாருக நான் மக்களிடம் பெறுவது என்ன? அவர்கள் மூன்று மணி நேரம் என் நாட கத்தைக் கண்டு மகிழ்ந்து நன்கு சிரித்து நாடக மண்டபத்தை விட்டு வெளியே சென்றதும், 'அது ஒரு நாடகம் ஆகுமா' என்று ஒதுக்கிப் பேசிச் செல்வதே ஆகும்" என்று ஷா குறிப்பிட்டுள்ளார். ஆழ்ந்த அமைதியான உணர்வில் நாடகம் முடியுமாறு ஷா விடுவ தில்லை. அதில் அவருக்கு விருப்பம் இல்லை. ஆழ்ந்த அமைதியான உணர்வு வரும் இடங்கள் என்று தெரிந்தால், உடனே அங்கே வேடிக்கையை நுழைத்து மாற்றிவிடுவதே அவர் வழக்கம். 'உண்மையான அறிவின் வேலை எல்லாம் நகைச் சுவையுடன் கூடியதே' என்பது அவர் கருத்து.

துன்பியல் நாடகங்களைச் சிறப்புற எழுதி ஷேக்ஸ்பியர் புகழ் பெற்ருர். ஷா இன்பியல் நாடகங்களையே எழுதினர், "கொடுமை இல்லாமலே தீமையை அழிப்பதற்கு நகைச் சுவையால்தான் முடியும்; இழி நடை இல்லாமல் நல்ல இலக்கணத்தை உறுதிப்படுத்தவும்

அதனால்தான் முடியும்" என்பது ஷாவின் கொள்கை. ஆகையால் அவர் அத்தகைய நாடகங்கள் பல எழுதினார்.

நாடகங்கள் எழுதிப் பணம் திரட்டும் நிலையை ஷா பெற்றது இங்கிலாந்தில் அன்று, அமெரிக்காவில் தான். அமெரிக்கர்கள் அவருடைய பல நாடகங்களை யும் சலிப்பின்றிக் கண்டு போற்றத் தலைப்பட்ட பிறகே அவருடைய நாடகங்கள் பொருள் ஈட்டிக் கொடுத்தன. அவ்வாறு செல்வம் சேர்க்க முடிந்ததை உணர்ந்தபின், நாடகங்களைப்பற்றி மதிப்புரை எழுதிவந்த தொழிலை வெறுத்துக் கைவிட்டார். புது நாடகங்களுக்கு மதிப் புரை எழுதுவது எளிது என்பதும் ஷாவுக்கு நன்கு தெரியும். எனினும், கலைத்துறையில் ஆக்க வேலையில் ஈடுபட்ட அவருடைய மனம், புதிய நாடகங்களைப் படைத்து நல்கவே முனைந்தது.

நாடக மேடையில் மரணக் காட்சியைக் காட்டினால் அல்லாமல், சிறந்த நாடக ஆசிரியராக ஷா விளங்க முடியாது என்று வில்லியம் ஆர்ச்செர் என்பவர் குறை கூறினார். அந்தக் குறையைப் போக்குவதற்காக ஷா செய்த முயற்சியே 'டாக்டரின் திண்டாட்டம்' என்ற நாடகம். நாடகம் முழுவதும் டாக்டர்களும் மரணங் களும் காணலாம்; ஆயினும் அதுவும் துன்பியல் நாடகமாக அமையாமல் வேடிக்கை விருந்தளிப்ப தாகவே நின்றது.

நாடகங்களை வெற்றிபெற நடத்துவதில் ஷா பெரு முயற்சி எடுத்துவந்தார். அதற்காகவே நாடகங் களை எழுதுவதற்கு ஆன நேரத்தைவிட மிகுதியான காலத்தை ஒத்திகைகளை நடத்துவதிலும் பார்ப்பதிலும் செலவிட்டார். சில வேளைகளில் வரி வரியாகப் படித்துச் சொல்லி நடிகர்களை ஒப்புவிக்கச் செய்தார். மற்றொரு வழியும் மேற்கொண்டார். ஒரு நாடகத்தைத் தொடர்ந்து பல வாரங்கள் நடத்தி இறுதியில் 'கூட்டம் குறைந்து

வருவாயும் இழந்து புகழும் இழப்பது அவருக்குப் பிடிக்கவில்லை. சில வாரங்கள் மட்டுமே நடத்தி நிறைந்த கூட்டத்தைக் காண்பதிலும், இடம் இல்லை என்று திரும்பிச் செல்வோரைக் காண்பதிலும், ஷாவுக்கு மகிழ்ச்சி உண்டு. கூட்டம் நிறைய வேண்டும் என்பதற்காகவோ, விளம்பரம் செய்ய வேண்டும் என்பதற்காகவோ, நல்லெண்ணம் பெறவேண்டும் என்பதற்காகவோ, சிலர்க்கு அன்பழைப்பு அனுப்பிப் பணமின்றி நாடகம் பார்க்கச் செய்யும் முறையை ஷா கடிந்தார். ஒரு முறை தம் நாடகம் ஒன்றிற்கு ஷா சென்றிருந்தபோது, மண்டபம் நிறைந்திருந்ததைக் கண்டார்; ஆனால் கணக்கு வந்தபோது மூன்றில் ஒரு பங்கிற்கே வருவாய்க் கணக்கு வந்ததை அறிந்தார். உடனே பொறுப்பாளருக்குப் பின்வருமாறு கடிதம் எழுதினார்:—"முழுக் கட்டணமும் செலுத்திய பிறகே என் நாடகத்தை ஒருவர் பார்க்க உள்ளே வரவேண்டும். இது தெளிவாக விளங்க வேண்டும். இப்படிச் செய்வதால், மூன்றில் ஒரு பங்கு மக்களே நாடக மண்டபத்தில் இருந்து நாடகம் நடந்தாலும் கவலை இல்லை. பணம் கொடுத்து நாடகம் காண வரும் பெருமக்கள் ஒவ்வொருவரும் மூன்று இடங்களைப் பயன்படுத்தலாம் என்றும், அவற்றில் தங்கள் குடை, கோட், தடி, கால் முதலியவற்றை வைத்துக் கொள்ளலாம் என்றும் விளம்பரப் படுத்தலாம்" என்று எழுதினார்.

பலரையும் மகிழ்விக்கக்கூடிய வகையில் ஷாவால் எழுத முடியவில்லை. அவருடைய மதிப்புரைகள் இசை, ஓவியம், இலக்கியம், நாடகம் எதைப்பற்றி எழுதப்படினும் பிறரது மனத்தைத் தாக்குவனவாக இருந்தன. "தமக்குத் தொல்லை தாராத எதைப்பற்றியும் மக்கள் கவலைப்படமாட்டார்ககள். ஆகவே, ஏதாவது ஒன்றை உணர்த்த வேண்டுமானால், அவர்களின் மனத்தைத் தாக்கும் வகையில் உணர்த்த வேண்டும்; இல்லையானால் உணர்த்தாமல் இருப்பதே நல்லது" என்பது

ஷாவின் கொள்கை. ஆகையால் அவர் எழுதிய மதிப்புரைகளும் கருத்துரைகளும் விறுவிறுப்பாகவும் காரமாகவுமே இருந்தன. 'இந்த வாரத்தில் கலை நல்ல சவுக்கடி பட்டு வருந்தியது. இன்ன இடத்தில் நடைபெற்ற விழாவின் பொருட்காட்சியே அதற்குக் காரணம்' என்று எழுதுவார். 'இந்த நாடகத்தைப் பார்த்து வெறுப்பில்லாமல் திரும்ப வேண்டுமானால், நாடகம் தொடங்கி நெடுநேரம் கழித்துச் செல்ல வேண்டும்; முடிவதற்கு மிக முன்னமே திரும்பி வந்துவிட வேண்டும்' என்று எழுதுவார். நடுநிலைமை, நீதி, நாகரிகம் என்ற பெயர்களைச் சொல்லிக்கொண்டு, உணர்ந்ததற்கு மாறாக எழுதுவது கலைக்குச் செய்யும் குற்றமாகும் என்பது அவருடைய கருத்து. "சில தியாகங்களைக் கட்டாயம் செய்யவேண்டும் என்று மக்களை வற்புறுத்தக்கூடாது. அவற்றுள் ஒன்று இன்னாருடைய இசையரங்கிற்குச் சென்று கேட்க வேண்டும் என்பது" என்று ஒருமுறை ஓர் இசையரங்கைத் தாக்கி எழுதினார். சில வேளைகளில் மதிப்புரைகளில் ஷா தம்மைப்பற்றியும் சேர்த்து எழுதி நகைச்சுவை ஊட்டியது உண்டு. ஒருமுறை 'இன்புளுயென்சா' காய்ச்சலால் ஷா வருந்தியபோது, "அண்மையில் இசை யுலகத்தில் நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சி எது என்றால், 'இன்புளுயென்சா' காய்ச்சல் என்னைத் தாக்கியது அல்லது நான் அந்தக் காய்ச்சலைப் பற்றிக்கொண்ட தாகும்" என்று எழுதினார்.

ஷாவின் நாடகப் புலமையை நெடுங்காலம் வரையில் ஆராய்ச்சியாளரும் உணரவில்லை. நடிகரும் உணரவில்லை. அக்காலத்திலும் அவர் சோர்ந்துவிடாமல் நாடகங்கள் எழுதிவந்தார். "நான் ஏன் நாடகங்கள் எழுதுகிறேன் என்றால், ஒரு காரணம் நான் அவற்றை எழுத விரும்புகிறேன்; மற்றொரு காரணம் ஆட்களையும் காட்சிகளையும் நாடகங்களில் படைக்க முடிவதால், என் வாழ்க்கையின் நிலைகளை மறந்துவிட முடிகிறது. கதை சொல்லும் திறன் எனக்கு இயல்பாக இருக்கிறது. எந்த

நிகழ்ச்சியும் முதலில் எனக்குக் காட்சிகளாகவும் நடிப் பாகவும் உரையாடலாகவுமே வந்து தோன்றுகிறது" என்று அவர் தெரிவித்தார்.

அவர் முதலில் எழுதிய நாடகங்களை நாடகங் களே அல்ல என்று பலரும் மறுத்துக் குறை கூறினர் கள்; அவைகள் எல்லாம் அரசியல் துண்டு வெளியீடு கள் என்று பழித்தார்கள். ஷா அதற்குத் தளரவில்லை. தாம் எழுதுகின்றவை ஆராய்ச்சிகள் என்றும், உரை யாடல்கள் என்றும் தாமே சொல்லிக்கொண்டார். நாடகங்களின் முடிவில் கொலைகளும் கொடுமைகளும் இருந்தால்தான் சிறப்பு என்றால், அத்தகைய நாடகங் களை எழுதுவது தம் தொழில் அன்று என்று அறிவித் தார். 1885-இல் எழுதிய சில நாடகங்களை ஷா மூலையில் ஒதுக்கி வைத்து மறந்து விட்டிருந்தார். ஏழு ஆண்டு கள் கழித்து 1892-இல் அவைகள் நாடக மேடைக்கு வர முடிந்தது. அப்போதும் எதிர்ப்புகளும் பழிப்புரை களுமே மிகுந்திருந்தன. பல ஆண்டுகள் கழிந்த பிறகே நாடக உலகில் அவர் செய்த புதுமைத் தொண்டு பாராட்டப்பட்டது. ஆங்கில நாடக மேடையில் பெரிய பெரிய சமூக சிக்கல்களை முதல் முதலாகக் காட்டி விளக்கிவைத்த பெருமை ஷாவையே சாரும்.

பல நாடகங்கள் எழுதி அரங்கேற்றிய ஷா, தாமே நடித்து மிருக்கிறார். ஆனால் ஒரே ஒரு முறை தான். கார்ல் மார்க்ஸின் கடைசி மகள் ஒரு நாடகத்தில் நடித்தபோது அவருடைய வேண்டுகோளுக்கு இணங்கி ஷாவும் அதில் நடித்தார். அதற்குப் பிறகு அவர் பிறரை நடிக்கச் செய்ததன் வாயிலாகவே மிகுந்த அனுபவம் பெற்றார்.

ஒரு நாடகத்தை எழுதி முடித்த பிறகு, அதை நெருங்கிய நண்பர்களிடையே படித்துக் காட்டுவது ஷாவின் வழக்கம். அதற்கு அடுத்தபடி, நாடகம் நடத்தும் பொறுப்பாளருக்கும் மற்றவர்களுக்கும் படித்

துக் காட்டுவார். அவ்வாறு அவர் படித்துக் காட்டுவதைக் கேட்கவும் காணவும் இன்பமாக இருக்குமாம். ஒவ்வொரு பாத்திரமாகவும் ஷாவே மாறி மாறி நடித்துப் பேசுவதுபோல் இருக்குமாம். ஷாவின் குரல் வேறுபாடும் பேசும் முறையும் நாடகத்தின் கருத்தையும் அமைப்பையும் நன்ருக எடுத்துக் காட்டுமாம். நடிகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, ஷாவே நாள்தோறும் உடனிருந்து ஒத்திகை நடத்திப் பல நாடகங்களுக்குத் துணை செய்திருக்கிருர். எல்லாம் முடிந்த பிறகு, ஒரு குறிப்புப் புத்தகத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, எதிரே போய் உட்கார்ந்திருப்பார். நடிகர்களின் நடிப்பை நன்ருகக் கவனித்து, அவர்கள் தவறும் இடங்களை விடாமல் குறித்துக் கொள்வார். இடையே வாய் திறக்காமல் உட்கார்ந்திருந்து, முடிவில் நடிகர்களிடம் சென்று தவறிய இடங்களை எல்லாம் எடுத்துக் காட்டித் திருத்துவார். தக்க முறையில் தாமே நடித்துப் பேசிக் காட்டுவார். எல்லோரிடத்திலும் பொறுமையாகவும் அன்பாகவும் இன்சொல் பேசித் திருத்துவார். நடிக்கும் பெண்களின் உடை முதலியவற்றிலும் தக்க திருத்தங்கள் செய்வார்.

“இங்கிலாந்தில் உள்ள நாடக அரங்குகள் என்ன என்ன பற்றியோ விளக்கும் நாடகங்களுக்கு இடம் தருகின்றன. ஆனல் மக்களின் வாழ்க்கைக்கு வேண்டிய பொது அறிவு, சமயம், விஞ்ஞானம், அரசியல், ஒழுக்க-உணர்வு ஆகியவற்றிற்கு இடம் தருவ தில்லை. அதனல்தான் நான் நாடக அரங்குகளோடு போர் தொடுத்திருக்கின்றேன். அறிக்கைகளும் அறிவுரைகளும் கட்டுரைகளும் எழுதி அவற்ரேடு போர் செய்ய வில்லை. நாடகங்கள் எழுதியே அந்தப் போரை நடத்துகின்றேன். இதனல் லண்டன் நகர மக்கள் நாடகம் காணச் செல்லும்போது மனச்சான்றையும் மூளையையும் உடன்கொண்டு செல்லுமாறு செய்ய முடியும் என்று நம்புகிறேன். இப்போது வழிபாட்டுப் (பைபில்) புத்தகத்தோடு மனச்சான்றையும் மூளையையும் வீட்டி

லேயே வைத்துவிட்டு நாடகம் காணச் செல்லும் போக்கை ஒழிக்கவே இந்த முயற்சியில் ஈடுபட்டிருக் கிறேன்'' என்று 'வாரன் அம்மையாரின் தொழில்' என்னும் நாடகத்தில் முகவுரையில் எழுதி யுள்ளார். வீட்டின் உள்ளேயே அடங்கி உலகம் அறியாமல் வாழும் பூச்சிகளுக்கு உண்மை வாழ்வு இல்லாவிட்டா லும், கற்பனை யுலகிலாவது அவர்கள் அந்த வாழ்க் கையை உணரட்டும் என்றே நாடகங்களை நடிக்கச் செய்த தோடு நிற்காமல் நூல் வடிவாகவும் வெளியிட்டாராம்.

இந்த நாடகங்களைவிட நீண்ட முகவுரைகள் எழுதி வெளியிடுவது அவருக்கு வழக்கமாகிவிட்டது. வெறுங் கட்டுரைகளை ஒருவரும் படிப்ப தில்லை. ஆகையால், தம் கொள்கைகளை உணர்த்தி அவர்களைத் திருத்த வேறு வழி இல்லாதது கண்டு, நாடகங்களின் வழியாகக் கவர்ச்சி ஊட்டி, பிறகு முகவுரைகளின் வாயிலாகக் கொள்கைகளை உணர்த்தும் முயற்சியில் ஈடுபட்டார்.

தம்முடைய கற்பனைகளில் உள்ளவை மிக மாறு னவைகளாகவும் பொருந்தாதவைகளாகவும் இருக் கின்றன என்று குறை கூறுவோருக்கு ஷா மறுமொழி கூறியபோது, தாம் கண்மருத்துவர் ஒருவரிடத்தில் சென்றுவந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு விளக்கினர். அந்தக் கண்மருத்துவர் ஷாவின் கண்களை ஆராய்ந்து பார்த்துவிட்டு அவருடைய கண்ணைப்பற்றித் தமக்கு ஒன்றும் அக்கரையே தோன்ற வில்லை என்று தள்ளி விட்டாராம். காரணம் கேட்டால், கண் அளவான நிலையில் உள்ளது என்று சொன்னாராம். அப்படி யானல் தம் கண் மற்றவர்களின் கண்ணைப்போல் இருப்பதாக ஷா பொருள் கொண்டாராம். கண்மருத்து வர் அதை மறுத்து, 'இல்லை இல்லை, மற்றவர்களின் கண் பெரும்பாலும் இப்படி இருப்ப தில்லை. உங்கள் கண் தனி வகை. மிக நல்ல கண் பார்வை இருக் கின்றது. அளவான நிலைமை என்றால் பொருள்களை உள்ளபடியே பார்த்தறியும் ஆற்றல். அது நூற்றுக்குப்

பத்துப் பேருக்குத்தான் உண்டு' என்றாராம். இதைக் குறிப்பிட்டுவிட்டு, ஷா எழுதியபோது, 'அப்போது தான் நான் கற்பனைகளை எழுதி வெற்றி பெறாததற்குக் காரணம் உணர்ந்தேன். என் உடம்பில் உள்ள கண்ணைப்போலவே, என் மனக் கண்ணும் (கற்பனைக் கண்ணும்) அளவான நிலையில் உள்ளது. பெரும்பாலானவர்களுக்கு மனக் கண்ணும் கெட்டிருக்கின்றது. அதனால்தான் நான் உலகத்தைப் பார்த்தறியும் முறை அவர்களுக்குப் பிடிக்கவில்லை' என்று (1898-இல்) தம் முயற்சியைப்பற்றி எழுதினார்.

வினாக்கள்

1. எதையேனும் விளக்குதற்கு பெர்னார்ட்ஷா கையாண்ட முறை யாது? அம்முறையினை அவர் கொண்டதேன்?

2. தாம் எழுதிய நாடகத்தில் திருத்தம் செய்வதைப்பற்றி ஷா கொண்டிருந்த கருத்து யாதென விளக்குக.

3. ஷா நாடகம் எழுதும் முறையினைப் புலப்படுத்துக.

4. இன்பியல் நாடகத்தைப்பற்றி அவர் கொண்டிருந்த கருத்து யாது?

5. 'டாக்டரின் திண்டாட்டம்' என்ற நாடகம் எழுந்த தெவ்வாறு? முடிந்த தெவ்வாறு?

6. நாடகங்களை வெற்றி பெற நடத்துவதற்காக ஷா செய்த முயற்சிகள் யாவை?

7. நாடகம் பார்ப்பதற்கு அன்பழைப்பு வழங்குவதைப்பற்றி அவர் கருத்து என்ன?

8. பிறர் மனத்தைத் தாக்கும் நாடகங்களை ஷா எழுதியமைக்குக் காரணம் என்ன?

9. ஷாவின் மதிப்புரைகளின் தன்மையைச் சான்றுகளுடன் காட்டுக.

10. ஒத்திகையின்போது ஷா தரும் உதவி யாது?

11. 'நாடக அரங்குகளுடன் நான் போர் தொடுத்திருக்கிறேன்' என்று ஷா சொல்லக் காரணம் என்ன?

12. தாம் உலகத்தைப் பார்த்து அறியும் முறை பிறர்க்குப் பிடியாமை பற்றி ஷா வெளியிட்ட விளக்கம் என்ன?

8. நீரின்றி அமையாது உலகு*

திரு. வேலன் அவர்கள், பி.ஏ.

நீர் என்பது யாது? இதற்கு விடை சொல்வது மிகவும் எளிது. ஆயினும் நீரின் தன்மைகளைப்பற்றி எல்லோருக்கும் நன்ருய்த் தெரியாது. மக்களுக்கு உணவை உண்டாக்குவதும் நீர்; உணவாக இருப்பதும் நீர். நீர்த்துளி இல்லையேல் ஒரு பசும்புல்லையுங் காண்பது அரிதாய்விடும்.

'விசும்பின் துளிவீழின் அல்லால்மற் ருங்கே
பசும்புல் தலைகாண் பரிது'

என்பது குறள். திருக்குறளில் கடவுள் வாழ்த்துக்கு அடுத்தபடியாக வான் சிறப்பைப் பாடியிருப்பதிலிருந்து மழையின் பெருமை நன்கு விளங்கும்.

மனித உடல் முக்கால் பங்கு நீரினுல் ஆகியது என்பது பலருக்குத் தெரியாது. செடிகொடிகளில் இதைக் காட்டிலும் மிகுதியான நீர் நிரம்பி யிருக்கிறது. உலகில் முதன் முதலில் உயிர்கள் நீரிலேதான் தோன்றி யிருக்க வேண்டுமென ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். ஆகவே உயிருக்கு அடிப்படையானது நீர் என்பது பெறப்படும். பாலைவனங்களிலுள்ள ஒட்டகம்போன்ற விலங்குகளும், கள்ளி முதலிய செடிகொடிகளுங்கூட நீர் கிடைத்தபோது நிறையச் சேர்த்து வைத்துக் கொண்டு, நீரில்லாத காலங்களில் அதனைப் பயன் படுத்திக்கொள்ளுகின்றன. எவ்வுயிரும் நீரின்றி வாழ முடியாது. வேண்டிய அளவு நீர் கிடைக்காவிடில் மக்களும் விலங்குகளும் செடி கொடிகளும் வற்றிக் காய்ந்துபோய் உயிரிழக்க நேரிடும். இதனுற்ருன் புலவர்கள் 'மழை அமிழ்தம் போன்றது' எனச் சிறப் பித்துக் கூறியுள்ளார்கள்.

---

*இக்கட்டுரை திருநெல்வேலித் தென் இந்திய சைவ சித்தாந்த நூற்பதிப் புக் கழகத்தின் வெளியீடாகிய 'இயற்கையும் செயற்கையும்' என்ற நூலி லிருந்து கொள்ளப்பட்டது.

நீரின் தன்மைகளைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். பூமியில் நிலம் ஒரு பங்கு; ஆனால், நீர் மூன்று பங்கு இருக்கின்றது. உலகப் படத்தைப் பார்த்தால் பழுப்பு நிறங் குறைவாயும், நீல நிறம் மிகுதியாயும் இருக்கும். உலகின் பெரும்பகுதி கடலாய்த் தோன்றுகிறது. கடல் நீர் ஞாயிற்றின் வெப்பத்தினால் ஆவியாகி மேகங்களாய் மாறுகின்றது. நீராவியின்மேல் குளிர்ந்த காற்றுப் பட்டவுடன் மழையாகப் பொழிகின்றது. உலகிற் பெய்யும் மழையில் முக்காற்பங்கு கடலிலேயே பெய்கின்றது. கடலிலிருந்து ஆவியாகக் கிளம்பிய நீர் மீண்டும் கடலுக்கே வந்து சேர்கிறது. சில மேகங்கள் காற்றினால் தள்ளப்பட்டுக் குளிர் மிகுந்த இடங்களுக்குப் போனால், அங்குப் பனி மழையாகப் பெய்யும். பனிக் கட்டிகள் மலைபோன்று குவிந்து மெள்ள நகர்ந்து சென்று வெப்ப முள்ள இடத்தை அடைந்ததும் உருகிப் பழைய நிலையை அடைகின்றன. நிலத்திற் பெய்யும் மழை, பயிர்களைச் செழிக்கச் செய்து வாய்க்கால் வழியோடி ஆற்றைச் சேர்ந்து, முடிவில் கடலிலேயே விழுகின்றது. நீர் கடலினின்றும் ஓயாது வெளிக்கிளம்பி உலக மெல்லாம் சுற்றித் திரிந்து முடிவிற் கடலினையே நாடிச் செல்லும். கைம்மாறு கருதாமல் நமக்கு மழையை வழங்கும் மேகங்களுக்கு நாம் என்றுங் கடமைப்பட்டிருக்கிறோம்.

'கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றுங் கொல்லோ உலகு!'

எனத் திருக்குறளில் வருதல் காண்க.

மழையின் வரலாற்றிலிருந்து நீர் ஆவியாகவும் கட்டியாகவும் மாறுந் தன்மை யுடையது எனத் தெரிந்து கொண்டோம். இம்மாறுதல் எதனால் ஏற்படுகிறது? வெப்பத்தின் ஏற்றத் தாழ்விலாலும் காற்றின் அழுத்தத்திலாலும் நீரின் தன்மை மாறுபடுகின்றது. தண்ணீரை ஓர் ஏனத்திற் காய்ச்சினால் அது கொதித்து ஆவியாக

மாறுகின்றது. அடிப்புறத்திலுள்ள நீர் முதலில் ஆவி யாகிக் குமிழிகளாய்த் தோன்றிக் காற்றில் மறைகின்றது. இங்ஙனமே சிறிது சிறியதாய்த் தண்ணீர் முழுவதும் ஆவியாகும். நீரை நன்ருய்க் குளிரச் செய்தால் அது பனிக்கட்டியாக மாறும்.

நீர் எப்பொருள்களால் ஆகியது என்னுங் கேள்வி மீண்டும் எழுகின்றது. இரண்டு பங்கு நீர்வளியும்[1] ஒரு பங்கு உயிர்வளியும்[2] சேர்ந்து நீர் ஆகின்றது. மின் ஆற்றலின் உதவியால் இந்த இரண்டு வளிகளையும் ஒன்று படுத்தினுல், வெடியோசையுடன் நீர் தோன்று கிறது. இச்சோதனையைப் பள்ளிக்கூடங்களில் மாண வர்கள் செய்யும்போது பார்த்தால் மிகவும் வியப்பாக இருக்கும். கண்ணுக்குத் தெரியாத இரண்டு பொருள் கள் ஒன்று சேர்ந்து திடுமென நீர்ப்பொருளாக மாறு வது பெரிய விந்தையாகத் தோன்றும்.

நீர் எப்போதும் மேட்டிலிருந்து பள்ளத்திற்கே பாய்கின்றது. ஏனெனில் பூமி எல்லாப் பொருள்களை யும் தன் நடுவிற்கே இழுத்துக்கொள்கிறது. பள்ளமாய் உள்ள இடங்கள் பூமியின் மையத்திற்கு அருகில் உள்ளன. இதனுல் எளிதில் நகரக்கூடிய பொருள்க ளெல்லாம் மேட்டிலிருந்து பள்ளத்திற்குச் சரிந்து வரு கின்றன. கெட்டிப் பொருள்களைவிட நீர்ப்பொருள்கள் தடையின்றி ஓடிவரும். கொஞ்சஞ் சாய்வு இருந்தா லும் அந்தப் பக்கமே நீர்ப்பொருள்கள் பாய்ந்து செல் கின்றன.

உலகில் மக்கள் தோன்றுவதற்கு முன்னமேயே நீர் தன் வேலையைத் தொடங்கிவிட்டது. நிலங்களைச் செம் மைப்படுத்தியதும், செழிப்பிக்கச் செய்ததும் நீர். ஊர் இருந்த இடங்களில் கடல் உண்டாக்கியதும், கடல் இருந்த இடங்களில் ஊர் உண்டாக்கியதும் நீர். குமரி

[1] Hydrogen [2] Oxygen

மூலைக்குத் தெற்கே இருந்த தமிழ் நாட்டினை அழித்ததும், இப்போதுள்ள தமிழ் நாட்டினை வாழ்விப்பதும் அதுவே யாகும்.

'கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை'

என்பது குறள். நமக்கு நீர் பல வகையிலும் பயன்படுகிறது. நாள்தோறும் உணவு சமைப்பதற்கும், குளிப்பதற்கும், கழுவுவதற்கும், பருகுவதற்கும் நீர் வேண்டும். இவையு மன்றிப் புகைவண்டி கப்பல் முதலியவற்றை ஓட்டுவதற்கு நீராவி உதவுகின்றது. நீர்வீழ்ச்சிகள் உருளைகளைச் சுழற்றிப் பொறிகளை இயக்கவும் மின் ஆற்றலை உண்டாக்கவும் பயன்படுகின்றன. கடலின் அலைகளையும் இவ்வேலைக்குப் பயன்படுத்தும் பொருட்டுப் பல ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

'நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வானின்றி அமையாது ஒழுக்கு'

என்னுங் குறள் நீரின் சிறப்பினை நன்கு விளக்குகின்றது.

வினாக்கள்

1. மழையின் பெருமையினை வள்ளுவர் உலகுக்கு எவ்வாறு காட்டினார்?
2. 'எவ்வுயிரும் நீரின்றி வாழ முடியாது' என்பதனைப் புலப்படுத்துக.
3. கடலிற் பிரிந்த நீர் கடலுக்கே திரும்பு மாற்றினைத் தெரிவிக்க.
4. நீர் எவ்வெப் பொருள்களால் ஆயது என்பதனைத் தெரிவிக்க.
5. நீரானது பள்ளம் நோக்கி ஓடுவதேன்?
6. 'கெடுப்பதூஉம்' என்று தொடங்கும் குறட் பொருளினை விரித்துரைக்க.
7. நீரின் ஆற்றலைப் புலப்படுத்துக.

பயிற்சி

'தண்ணீர்ச் செல்வம்' என்பதுபற்றி ஒரு கட்டுரை வரைக.

9. பார்க்காத பார்வை*

கி. வா. ஜகந்நாதன் அவர்கள்

"கண்ணிற் சிறந்த உறுப்பில்லை" என்று பழம் புலவர் ஒருவர் சொன்னதற்கு வியாக்கியானமே வேண்டியதில்லை. உலகம் முழுவதும் கண் உடையவர்களாலே பெருவளம் பெறுகிறது. நமக்கு அருமையான மனிதர்களைக் கண் என்றும், கண்மணி என்றும் பாராட்டிப் பேசுகிறோம். உயிர் மிகவும் அருமையானது. அதற்கு அடுத்தபடியாக அரிய பொருளாக நிற்பது கண்.

அவ்வளவு உயர்வாகக் கருதுவதற்குரிய கண்ணைக் கூட மட்டமாக்கிவிடும் ஒன்று மனிதனிடம் இருக்கிறது. இந்தக் கண்ணை அகக்கண் என்று கூறுவது வழக்கம். புறக்கண்ணாலே மாத்திரம் பார்க்கும் பார்வை விலங்குகளுக்கும் இருக்கிறது. மனிதன் உயர்திணை ஆயிற்றே, அவன் அகக் கண்ணைக் கொண்டு பார்க்கத் தெரிந்தவனாதலால் அவனுக்கு அந்தப் பெருமை வந்தது. முகத்திலே உள்ள கண்கள் உருவம் உள்ள பொருளைத்தான் பார்க்கும். நிறமும் வடிவும் எப்படி உள்ளன என்று தெரிந்துகொள்ளும். அதற்கு மேலே பார்வை செல்லாது. புறவாயிலிலே நின்றுவிடும் பார்வை முகக் கண்ணால் பார்க்கும் பார்வை. புறத்தைக் கடந்து அகத்துள்ளே சென்று பார்க்கும் பார்வை ஒன்று உண்டு; அதையே அகக்கண் என்றும் அறிவு என்றும் சொல்வார்கள்.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

---

*இக்கட்டுரை, ஆசிரியர் அவர்களின் 'கலைமகள்' வெளியீடாகிய 'வாழும் தமிழ்' என்னும் நூலிலிருந்து கொள்ளப்பட்டது.

என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். புலன்களால் உலகில் உள்ள பொருள்களின் தன்மையை உணர்கிறோம். புலனுக்குத் தட்டுப்படும் அந்தத் தன்மையை மாத்திரம் கொண்டு அதன் இயல்பை மெய் யென்று நினைத்துவிடக் கூடாது.

பாம்பு படம் எடுக்கிறது. அந்தப் படம் கண்ணாடியைப்போல் பளபள வென்று அழகாக இருக்கிறது. கண்ணினாலே பார்க்கின்ற பார்வைக்கு அழகாகத் தோன்றுவதனால் அந்தப் படம் நல்லதென்று சொல்லலாமா? புறக் கண்ணாலே கண்ட அளவிலே நின்றுவிட்டால் அழகான கண்ணாடியைச் சட்டென்று கையிலே எடுப்பதுபோல், அந்தப் பாம்புப் படத்தையும் பற்றத் தான் தோன்றும். குழந்தை அப்படித்தானே செய்யும்? ஆனால் நாம், "ஐயோ பாம்பு!" என்று அலறுகிறோம். ஏன்! புறக்கண்ணாலே பார்க்கும் பார்வைக்குப் பிறகும் மற்றொரு பார்வை நமக்குப் பயன்படுகிறது. அந்த அழகிய படத்தில் உயிரைக் கொல்லும் விஷமும் இருக்கிறது என்பதை அந்தப் பார்வை சொல்லுகிறது. "நாகப் பாம்பு அழகிய படம் உடையதாக இருந்தாலும் கொல்லும் விஷத்தையுடைய பிராணி" என்று நம் அகக்கண்ணாகிய அறிவு விளக்குகிறது. ஆகையால் கண்ணாலே கண்ட பொருள் பளபளப்பாகத் தோன்றினாலும், அஃது உயிரைப் போக்குந் தன்மை யுடையது என்ற உண்மையை உணரச் செய்வது அறிவு. 'எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு,' என்ற வள்ளுவர் வாக்குக்கு இப்போது ஒருவாறு பொருள் தெரிந்து விட்டது. கண்ணாலே கண்டதோடு நில்லாமல் கருத்தாலும் காணத் தெரிந்தால் அவன் அறிவாளி என்று சொல்லலாம். இந்த அறிவு மிக மிக நுணுகிச் சென்றால் அவனைச் சிறந்த அறிவாளி என்று சொல்ல வேண்டும். இந்தப் பார்வை புறக்கண்ணால் பாராத பார்வை. இதனால் பார்ப்பது மிகவும் இன்பத்தைத்

தருவ தென்று திருமூலர் சொல்லுகிறார். உண்மையை உணர்ந்தவனுக்கு உண்மை யின்பம் பிறக்கும்.

மூகத்தில் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்!
அகத்தில் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்.

சீதாபிராட்டியைத் தேடிக்கொண்டு அநுமன் இலங்கைக்குப் போனான். அந்த ஊரெல்லாம் தேடப் புகுந்தான். இரவு நேரத்தில் புகை புகா வாயிலெல்லாம் புகுந்து தேடினான். சீதா தேவியைக் கண்டான் இல்லை. இராவணனுடைய அந்தப்புரத்திலே நுழைந்தான். அங்கே ராவணனிடம் காதல் கொண்டு வாடிய பல மடந்தையரைக் கண்டான். பிறகு மயன் மகளும் ராவணன் மனைவியுமாகிய மண்டோதரி உறங்கிக் கொண்டிருந்த மாடத்துக்குச் சென்றான்.

அங்கே மண்டோதரியைக் கண்டான். அவளுடைய பேரழகையும் அமைதியையும் கண்டபோது அவனுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. இவள்தான் சீதையோ என்று சற்று நேரம் திகைத்துப் போனான். மணி விளக்கங்க ளெல்லாம் மழுங்கும்படியாகத் தன் மேனி ஒளி தழைப்புற்று விளங்கத் துயில்புரிகின்ற மண்டோதரியை அநுமன் கண்டு இவள் ஜானகியோ என்று ஐயுற்று உயிரிலே அக்கினி பற்றினாற்போல் வருத்தத்தை அடைந்தான் என்று கம்பர் சொல்கிறார்.

இன்ன தன்மையின் எரிமணி விளக்கங்கள்
எழில்கெடப் பொலிகின்ற
தன்ன தின்னொளி தழைப்புறத் துயில்வுறு
தையலைத் தகைவில்லான்
அன்னளாகிய சானகி இவளென
அயிர்த்தகத் தெழுவெந்தீத்
துன்னும் ஆருயிர் உடலொடு சுடுவதோர்
துயருழந் திவைசொன்னான்.

அநுமன் அதற்கு முன்னாலே சீதையைப் பார்த்ததில்லை. இராமனிடம் விடை பெற்றுக்கொண்டபோது

அவன் கூறிய அங்க அடையாளங்களைக் கேட்டுக் கொண்டுவந்தான். அத்தனை மகளிர் கூட்டத்திலும் மண்டோதரி அழகியாகவும் உயர்வுடையவளாகவும் தோன்றினாள். கண்ணினால் பார்த்த அளவிலே அந்தப் பார்வை சீதையோ என்ற ஐயத்தை உண்டாக்கிவிட்டது. அதனால் அளவற்ற துக்கத்தையும் அடைந்தான். "நான் இந்த உலகத்திலே பிறந்த பிறவி வீணாய்விட்டது!" என்று மனமுடைந்து அழுங்கினான். "இவள் சீதையாக இருந்தால் ராமன் புகழ் தொலைந்தது; அவன் பெருமை தொலைந்தது; நானும் தொலைந்தேன். இந்த இலங்கையும் தொலைந்தது, ராட்சசர்களும் அடியோடு தொலைந்தார்கள்," என்று நைந்து சாம்பினான்.

அநுமன் முகக்கண் மாத்திரம் கொண்டு பார்க்கிறவனாக இருந்தால் இத்தத் துயரக் கடலிலே அமிழ்ந்திருப்பான். ஆனால் அவன் அகக்கண்ணாலே பார்க்கும் பார்வையைப் பெற்றவன். நோக்காமல் நோக்குபவன். கண்ணை நம்பி ஆராய்வதோடு நில்லாமல் கருத்தையும் கலந்து ஆராய்பவன். இதைக் கம்பர் சொல்கிறார்,

'கண்டு கண்ணொடு கருத்தொடு கடாவினன்.'

கண்ணொடு கடாவியபோது அவன் ஐயத்திலும் துயரத்திலும் ஆழ்ந்தான். மேலே கருத்தொடு கடாவினான்; அப்போதுதான் உண்மை புலனாயிற்று.

"சீதை மனிதத் திருமேனி படைத்தவள். இவள் வேறு இயல்பு கொண்டவள்: யக்ஷ ஜாதியோ ராட்சச ஜாதியோ தெரிய வில்லை. தவிர ராமபிரான்மேல் உள்ளம் சென்ற காதலையுடைய பெண்டிருக்கு, மன்மதனாக இருந்தாலும் அவ்வுள்ளம் பிறன்பால் செல்லுமோ?" என்று பார்க்காத பார்வை உதய மாயிற்று. மேலே இன்னும் சில காரணங்களை ஆராய்ந்து உண்மையை உணர்ந்துகொண்டான்.

அவன் பார்த்த பார்வையைக் காட்டிலும் பாராத பார்வையே உண்மையைத் தெளிவுறுத்தியது.

இப்படி ஒரு பார்வை உள்ளது என்பதை இலக்கியப் புலவர்கள் உணர்ந்து பல இடங்களிலே சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பார்வை கண்ணாலே பார்ப்பதன்று என்பதையும் குறிப்பாகத் தெரிவித்திருக்கிறார்கள். இலக்கணப் புலவராகிய தொல்காப்பியரும் இந்தப் பார்வையைப்பற்றிச் சொல்கிறார். "நோக்கல் நோக்கம்" என்று அவர் இதனைக் குறிக்கிறார். "நோக்கு அல்லாத நோக்கம்" என அதை விரிக்க வேண்டும்; "பார்வை அல்லாத பார்வை" என்பது பொருள். 'நோக்கப் பொருண்மை நோக்கிய நோக்கமும், நோக்கல் நோக்கமும் என இரண்டு வகைப்படும். நோக்கிய நோக்கம் கண்ணால் நோக்குதல்; நோக்கல் நோக்கம் மனத்தால் ஒன்றனை நோக்குதல்' என்று சேனாவரையர் விளக்குகிறார்.

பார்த்தல் என்ற மாத்திரத்தில் கண்ணாலே பார்ப்பதுதான் ஞாபகத்துக்கு வரும். நோக்குதல் அல்லாத நோக்கம் ஒன்று உண்டு என்பதை இந்தத் தொடர் நினைவுறுத்துகிறது. இலக்கியங்களில் நோக்குதல் என்ற சொல்வரும் இடங்களி லெல்லாம் கண்ணாலே பார்த்தல் என்று பொருள்கொண்டு, அங்கே கண் எங்கே என்று தேடக்கூடாது. கருத்தினாலே கருதுவதையும் நோக்கு என்று சொல்வ துண்டு. அந்த நோக்கு, நோக்கு அல்லாத நோக்கு; பார்க்காத பார்வை.

> வான்நோக்கி வாழும் உயிர்எல்லாம் மன்னவன்
> கோல்நோக்கி வாழும் குடி.

என்ற குறளை, இந்தப் பார்க்காத பார்வைக்கு உதாரணமாகக் காட்டியிருக்கிறார்கள் உரைகாரர்கள்.

"உயிர்க ளெல்லாம் கண்களால் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டு வாழும்" என்று அர்த்தம் செய்யலாமா? "வானினால் உண்டாகும் மழையாகிய பயனைக் கருதி, அது கிடைக்கும் என்று நம்பி உயிர்கள்

உலகத்தில் வாழும்" என்று பொருள் கொள்வதுவே முறை. இங்கே 'நோக்கும்' என்ற சொல் இருந்தாலும் அது கண்ணாலே பார்க்கும் பார்வையைக் குறிப்பது அன்று; நோக்கல் நோக்கமாகிய, பார்க்காத பார்வையையே குறிக்கும்.

வினாக்கள்

1. *புறக்கண் எனப்படுவதும் அகக்கண் எனப்படுவதும் எவை?*

2. *இவ்விரு கண்ணுணர்ச்சியைப் பாம்புப்படக் காட்சியைக்கொண்டு விளக்குக.*

3 *அநுமன் தன் கண்ணொடு கடாவியதனால் கொண்ட துன்பத்தினையும் கருத்தொடு கடாவியதனால் அடைந்த நல்லுணர்ச்சியையும்பற்றி எழுதுக.*

4. *'நோக்கல் நோக்கம்'—குறிப்பு வரைக.*

5. *'வான் நோக்கி' என்றுவரும் குறளில் 'நோக்கல் நோக்கு' பயின்று வருவதைக் காட்டுக.*

பயிற்சி

'பகுத்தறிவு' என்பதுபற்றி ஒரு கட்டுரை வரைக.

---

10. கலிங்கத்துப் பரணி

வித்துவான் தேவராஜுலு நாயுடு அவர்கள்

தமிழிலுள்ள தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று பரணி. பரணி என்பது ஆயிரம் யானைகளைப் போரில் வென்ற ஆண் மகனைச் சிறப்புறப் பாடுவது என்பதனை,

"'ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
மானவ னுக்கு வகுப்பது பரணி"

என்றார் இலக்கண விளக்கமுடையார். கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு,. காடுபாடுதல் முதலாகக் களம் வேட்டல் ஈறாக உள்ள உறுப்புக்களைப் பெற்றுத் தலைவனது சிறப்பு, வெற்றி முதலியவைகளைக் கூறுவது இந்நூல். மேலும், "காடு கெழு செல்விக்குப் பரணிநாட் கூழுந் துணங்கையும் கொடுத்து வழிபடுவதோர் வழக்குப்பற்றி" என உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர் வரைந்

திருத்தலாலும் பரணியினைப்பற்றி அறியலாம். பரணி நட்சத்திரத்திற் குரிய தெய்வங்கள் காளியும் இயமனும். அவர்கள் சிறப்பு இங்கு மிகுதியும் அறிவிக்கப் படுதலால் பரணி, என்பர் டாக்டர். உ. வே. சாமிநாத ஐயரவர்கள். பரணியின் இலக்கணத்தை வெண்பாப் பாட்டியல், பன்னிரு பாட்டியல் சிதம்பரப் பாட்டியல் என்ற நூல்களில் பரக்கக் காணலாம். இத்தகைய இலக்கணம் அமைந்த இலக்கியங்கள் இரண்டு. ஒன்று ஒட்டக்கூத்தரால் பாடப்பட்ட தக்கயாகப் பரணி. மற் றொன்று கலிங்கத்துப் பரணி.

இனி, ஒட்டக்கூத்தரே, "தென்தமிழ்த் தெய்வப் பரணி" என்று புகழ்ந்த, புறப்பொருள் பயின்றதொரு நூல்வகையாக உள்ள கலிங்கத்துப் பரணி என்னும் நூல் பண்டைய மக்களின் அறிவின் பெருமை, வீரம், எண்வகை மெய்ப்பாடுகள் இன்ன பிறவும் கொண்டு மக்கள் மனத்தைக் கொள்ளை கொள்ளும் தன்மையது.

இந்நூல், முதற் குலோத்துங்கனையும், அவன்றன் தானைத் தலைவன் கருணாகரன் கலிங்க நாட்டை வெற்றி கொண்டதையும் சிறப்புறப் பாராட்டுகிறது. இந்நூலா சிரியர் சயங்கொண்டார் என்னும் புலவர் கலிங்கத்துப் பரணியைப் பாடுதற்குக் கருணாகரன் எய்திய வெற்றியே காரணம் எனல் மிகையாகாது. இனி, குலோத்துங்கன் வரலாற்றினையும், கலிங்கப்போரின் காரணத்தையும் ஆய்வோம்.

கங்கை கொண்ட சோழன் மகளாகிய அம்மங்கை தேவிக்கும், சாளுக்கிய வேந்தனாகிய இராச இராசனுக் கும் திருக்குமாரனாக முதற் குலோத்துங்கன் அவதரித் தான். இவன் இளமையிலேயே திக்கு விசயம் செய்து, சக்கரக் கோட்டம் ஆண்ட தாராவர்ஷனை வென்றான். இதுவே இவனது கன்னிப் போராகும். பின்னர் இம் மன்னன் கி.பி. 1080-இல் முடி புனைந்தான். அவன் ஆட்சிக் காலத்தில் சோழநாடு,

"உறுபசியு மோவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு"

என்றபடி பசி, பிணி, பகை முதலிய இன்னல்க ளின்றிச் செழிப்புற்றிருந்தது. இங்ஙனம் வாழும் நாளில் "முத்திபெறும் நகரேழில் முக்கியமாம் எழிற்கச்சி" என்று சிறப்புறும் காஞ்சிமாநகருக்கு வந்து, தன் மனைவியராகிய தியாகவல்லி, ஏழிசைவல்லி என்பவர்களுடன் அபயன் அரியணையில் வீற்றிருந்தான். இச்செய்தியை

* "பாரெ லாமுடை யானப யன்கொடைப்
பங்க யக்கர மொப்பெனப் பண்டோர்நாள்
காரெ லாமெழுந் தேழரை நாழிகைக்
காஞ்ச னம்பொழி காஞ்சி தன்கணே.

† தரும டங்கமு கந்துத னம்பொழி
தன்பு யம்பிரி யாச்சயப் பாவையுந்
திரும டந்தையும் போல்பெரும் புண்ணியஞ்
செய்த தேவியர் சேவித் திருக்கவே"

என்னும் இவ்வடிகள் தெரிவிக்கின்றன. அப்போது பல சிற்றரசர்கள் போந்து கப்பம் செலுத்தினர். ஆனால் கலிங்க வேந்தனாகிய அனந்தபன்மன் திறை செலுத்தவில்லை என்று திருமந்திரவோலை தெரிவித்தனன். குலோத்துங்கன் சினந்து, கருணாகரத் தொண்டைமானுக்குக் கலிங்க மலையரணை யிடித்து, அரசனையும் பிடித்து வருமாறு ஆணையிட்டான். கருணாகரன் "இரை வேட்ட பெரும்புலிபோல்" இகன்மேல் சென்று, படைகளுடன் கலிங்கட்புக்கு, பல பகுதிகளில் எரியூட்டி, குடிமக்களின் பொருள்களைச் சூறையாடினன். தீயிட்டெரித்தலை உழபுலவஞ்சி என்றும், ஊரைச் சூறையிடுதலை மழபுலவஞ்சி என்றும் கூறுப.

* அபயனின் கரத்தை யொப்ப ஒரு காலத்தில் மேகங்கள் யாவும் காஞ்சியின் மீது பொன்னைப் பொழிந்தன. காஞ்சனம் – பொன்.

† தரு .மடங்க – கற்பகத் தருவும் தலை கவிழும்படி. தேவியர் – மனைவிமார்.

இதைக் கேட்ட கலிங்க மன்னன் "நான் அபயனுக்கன்றி, அவன் சேனைக்கும் எளியனோ? நமது கலிங்க நாடு வலிய மலையரண், காட்டரண், கடலரண் ஆகிய அரண்களை உடையதென்பதை அச்சேனை அறியாதுபோலும்; நன்று பார்ப்போம்" எனப் பெருஞ் சீற்றத்துடன் நவின்றனன். உடனே கலிங்க மன்னனது அமைச்சனான எங்கராயன், அனந்த பன்மனிடம் "அரசே! குலோதுங்கன் பாண்டியர் ஐவரையும் வென்றதோடு காந்தளூர்ச்சாலை, விழிஞம், அளத்தி முதலிய ஊர்களையும் வென்றுளான். அவன் படைத் தலைவனான் கருணாகரன் திருமாலின் சக்கரம் போன்றவன். திருமாலுடைய சக்கரம் பகைவர்களைத் தவறாது வெல்வது போன்ற ஆற்றலுடையான். நீங்கள் குலோத்துங்கனை எதிர்க்கும்போது என்னை நினைப்பீர்கள்" என்றான்.

பின்னர் இருதிறச் சேனைகளும் போர் தொடங்கின. ஆங்கு அளவிறந்த குறுநில மன்னர்கள் இறந்தனர். தேர்கள் உருளை வேறு, அச்சுவேறு, கொடிஞ்சி வேறாய்ச் சிதறுண்டன. ஆயிரக்கணக்கான களிறுகளும் பரிகளும் வெட்டுண்டன. களிறோடு களிறெதிர்த்தது மலையொடு மலை மோதியதுபோல் இருந்தது. குதிரைகளொடு குதிரைகள் முட்டின. வீரர்கள் மார்பிற்பட்ட அம்புகளைப் பிடுங்கி எதிரிகளின் மீது விட்டனர். இதற்குப் புறத்துறையில் நூழிலாட்டு என்று பெயர். இத்துறையை வள்ளுவர்,

* "கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்"

என அமைத்தார். சில வீரர்கள், கழைக்கூத்தாடிகளின் கயிற்றால் பிணிக்கப்பட்டு நிற்கும் மூங்கில்கள் போல்,

---

* தன் கையிலிருந்த வேலைக் களிற்றின்மீது போக்கி, அதனால் தன் மீது வரும் அக்களிற்றை எறிவதற்கு வேல் வேண்டும் ஒருவன், தன் மெய்யில் தைத்துக் கிடக்கும் அம்பினைக் கண்டு பறித்து நகுவன்.

தம்முடல் முழுதும் வேல்கள் தைக்க, கீழே விழாமல் ஆண்மையோடு நின்றார்கள். இந்நிலையை வெருவரு நிலை என்று கூறுவர். இரு திறத்துப் படைவீரர்களும் வாட்போரில் ஒரே சமயத்தில் மடிந்து வீழ்ந்தனர். இதனை ஒல்காப் புலமைத் தொல்காப்பியனார், "இருவர் தலைவர் தபுதிப் பக்கமும்" என்பர்.

பெண்க ளெல்லாம் கணவன்மாருடைய வாள், தோள், மார்பு முதலிய காணாத அவயவங்களை எங்கே என்று காளியிடம் வேண்டி நின்றனர். ஒரு வீரனது மனைவியின் புலம்பலை,

"பொருதடக்கை வாளெங்கே மணிமார் பெங்கே
போர்முகத்தி லெவர்வரினும் புறங்கொ டாத
பருவயிரத் தோளெங்கே யெங்கே யென்று
பயிரவியைக் கேட்பாளைக் காண்மின்
காண்மின்"

என்னும் அடிகள் அறிவிக்கும். இதனால் பண்டைக் காலப் பெண்டிர் வீரத்தையும், அஞ்சாமையையும் அறியலாமன்றோ!

பூமி சிறுத்ததோ என்று கூறும் பெருமையில் கருணாகரன் சேனை எங்கும் பரவியிருந்தது. அந்த இரத்த வெள்ளத்தில் குடர்கள் எங்கும் மிதக்க லாயின. உடல்கள் அனைத்தையும் கழுகு, நாய், நரி, காகம் முதலியன எங்கும் உலவி உண்டு களித்திருந்தன. இந்த நிலையில், அந்தோ! அனந்த பன்மன் தான் முன்பு மக்கள் முன்னிலையில் சொன்ன மாற்றம் கெட, கருணாகரன் முன்பு விழித்து நில்லாமல் ஓடி ஒளிந்துகொண்டான். அக்கலிங்க வேந்தன் குகை, கீழறை, அடவி ஆகிய எந்த இடங்களில் ஒளித்தான் என்பதை யாவரும் கண்டறிய முடிய வில்லை. இக்கருத்தை,

"புரசை மதமலை யாயி ரங்கொடு
பொருவ மெனவரு மேழ்க லிங்கர்தம்
அரச னுரைசெய்த ஆண்மை யுங்கெட
அமரி லெதிர்விழி யாதொ துங்கியே.

அறியு முழைகளி லோப துங்கிய
தரிய பிலனிடை யோம றைந்தது
செறியு மடவியி லோக ரந்தது
தெரிய வரியதெ ஞவ டங்கவே"

என்னும் அடிகள் தெரிவிக்கின்றன. மேலும், அப்போர்க்களம் பதினெட்டு ஆண்டுகள் நடந்த தேவாசுரப் போரும், பதினெட்டு மாதங்கள் நிகழ்ந்த மாபாரதப் போரும், சிறப்புடன் நடந்தன என்று பலரால் சொல்லப்படும் அந்தப் புகழும் கெடும்படி விளங்கியது. இதனை,

"தேவாசுர ராமாயண மாபாரத முளவென்
ளேவாவுரை யோயும்படி யுளதப்பொரு களமே"

என்பது வலியுறுத்தும்.

எஞ்சி நின்ற கலிங்க வீரர்கள் தோற் ரேடிய பின் யானை, ஒட்டகம், தேர், நிதித்திரள், மகளிர் கூட்டம் முதலிய கலிங்க செல்வ மனைத்தையும் கைப்பற்றிக் கொண்டு, கருணைகரன் கலிங்க வெற்றியைக் குலோத்துங்கனிடம் ஒப்புவித்தான்.

குலோத்துங்கன் கருணைகரனுக்கும், படைவீரர்கட்கும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் பரிசுகளை வழங்கினன். "குன்றி லிட்ட விளக்குப்போல" குலோத்துங்கன் புகழ் முன்னையிலும் பன்மடங்கு கருணைகரனல் சிறந்து விளங்கியது. குலோத்துங்கன் பெருமிதத்துக்குக் காரணமான கருணைகரனைப்பற்றிச் சிறிது கூறுவது நன்றியுடைமையாகும். கருணைகரன் வண்டை, தொண்டை என்னும் ஊர்களை ஆட்சி புரிந்த சிற்றரச னவான். இவன் புகழைக் "கலிங்க மெறிந்த கருணைகரன்" என்றும், "உலகு புகழ்க் கருணைகரன்" என்றும் கலிங்கத்துப் பரணி பாராட்டுகிறது. விக்கிரம சோழன் உலாவில் புகழப்படுபவனும் இவனே ஆவான். எனவே, குலோத்துங்கன் மகனை விக்கிரம சோழன் காலத்திலும் இவன் இருந்தான் என்று தெரிகிறது. தொண்டை

முண்டலச் சதகம், சிலை யெழுபது என்னும் நூல்களில் இவன் புகழை நன்கு அறியலாம்.

வினாக்கள்

1. 'பரணி' என்பது என்ன?

2. 'பரணி' என்னும் பெயர்க் காரணம்பற்றி நச்சினார்க்கினியரும் உ. வே. சாமிநாத ஐயரவர்களும் கூறுவது என்ன?

3. சயங்கொண்டார் இந்நூலைப் பாடியமைக்குக் காரணம் என்ன?

4. முதற் குலோத்துங்கன் காஞ்சியின்கண் திருவோலக்க மிருந்த சிறப்பினைப் புலப்படுத்துக.

5. 'இரை வேட்ட பெரும் புலி' எனக் குறிக்கப்பட்டவன் யாவன்?

6. கருணாகரன் படையெடுத்த செய்தி கேட்டுச் சென்ற அனந்தபன்மனுக்கு எங்கராயன் உரைத்தன யாவை?

7. கலிங்கத்துப் போர்க்களக் காட்சியினை இங்குக் கூறமாற்றான் வரைக.

8. போர்க்களத்தின்கண் பேய்களின் நிலையினைத் தெரியச் சொல்லுக.

9. கலிங்க வேந்தன் உற்ற நிலை யாது?

10. கருணாகரனின் சிறப்பினைத் தெரிவிக்க.

11. குறிப்பு வரைக: உழபுல வஞ்சி, மழபுல வஞ்சி, தழிஞ்சி, நெருவரு நிலை.

---

11. சிலப்பதிகாரம்

வஞ்சினமாலை : நாடகம்*

காரைக் கவியரசு அரங்க. வேங்கடாசலம் பிள்ளை யவர்கள்

[*கண்ணகி உடைத்த சிலம்பின் பரல் தெறிக்கவும், தன் செங்கோல் வளைந்தது கண்டு பதைத்து வீழ்ந்து உயிர் விட்டனன் பாண்டியன் நெடுஞ்செழியன். அவன் மனையாள் கோப்பெருந்தேவி கணவற்கு உற்றது நோக்கிக் கலங்கிச் சாய்ந்தாள். கண்ணகி அவளைப் பார்த்துப் பேசுகின்றனள்.*]

(இடம்:—*அரண்மனை*

காலம்:—*பகல்*

உரியோர்:—*கண்ணகி, கோப்பெருந்தேவி, தோழி*)

---

*இவ்வுரையாடல் 'திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரின்' வெளியீடாகிய 'சிலப்பதிகார நாடகம்' என்ற நூலிலிருந்து கொள்ளப்பட்டது.

கண்ணகி.—பெருந்தேவியே! நானோ கணவரை யிழந்த தீவினையேன். யாதும் தெரியாத நிலையில் உள்ளவள். அம்மணி! முற்பகல் பிறருக்குக் கேடு செய் தான் ஒருவன் தான் செய்த கேட்டின் பயனைப் பிற்பகலே அடைவான் என்பர். தேவியே! அடியேன் பிறந்த புகார் நகரத்தின் கற்புடைப் பெண்டிர் பெருமையினை உரைக்கின்றேன், கேட்பாயாக. எங்கள் நாட்டு வணிக குலத்தாராகிய ஓர் இளைஞனும் கன்னியும், ஒரு தலத்து ஆண்டவன் கோயிலுள், பெரியார் ஒருவர் கூறியபடி, ஒரு பகலில், வன்னிமரம், மடைப் பள்ளிகள் உள்ள ஓர் இடத்தே மணம் செய்துகொண்டவர்கள் இந்நகரத் திற்கு வந்திருந்தார்கள். அவர்களைக் கண்டு சிலர் பழித் தார்கள். அந்த மணத்தினைத் தாங்கள் உண்மையென ஒப்புதற்கு, அம்மரம், மடைப்பள்ளிகளை இங்கு வர வழைத்துக் காட்டுக என்றனர். அக்கற்புக்கரசி, ஆண்ட வன் அருள் பெற்று, இங்குள்ள கோயிலிற் காட்டினள். இது யாவரும் அறிந்த தொன்றன்றோ? இக்கற்புக் கரசி எமது புகார் நகரத்தே பிறந்த நங்கை!

தேவியின் தோழி:—ஓ! தெய்வத் திருவருள் பெற்ற கற்பரசி!

கண்ணகி:—பெருந்தேவியே! காவிரியில் ஒரு பெண் தான் விளையாடற்கு அமைத்த ஒரு மணற் பாவை யினை ஏனைத் தோழியர் இப்பாவையே நின் கணவன் எனக் கூறாநிற்க, அது கேட்டு நாணி நின்றாள்! ஏனை மகளிரொடும் வீடு செல்லாளாய், காவிரித் திரை நீர் இதனை அழித்துவிடுமே என்று அஞ்சிக் காத்திருந் தாள்! அத்தகைய கற்பின் கொழுந்தும் எம் நகரத்தினள் ஆவள்!

தேவியின் தோழி:—ஓ! உள்ளத்து உயர்வு விளங் கும் கற்பரசி!

கண்ணகி:—எங்கள் பேரரசன் கரிகாற் சோழன் மகள் ஆதிமந்தி யென்னும் அரசிளங் குமரி தன் காதலன் வஞ்சி மன்னன் 'ஆட்டன் அத்தி' என்பானைக்

கூடிக் காவிரி யாடுங்கால், காவிரிப் புனல் கணவனைக் கவர்ந்து சென்றிட்டது. அவள் அக்காவிரி வழியே விடாது சென்று, கடற்கரையில் நின்று, இரங்கித் தன் கணவனைக் கூவி அழைத்திட, கடற்றெய்வம் அக்காதலனைக் கொணர்ந்து காட்டிற்று! அந்தக் கற்பிற் கரசியும் எமது நகரத்தினள் ஆவள்!

தேவியின் தோழி:—கற்பின் பெருமையைக் காட்டும் பொற்பரசி.

கண்ணகி:—அம்மணி! இன்னும் கேளாய்! தன் கணவன் கலன் ஏறிக் கடல் கடந்து சென்றுங்க, அவன் வரும்வரை, அவனையே எதிர்நோக்கி நிற்க எண்ணிய ஒரு கற்புக் கரசி, தனக்கு வரும் இடையூறுகளை அகற்றிக் கொள்ள எண்ணிக், கல்லுருவம் வேண்டிப் பெற்றுக் காத்திருந்து, கணவன் வரக்கண்ட நாளில், அக்கல்லுருவம் நீங்கப்பெற்றுக், கணவனை யடைந்த கற்பின் செல்வி யொருத்தியும், எங்கள் நகரத்தினள் ஆவள்!

தேவியின் தோழி:—என்ன கற்பு! துன்ப இன்பங்கள்!

கண்ணகி:—தன் மாற்ருள் குழந்தையும் தன் குழந்தையும் ஓரிடத்தே விளையாடுங்காலே, அருகிலிருந்த ஒரு கிணற்றில் மாற்ருள் குழந்தை விழுந்திட, அதுபற்றி உலகத்தார் ஐயுற்றுக் கூறும் பழிக்கஞ்சித், தன் குழந்தையையும் அதனுள் வீழ்த்திய தூய உள்ளத்தினளாகிய கற்புக் கரசி ஒருத்தி, திருவருளால் அவ்விரு குழந்தைகளையும் உயிருடன் எடுத்துக்கொண்டனள்! இவள் பிறந்ததும் எமது புகாரே!

தேவியின் தோழி:—பழிக்கு அஞ்சி ஒழுகி, அழியாப் புகழ் உற்ற தெய்வக் கற்பினள்!

கண்ணகி:—தேவியே, அயலான் ஒருவன் தன்னை உற்று 'நோக்கும் தீய பார்வையினை அறிந்து, அத்தீய எண்ணம் அழிந்துபோகத் தன் முகத்தினைக் குரங்கின் முகமாக மாற்றிக்கொண்டு நின்று, தன் கணவன் மீண்ட

காலை, அக்குரங்கு முகத்தினை மாற்றி இயற்கை உருவம் கொண்ட தெய்வக் கற்பினள் ஒருத்தியும் எம் நகரத்தினள் ஆவள்!

தேவியின் தோழி:— அந்தோ! கற்பினை நிலைநாட்டும் கடமையின் பாடு! அம்மா! அதனால் பெரும் தெய்வ மேம்பாடுகள்!

கண்ணகி:— தேவியே! இன்னு மொன்று! இளம் பெண் இருவர் விளையாடும்போது, ஒருத்தி பிற்காலத்தே வருவது அறியாளாய், எனக்கு ஒரு மகளும் உனக்கு ஒரு மகனும் பிறப்பின், அவனே என் மகள் கொழுநன் ஆவன் என்று உரைத்திட்டாள். அவ்வாறே அவர்களுக்குப் பின்னாளில் மகளும் மகனும் பிறந்தனர். ஆனால், அந்தோ! அம்மகன் உடற்குறையால் பிறர் கூடையில் சுமந்து செல்லும் தீவினையாளன் ஆயினன்! இந்நிலையில் அம் மகளின் தாய் தன் கணவனுக்குப் பண்டு நிகழ்ந்திருக்கும் தங்கள் வாய்மொழிகளைக் கூறி இரங்குங்கால், அப்போது அதனைப் புறத்தே கேட்டிருந்த அம்மகள், மண அணிச் சிறப்புடன் தோன்றித், தான் தன் தாயின் வாய்மொழியினைப் போற்ற உடன்பட்டமை கூறி அவனையே மணந்து அவனைத் தலையில் சுமந்து செல்லும் பேரருள் பெருங்கற்புடையாளாகிக் கற்புலகம் போற்றும் சிறப்பினை யெய்தி நின்றாள். அவள் பிறந்ததும் எமது புகார் நகரமே யாகும்.

தேவியரே! இத்தகைய கற்புக்கரசியர் தோன்றிய அந்தப் பெரும்பதியாகிய புகார் நகரில் தோன்றிய நானும் ஒரு கற்புடைய மகளே யாயின், அரசுடன் இம்மதுரை மாநகரினை அழித்திடுவேன் காண்பாயாக! தேவியே!

ஓ! இஃதென்னை! தேவியும் இறந்தனர் போலும். (வெளிச் செல்லல்) (நகரில் மும்முறை வலம் வரல்).

பயிற்சி

புகார் நகரத்துக் கற்புடை நங்கையர் வரலாற்றினை வரைக.

'சிலப்பதிகாரம்' என்பதுபற்றியும் ஒரு கட்டுரை வரைக.

அருஞ்சொல் அகராதி

அ

அடவி—காடு
அணங்கு—பெண்
அணித்து—அண்மையி லுள்ளது
அந்தாதி—முற்செய்யுள் இறுதியும் பிற்செய்யுள் முதலும் ஒன்று படப் பாடுவது
அபயன்—சூரன், சோழன்
அமர்—போர்
அமிழ்தம்—அமிருதம், அமுதம்
அயிர்த்து—சந்தேகித்து, ஐயுற்று
அருகுதல்—குறைதல்
ஆக்கம்—செல்வம்
ஆக்கை—யாக்கை, உடம்பு

இ

இகல்—போர்
இடர்ப்படுதல்—துன்புறுதல்
ஈழம்—இலங்கை
ஈறு—முடிவு

உ

உலைத்த—வருத்திய
உவத்தல்—மகிழ்தல்
உவந்த—மகிழ்ந்த
உழத்தல்—வருந்துதல்
உழுதல்—கிண்டுதல்
உறுபசி—மிகுபசி
ஊர்தி—வாகனம்
ஊறு—பரிசம்

எ

எழில்—அழகு
எதிலார்—அன்னியர்
எனை—மற்றது

ஒ

ஒழுக்கு—ஒழுக்கம்
ஒல்கா—ஒல்காத, தளராத
ஒவா—ஓவாத, ஒழியாத

க

கங்குல்—இடையாமம்
கடப்பாடு—கடமை
கடாவுதல்—வினுதல்
கடை—வாயில்
கமலம்—தாமரை
கரத்தல்—மறைத்தல்
கலுழன்—கருடன்
கவறு—சூதாடுகருவி, சூது
களம்—போர்க்களம்
களிறு—ஆண் யானை
கன்னிப்போர்—முதற்போர்
காஞ்சனம்—பொன்
காண்டல்—காணுதல், பார்த்தல்
கார்—மேகம்
காலன்—இயமன்
கிழி—கிழிபட்ட துகில்
குன்றம்—சிறு மலை
கூர்தல்—மிகுதல்
கேசரி—சிங்கம்
கொழுநன்—கணவன்
கொற்றம்—வெற்றி
கோடு—யானை பன்றிகளின் தந்தம்
கோடுதல்—வளைதல்

ச

சங்கரன்—சிவன்
சயப்பாவை—வீர மகள், வெற்றித் தலைவி
சான்று—சாட்சி
சிற்றம்—பெருஞ்சினம்
செறிதல்—நெருங்குதல்
செய்த்து—செய்மையில் உள்ளது
சேறல்—செல்லுகை

ஞ

ஞாயிறு—சூரியன்

த

தளி—கோயில்
திரு—இலக்குமி, செல்வம்
திருமந்திரவோலை—அரச அலுவலன்
திறை—கப்பம்
தீனர்—வறியர், ஏழைகள்
துணங்கை—ஒரு கூத்து வகை
துயில்—தூக்கம்
தையல்—பெண்
தோடு—பூவிதழ்

ந

நையல்—மெலிதல்

ப

பங்கயம்—தாமரை
பரி—குதிரை
பன்னரிய—பன்ன அரிய—சொல்ல முடியாத
பாயிரம்—முகவுரை
பாலிக்குமோ—கிடைக்குமோ
பாவை—பெண்
பிரபந்தம்—நூல்
பிராட்டி—தலைவி
பிலம்—பாதாளம்
பிழம்பு—திரட்சி
பீடு—பெருமை
புந்தி—புத்தி, அறிவு
புரைசை — புரசை — புரோசை — யானைக் கழுத்திடு கயிறு
புலன்—சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐந்தும்
புலையன்—இழிஞன்
புனல்—நீர், ஆறு
பெம்மான்—கடவுள்
பெற்றி—தன்மை
பொதி—தொகுதி, மூட்டை
பொருப்பு—மலை
பொலிதல்—விளங்குதல்

ம

மடந்தை—பெண்
மடைப்பள்ளி—கோயில் முதலியவற்றின் அடுக்களை
மதமலை—யானை
மறை—வேதம்
மா—விலங்கு
மாக்கள்—பகுத்தறிவிலார்
மானவன்—மனிதன், பெருமையுடையோன்
மானும்—ஒக்கும்
முழை—குகை

வ

வயினம்—பறவை
வரை—மலை, எல்லை
வளி—காற்று
வாசவன்—இந்திரன்
வாரணம்—யானை
வான்—ஆகாயம்
விசும்பு—வானம்
வியாக்கியானம்—பேருரை
விலங்கு—மிருகம்
விழுப்பம்—சிறப்பு
விழுமம்—சிறப்பு
விளக்கம்—விளக்கு
வெம்மை—வெப்பு, கொடுமை
வெள்ளி மலை—இமய மலை
வேட்டல்—விரும்புதல்
வேய்ங்குழல்—புல்லாங்குழல்
வேனல்—வேனில்